


ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம் :
5, வெங்கடேச அக்ரகாரம், மயிலாப்பூர், மதராஸ்.

வருஷ சந்தா { உள்நாடு ரூ. 3
வெளிநாடு ரூ. 5

| மாலை 6 | வெள்ளி 17-10-41 விஷு ஆ ஐப்பசி மீ 1௨ | முத்து 4 |
|---|---|---|

# பொருள் அடக்கம்


| விஷயம் | | | பக்கம் |
|---|---|---|---|
| அகப்பட்டுக் கொண்டாரையா! | ... | ரவிகன் | 170 |
| சர்க்கரைத் தொழில் | ... | | 174 |
| அமுதமும் அழகும் | ... | பேரன் | 177 |
| உபோத்காதம் | | ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ.,பி.எல். | 178 |
| பரம்பரையாழ்வாரும் பாட்டாழ்வாரும் | ... | ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ. | 180 |
| மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு | ... | ஜி. பாலசுப்ரமணியம் | 183 |
| நட்பு | ... | க. ரா. கிருஷ்ணஸாமி அய்யங்கார் | 184 |
| குற்றவாளி யார்? | ... | த. கா. சுப்ரமணியன் | 187 |
| புலி வேட்டை | ... | வி. ஸத்யவதி | 191 |
| ஆராதனை | ... | ஆ. வே. ஜெயராமன் | 194 |
| வெல்லுவது யார்? மனிதனு, பூச்சியா? | ... | ரா. சந்திரசூடன், பி. எஸ்ஸி. | 197 |
| விஞ்ஞானமும் இயற்கையின் ஒழுங்கும் | ... | டி. பி. நவநீதகிருஷ்ணன் எம்.ஏ. | 201 |
| ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் | ... | வே. ரா. சுந்தரராமன், எம். ஏ. | 206 |
| புதுமாதிரியான ஆயுதம் | ... | பெ. நா. அப்புஸ்வாமி, பி.ஏ., பி.எல். | 210 |
| உதிர்ந்த மணிகள் | ... | | 214 |
| புத்தக விமர்சனம் | ... | | 216 |


"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

# அகப்பட்டுக் கொண்டாரையா!

[கரஸின்]

என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் பிரயத்தினம் பயன் படாமல் போன விவரங்களை ஏற்கனவே "பாரதமணி" நேயர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன். என் மாமா எனக்குப் படிப்புக்குப் பிராப்தமில்லை யென்றே தீர்மானித்துவிட்டார். அதனாலேயே எனக்குப் பள்ளிக்கூடத்தில் சேர அவா அதிகரித்தது. எங்கள் தெருவிலுள்ள சிறுவர்கள் பெரும்பாலாரும் பெரிய பள்ளிக்கூடத்திலேயே படித்துக்கொண்டிருந்தார்கள். அதன் மஹிமையையும், உபாத்தியாயர்களின் கல்வியையும், அதில் விளையாடுவதற்குள்ள வசதிகளையும் அவர்கள் அடிக்கடி வர்ணிப்பார்கள். நான் பள்ளிக்கூடம் போகாமல் வீட்டி லுட்கார்ந்திருப்பது ஈனமென்று அவர்கள் எண்ணினார்கள் என்பது என் மனதில் பட எனக்கும் அப்படியே தோன்ற ஆரம்பித்தது. நான் பெரிய பள்ளிக்கூடம் போவேன் என்று பாட்டியிடம் சொன்னேன். 'வெகு தூரமாச்சே' என்றாள். 'அத்தனைபேர் போராளோ நம்ம தெருவிலிருந்து, எனக்கென்ன, 2 மயில் வேணுமானாலும் நடப்பேன்,' என்று கம்பீரமாய்ச் சொன்னேன். 'மத்தியானத்துக் கென்ன பண்ணுவாய்' என்றாள். 'சாதம் பிசைந்து கொடு' என்றேன். ஒரு புது "டிபன்பாக்ஸு" வாங்கித் தயிரும் சோறு பிசைந்து கொடுத்து, காலில் கடிக்காத வெள்ளாட்டுத் தோல் போட்ட புதுச் செருப்பும், ஒரு சிறு குடையும் சமர்ப்பித்து மாமாவை 'குழந்தையை உங்க ஹெட்மாஸ்டரிடம் சொல்லி நல்ல கிளாஸில் சேர்த்துவா' என்று உத்திரவிட்டாள். எங்கள் பாட்டி சாமர்த்தியசாலி. மாமா மெட்ரிகுலேஷனுக்கு முக்கிய விரோதியானாலும் பெரிய பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர் தனக்கு ரொம்ப வேண்டியவரென்றும் தன்னிடத்தில் ஒரு தனியான மதிப்பு வைத்திருந்தார் என்றும் அவர் அடிக்கடி சொல்லுவதைக் கேட்டிருந்தவளாதலால், இந்த மாதிரிச் சொன்னால் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும் விஷயத்தில் தன் அபிப்பிராயத்தைக் கேட்கவில்லை என்ற கோபம் ஒருவாறு மாறும் என்று ஊகித்தாள் போலும். உடனே, சரி என்று 1703 செ. மல் ஒன்றெடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, உயர்ந்த ஷர்ட்டும் ஜரிகை வேஷ்டியும் அணிந்து என்னைப் பள்ளிக்கூடம் அழைத்துச் சென்றார்.

அந்தப் பள்ளிக்கூடத்தை வெளியிலிருந்தபடி இரண்டொரு தரம் அதற்கு முன் பார்த்திருந்தேன். அதுதான் முதல் தரம் உள்ளே சென்றது. ஜன சஞ்சாரம் அதிகமான இரண்டு பெரிய வீதிகள் சேரும் இடத்திலிருந்தாலும், பெரிய 'கேட்டை'க் கடந்தவுடன் வேறு உலகத்தில் நுழைந்தாப்போல் நிசப்தமான அமைதி காணப்பட்டது. விஸ்தாரமான விளையாட்டுப் பிரதேசத்தால் சூழப்பட்ட பெரிய கட்டடத்தின் மூன்றாம் மாடியிலுள்ள சாளரப் பொந்துகளில் கூடு கட்டியிருக்கும் பச்சைக் கிளிகள் பந்தி பந்தியாய்ப் பறந்து வட்டமிட்டுக் கூச்சலிடும் அரவமும், இரு பகுதியாக கட்டடத்தைச் சுற்றி நாலா பக்கமும் வளர்ந்தோங்கிய பாக்கு மரக் கமுகுகள் வழியே தென்றல் வீசுவதால் உண்டான ஒலியும் தவிர வேறு சத்தம் காதில் விழவில்லை. வாசற்புறத்தில் மதில் சுவருக் கடுத்தாப்போல் ஒரு பத்தி பன்னீர் மரங்கள் நறுமணம் வீசின. பின்புறத்தில் ஆகாயத்தை அளாவிய வாதாமரங்கள் நிழலைப் பரப்பி கீழே ஏராளமாய் உதிர்ந்து கிடக்கும் தங்கள் பட்டுப்போன்ற சருகுகளால் சிறிய குழந்தைகளின் மெல்லிய கால்களுக்கு ரத்தின கம்பளம் விரித்தாற்போல் செய்தன. விளையாட்டு பூமியில் அங்கங்கே குதிரை, ஏணி, சறுக்கு மரம், 'பாரலல்பார்', 'ஹரிசாண்டல் பார்' முதலான விளையாட்டுக் கருவிகள் காணப்பட்டன. பாக்கும், தென்னையும், மாவும் அடர்ந்த ஒருபக்கத்தில் சென்

னீர் சலசலவென்று ஓடும் ஒருசிறு கண்ணி வளைந்துவளைந்து சென்றது.

இதையெல்லாம் காளடைவில் தெரிந்து கொண்டேன். அன்றைக் குள்ளே நுழைந்ததும்நான் கண்ட காக்ஷி இதெல்லாவற்றையும்விட விநோதமாயும் ஆச்சரியமாயும் இருந்தது. சுமார் 10 அடி நீளம் உள்ள இரண்டு கம்புகளைக் காலில் ஊன்றி ராக்ஷஸர்கள்போல் ஒருவரையொருவர் எட்டி எட்டி அடிவைத்துத் தூரத்திக் கீழே தள்ளும் போர் வீரர்களைக் கண்டேன். அந்தக் கம்புகளில் அவர்கள் எப்படி நின்றார்கள் என்றும், கீழே விழாமல் எப்படி நடந்தார்கள் என்றும் நான் வியந்து கொண்டிருக்கையில் அவர்களில் இரண்டொருவர் கீழே குதித்துக் கம்புகளைக் கையில் எடுத்துச் சென்றார்கள். ராக்ஷஸர்களல்ல, பள்ளிக்கூடத்துப் பையன்கள் தான் என்ற எண்ணம் வந்தது. அந்தக்ஷணமே இந்தக் கம்பு விளையாட்டில் நானும் வெகு சீக்கிரத்தில் தேர்ச்சி பெறுவேன் என்ற சபதம் மனதுக்குள் பண்ணிக் கொண்டேன். (இப்பேர்ப்பட்ட சபதங்கள் அடுத்த சில வருஷங்களில் நான் பண்ணின பல. பல்வேறு ஊக்கங்கள் அப்படிச்செய்யக் காரணம். மிருதங்கத்தில் நாராயணசாமி அப்பாவுக்கு மேலாகவும், கவிதையில் வால்மீகியைத் தூக்கி அடிக்கவும், வலிமையில் 'ஸாண்டோ' நம்மிடம் பிச்சை யெடுக்க வேண்டுமென்றும், ராஜ்ய தந்திரத்திலும், எதிரியை முறியடித்து அவர்கள் ராஜ்யத்தைப் பிடுங்குவதிலும் 'நப்போலியன்' கூட இவனுக்கு நிகரில்லை என்று உலகத்தார் ஒத்துச் சொல்ல வேண்டுமென்றும் பலவிதமான தீவிரநிச்சயங்கள் ஒவ்வொரு சமயம் செய்ததுண்டு. இதொன்றும் நடைபெறவில்லை என்பது நான் சொல்லவும் வேண்டுமோ? சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். தவிர, ஊக்கம் எவ்வளவு சீக்கிரம் ஏற்படுமோ அவ்வளவு சீக்கிரம் மாறி விடும். மூன்றுநாள் சேர்ந்தாப்போல் ஒரு உறுதி யிருந்ததே யில்லை. நாளைக்கும் அதே தினுசுதான். எந்த நிமிஷத்தில் என் சரித்திரத்தை எழுதி அழியாப் புகழ் பெறவேணும் என்ற அவா நீங்கி 'சர்க்கஸ்' குதிரை பழக்கிப்பதக்கங்கள் செரிந்தஉடுப்பணிந்து கையில் சவுக்கேந்தி திரள் திரளாய் வந்து பார்த்துக் கரகோஷம் செய்யும் அன்பர்கள் முன் பிரகாசிக்க வேண்டும் என்ற பேரவா ஜனிக்குமோ சொல்ல முடியாது. அந்த இயக்கம் ஏற்படாத வரையில் என்னைப் படிப்பவர் பாக்கியம்!)

கட்டடத்தின் விஸ்தாரமான படிகளை ஏறினதும் பள்ளிக்கூடம் 'ப' வடிவமாக இருந்ததும் நடுவில் வரிசை வரிசையாய் நிற்கும் 'குரோட்டன்' களும், பூச் செடிகளும் அவை நடுவே வெயிலில் ஆயிரம் விலையுயர்ந்த வைரங்கள் டால் வீசுவது போல் பிரகாசிக்கும் நீர்விழ்ச்சியும் என் மனதைக் கவர்ந்தன. என்னை 'விராண்டா' விலிருந்த ஒரு முக்காலியில் உட்காரச் சொல்லி ஹெட்மாஸ்டரைப்பார்த்து வருவதாக என் மாமா உள்ளே சென்றார். ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் திரும்பிவந்து, பிரைமெரி ஸ்கூல்' ஹெட்மாஸ்டரைப் பார்க்கச் சொன்னதாகச் சொல்லி, என்னையும் அழைத்துக்கொண்டு அவரைத் தேடிச் சென்றார். இவருடைய ராஜ்யம் 'ப'வுக்குப் பின்புறமுள்ள விராண்டாக்களும், கிழிறக்கதிலுள்ள கீத்துச்சார்புப் போட்ட தாழ்வாரங்களு மென்று தெரியவந்தது. அங்கிருந்த 5, 6 வகுப்புகளில் ஹெட்மாஸ்டர் வகுப்பு எது என்று கண்டு பிடிக்க ஒரு சிரமமுமில்லை. அவருடையதே பெரிய வகுப்பு; உபாத்தியாயர்களுக்குள்ளேயும் அவரே பெரியவர். ஆகாரத்தில் அல்ல, இறைச்சலில். மூர்த்தி சிறிதாயிருந்தாலும் கீர்த்தி பெரிது. அவர் மேஜையில் இருந்த பிரம்பு செங்கோல் போல் விளங்கிற்று. ஊசிவெடி வெடித்தாற்போல் பேச்சு. எங்களைக் கண்டதும் 'புதுப்பையனு? எந்தகிளாஸில் சேர்க்கவேணும்?' என்றார். 'நாலாவதில்' என்று என் மாமா வணக்கமாகச்சொன்னார். அது கேட்டதும், மனக் கணக்குகளும், இங்கிலீஷ் கேள்விகளும், தமிழ் டிக்டேஷனும், 10 நிமிஷம் வெடிகுண்டுகள்போல் என்னைத் தாக்கின. ஒருவாறு சமாளித்தேன். "கணக்கில் கொஞ்சம் போராது. இருந்தாலும் ஒரு மாதம் பார்ப்போம். சம்பளத்தைக் கட்டுங்கள். கீழ் கிளாசுக்குப்

போகவேண்டி யிருந்தால் அடுத்தமாதம் குறைத்துக் கட்டலாம்' என்றார். இதைக் கேட்டதும் என் மாமாவுக்குக் கொஞ்சம் உற்சாகம் குன்றிற்று. என் செய்வது? ஜாக்கிரதையாய் சாயங்தரம் தெருப் பையன்களோடு சேர்ந்து வீட்டுக்கு வரும் படி என்னைச்சொல்லி, பணத்தைக் கட்டி விட்டு வீட்டிற்குப் போய்விட்டார்.

அன்று முழுவதும் எங்கேயோ இடம் தடுமாறி வந்தவன் போல் சற்று பிரமி திருந்தேன். என் மாமா ஆங்கிலமும் கணக்குந்தான் படிப்பு என்ற உறுதியை கைக்கொண்டவரானதால் அவை தவிர வேறு விஷயங்களில் எனக்குப் பரிச்சய மேயில்லை. பள்ளிக்கூடத்திலோ பூகோ ளம் என்றும், தேச சரித்திரம் என்றும், சித்திரம் போடுவதென்றும், படம் போடுவதென்றும், தமிழிலக்கண மென்றும் (ஸையன்ஸ் இன்னும் ஏற்படவில்லை) என் னென்னவோ பாடங்கள் வெள்ளத்திற்கு மேல் வெள்ளம் வந்தாற் போல வந்து கொண்டிருந்தன. அவைகளின் பேரே கேள்விப்படாத நான் உபாத்தியாயர் கேட்ட கேள்விக்கு என்னமாய் பதில் சொல்ல முடியும்? ஆனால் பாக்கிப் பையன்கள் என்னை மக்கென்று எண்ணி விடுவார்களோ என்ற பயத்தினால் தைரிய மாக நான் அந்தப் பாடங்களெல்லாம் அது வரையில் வீட்டில் படித்ததில்லை என்றும், அன்றையதினமே புதுப் புத்தகங்கள் வாங்கி ஒரு மாதத்திற்குள் படித்து மற்ற வர்களுடன் சேர்ந்து விடுவேன் என்றும் சொன்னதில் ஹெட்மாஸ்டர் அரைச்சிரிப் புடன் 'சரி பார்ப்போம்,' என்றார். அந்த வகுப்பிற்குறிய வயதுக்குக் குறைவாக நான் இருந்தபடியால் என் துணிச்சலைக் கண்டு நான் அப்படியே செய்தாலும் செய்யலாம் என்று எண்ணினர் போலும்.

இதிப்படியிருக்க சாயங்தரம் பள்ளிக் கூடம் விடும் மணியடித்தது. அது எதற் காக அடித்தது என்பது தெரியாததால் நான் சும்மா உட்கார்ந்திருந்தேன். மற்றப் பையன்கள் சரேலென்று புத்தகங்களை எடுத்துக் கொண்டு விளையாட்டு பூமியை நோக்கி ஓடினர்கள். விளையாட்டில் அச்ச மயம் எனக்கு புத்திபோகாததால் வீட்டுக்குப் போகலா மென்று புத்தகங் களை எடுத்துக் கொண்டு கிளம்பினேன். (அன்றைக்கேற்பட்ட படபடப்பில் கை யில் கொண்டு வந்த மத்தியானச் சோறு சாப்பிடாததும் தவிர, டீபன்பாக்ஸையும் மறந்து பள்ளிக்கூடத்திலேயே வைத்து விட்டுப் போய் விட்டேன்) கட்டடம் பெரிதாயும், அனேக அறைகள் உள்ள தாகவும் இருந்ததால், நெருக் கென்று வெளியில் வரத்தரியாமல், யாரோடு வீட்டுக்குப் போகலா மென்று யோசித் துக்கொண்டிருக்கையில் ஒரு பையன் ஓடி வந்து, 'அடே, டிரில் மாஸ்டர் கூப்பி டுகிரார், வா' வென்றழைத்துக் கையைப் பிடித்துக் கரகரவென்றிழுத்து விளையாட் டுப் பூமியிற் கொண்டு சேர்த்தான்.

அங்கே ஒரு அபூர்வக்காட்சி கண்டேன். என் வகுப்புப் பையன்கள் பந்தி பந்தி யாய் நின்று கையில் 6 அடி நீளமுள்ள மூங்கிற் கொம்புகளை வைத்துக் கொண்டு துப்பாக்கி பழகுவது போல் நடித்தார்கள். அவர்கள் முன்னே சுமார் 30 வயதுள்ள ஒருவர் காலோடு காலாய் ஒட்டின கால் சட்டையும், பூட்சும், ஷர்ட்டும் அணிந்து, பிரம்புங் கையுமாய் 'ஷோல்டர்ர்ர்ரூம்ஸ்,' 'ஈஸி', 'ரைட்டெபௌட்டர்ன்,' 'மார்ச்ச்' என்ற பல மந்திரங்களை குண்டுபோடுவது போல் பையன்கள் காது செவிடுபடக் கத்தி பிரம்பால் அவர்கள் செய்ய வேண்டிய காரியங்களைச் சுட்டிக் காட்டிக் கொண் டிருந்தார். என்னைக் கண்டதும், "ஓகோ, ஓடவா பார்த்தாய், பயலே, உன் போக் கிரித்தனமெல்லாம் எனக்குத் தெரியும். சுட்டுக் கொட்டைபரப்பிவிடுவேன், கபர் தார் !" என்று கர்ஜித்துப் பல்லை நற நற வென்று கடித்து, வாயை யாளிபோல் அகட்டி மேலுதடும் கீழுதடும் சுருள, இரு கன்னத்துக்கில் களும் சோடா புட்டியில் கோலிக்குண்டு ஓடுவதுபோல் ஏறி யேறி யிறங்க, கோர ரூபியாய் மாறி, அந்த 6 அடித் தடிக்கொம்புகளில் ஒன் றை எடுத்து என்னைக் குத்தித் தள் ளுவது போலப் பாய்ந்து என் கையில் அழுத்தி சின்டைப் பிடித் திழுத்து பாக்கிப் பையன்களோடு நிறுத்தி 'க்விக் மார்ச்' என்று இடி முழங்கினர். ஒன்

றும் புரியாமல் தடுமாறி, அரைப்பிரக் கிளையுடன் பாக்கிப்பேர் செய்வதைப் பார்த்துக்கொண்டு ஏதோ தெரிந்த வரையில் அவர்கள் செய்வதுபோல் செய்தேன். அனேகாயிர வருஷங்கள் இந்தயமயாதனை யனுபவித்ததுபோல் தோன்றிற்று. திடீரென்று "டௌன் ஆர்ம்ஸ், டிஸ்பெர்ஸ்" என்ற உத்திர வேற்பட்டது. எல்லாப் பையன்களும் கொம்புகளைக் கீழேபோட்டு ஓட்டம் பிடித்தார்கள். நான் கீழே போடப் பயந்து நின்றேன். "என்னடா, பெருந்திருடனு யிருக்கிறாய்! இப்படியெல்லாம் என்னை ஏமாற்ற முடியாது. உன் தந்திரமெல்லாம் பலிக்காது. டிரில் கிளாசுக்கு வராமல் ஆட்டம் போட்டால் உன்னைத் தின்று விடுவேன்" என்று, அப்பொழுதே என்னை வாயில் போட்டுக் கொள்ளுபவர் போல் அவர் வாயைத் திறக்கக் கண்டு கழியைக் கீழே போட்டு ஓட்டம் பிடித்தேன். ஓடினாலும், 'இனி நமக்கு கதிமோக்ஷம் கிடையாது. 4-ஆம் வகுப்பு ஈரோட்டாய் இருந்தாலும் டிரில் நிச்சயம்தான். பள்ளிக்கூடம் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டுவிட்டது' என்ற எண்ணம் மழுவாய் மனதில் இறங்க, வெகு துக்கத்துடன் எப்படியோ வீடு போய்ச் சேர்ந்தேன். அன்றைக்குப் பிடித்த சனியன் சுமார் 20 வருஷம் என்னை ஆட்டி வைத்தது. பள்ளிக்கூடச் சனியனிடத்தில் ஏழை நாட்டான் என்ன பண்ணுவான்?

---

## ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரென்ஸ் சொஸைடி லிமிடெட்.

ஷை கம்பெனியின் 1940 டிசம்பர் 31உ யோடு முடியும் வருஷாந்திரத் தணிக்கை வரப்பெற்றோம். யுத்தம்ஓர்கடும்புயல்போல் அடிக்கும் இந்நாளில் முக்கால்வாசி வியாபாரங்களும் நிலையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்ஷ்யூரென்ஸ் தொழில் மாத்திரம் யுத்தத்தினால் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை என்பது, பல இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் விடுத்துள்ள வருஷாந்தர ரிபோர்ட்டிலிருந்து விளங்குகிறது. இந்த யுத்தகாலத்திலும், ஷை இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி ரூ. 2,62 86,878 மதிப்புள்ள புதிய வியாபாரம், செய்திருப்பது இக்கம்பெனியின் திருப்திகரமான நிலைமையையே காட்டுகிறது. வருஷ பிரிமியம் வருமானமும் பெருகிக் கொண்டே வருகிறது. இத்தணிக்கைவருஷத்தின் பிரிமியம் வருமானம் ரூ. 85 லக்ஷம். இக்கம்பெனியின் ஆயுள் நிதி ரூ. 3,10,88,971 லிருந்து ரூ.3,57,33,669க்கு விருத்தியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்திய இன்ஷ்யூரென்ஸ் சட்டப்படிக்கு ஸெக்யூரிடிகளில் இக்கம்பெனியின் இன்வெஸ்ட்மெண்ட் நாளுக்குநாள் வளர்ந்துக் கொண்டே இருக்கிறது. இந்த யுத்த காலத்திலும் இவ்வளவு திருப்திகரமான அபிவிருத்தி யடைந்திருக்கும் இக் கம்பெனி, எதிர்காலத்தில் இன்னும் விசேஷ அபிவிருத்தியை அடையும் என்று எதிர்பார்ப்பதற்கு ஹேது இருக்கிறது.

## மங்களகிரி கிராமக்கைத் தொழிற் பள்ளிக்கூடம்

இப் பள்ளிக்கூடத்தின் 1940-41 ம் வருஷத்து வருஷாந்திர அறிக்கை வரப் பெற்றோம். இத்தாபனம், ஜே. எல். வி. ரோச்சி விக்டோரியாவின் தலைமையின் கீழ், தேச முன்னேற்றத் துறையில், நிர்மாணத் திட்டங்களைப் பாடுபட்டு அனுஷ்டித்து வருகின்றது. குடிசைத் தொழில்கள் பல இப் பள்ளியில், மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு வருகின்றன. மிக்க உயர்ந்த லக்ஷியத்துடன் பாடுபட்டு வரும் இத்தாபனத்துக்கு பொதுமக்களின் ஆதவு அவசியம் என்பதை எடுத்துக்கூற வேண்டிய தில்லை. ஏழ்மை தேங்கி நிற்கும் நம் நாட்டில், இதுபோன்ற ஒன்றிரண்டு ஸ்தாபனங்களாவது உயரிய நோக்கத்துடன் பாடுபட்டு உழைக்க, பொருளுதவியுடன் சர்க்காரும் தனவந்தர்களும் முன் வராவிட்டால், நம் தேசத்தில் மக்கள் படும் துயரத்துக்கு விமோசனமே ஏற்படாது என்று கூறுவது மிகையாகாது.

# சர்க்கரைத் தொழில்

இந்திய சர்க்கரை மில்கள் சங்கத்தின் வருஷாந்தரக் கூட்டத்தின்போது நடத்திய ஸ்ரீ. ஆர். எல். நோபானியின் தலைமையுரைப் பிரசங்கம், பொது மக்களின் கவனத்தை இந்திய சர்க்கரைத் தொழிலின் தற்போதைய நிலைமைக்கு இழுக்கிறது. நோபானி கூறியதுபோல் 1939-40 வருஷத்திய இந்திய சர்க்கரைத் தொழிலின் அசாதாரண நிலைமை, பின்னிட்டு ஒவ்வொரு வருஷமும் அப்படியே தொடர்ந்துகொண்டே வருகிறது. சர்க்கரைத் தொழிலின் ஆரம்பமும், அதன் வளர்ச்சியும், சர்க்கார் அத்தொழிலுக்கு அளித்த ஆதரவுச்சட்ட காலம் (1932) முதல் 1937 வரையில் காணப்பட்டது என்று ஒருவாறு கூறலாம். ஆதரவுச் சட்டநாள் (Protection) முதல், இரண்டாவது ஐந்துவருஷத்திய சர்க்கரைத் தொழிலின் போக்கு சற்று கவலைக் கிடமானதாகவே இருந்தது. அதாவது 1932 முதல் 1942 வரையில் இந்திய சர்க்கரைத் தொழிலின் சரித்திரம், உற்பத்தி, வளர்ச்சி, க்ஷீணதசை என்ற தலைப்பின்கீழ் எழுதத் தகுந்ததாக காணப்படுகிறது.

சர்க்கரைத் தொழில் 1932 முதல் 1937க் குள்ளான ஐந்து வருஷ காலத்துக்குள் விசேஷ அபிவிருத்தி யடைந்திருப்பது இந்தியா ஒன்றில்தான்; மற்றெந்த தேசத்திலும், இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு விசேஷமான முன்னேற்றத்தை இத்தொழில் அடையவில்லை. அதுமாத்திரமல்ல. வேறெந்த தொழிலும், இக் குறுகிய காலத்தில் இது சிருஷ்டித்தவை போன்ற சிக்கலான பிரச்னைகளைப் பிறப்பிக்கவில்லை. இவ்வித சிக்கலான பிரச்னைகள் சர்க்கார் கவனத்தை அடிக்கடி இத்தொழிற்சாலைகளில் செலுத்தும்படி செய்தன. நிர்வாக சம்பந்தப்பட்டவர்கள் அப்பப்பொழுது புதுப் புதுத் திட்டங்களையும், யோசனைகளையும் கையாளவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தின. இதுபோன்ற தகராறு காலங்களில் சர்க்கார் இத்தொழில்கள் பேரில் குற்றத்தைச் சாட்டினார்கள்; தொழிலும் பதிலுக்கு சர்க்கார்பேரில் பழி சுமத்திற்று. இதனால் சர்க்காருக்கும் இத்தொழிலுக்கும் ஒற்றுமை என்பது துர்லபமாகிவிட்டது. கரும்பு பயிரிடுபவர்கள், தொழிலாளிகள் பொது மக்கள் முதலிய தொழில் சம்பந்தப்பட்டவர்களின் நிலைமை மிக்க திருப்திகரமாக இருந்த காலமும் உண்டு. மிக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்த காலமும் உண்டு.

இதெல்லாம் உப்பு புளிப்பற்ற கதைதான். ஆனால் இப்பொழுது இத்தொழில் நன்றாக வேருன்றி விட்டது. நம் தேசிய மூலதனம் மிகுந்த வளவுக்கு இத் தொழிலில் போடப்பட்டிருக்கிறது. சர்க்கரைத் தொழில் இப்பொழுது நம் தேசத்து விவசாயப் பொருளாதாரத்தில் மிகுந்த முக்கியத்வம் வகிக்கிறது. எனவே சர்க்கரைத் தொழில் இந்தியாவின் ஒரு பலத்த தேசியத் தொழிலாகக் கருதப்பட்டு வருகிறது. எவ்வளவு சிக்கலான பிரச்னைகளா யிருந்தாலும் அவைகளைத் தீர்த்து இத் தொழிலுக்கு ஓர் விசேஷ அபிவிருத்தியைக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியச் சர்க்கரைத் தொழிலுக்கு, சர்க்கார் ஆதரவு 1932ல் கிடைத்தது. இது பேருக்குத்தான் ஆதரவு; ஏனெனில் ரெவின்யு ட்யூடி வருஷா வருஷம் சிறிது சிறிதாக அதிகமாகிக் கொண்டே வந்தது. 1931-32ல் தொழிற் சாலைச் சர்க்கரை உற்பத்தி 1.58 லக்ஷம் டன்கள். உண்மை அபிவிருத்தி 1932-33ல் தான் ஆரம்பித்தது. 1931-32ல் 1.58 டன்கள் உற்பத்தியிலிருந்து 1936-1937ல் 11.11 லக்ஷம் டன்களுக்கு அதிகரித்திருக்கிறது. 11 லக்ஷம் டன் சர்க்கரை உற்பத்தி செய்ததால் இந்தியா வெளி நாட்டு சப்ளையை எதிர்பாராமல் தனக்கு வேண்டியதை

# "திருவாங்கூர் இன்பர்மேஷன்"

பல சித்திரப் படங்களுடன் கூடிய
நேர்த்தியான மாத சஞ்சிகை

ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில்
இன்பர்மேஷன் டிபார்ட்மெண்டால்
— வெளியிடப்படுகிறது —

உங்கள் சந்தாவை அனுப்பிவையுங்கள்

உங்கள் வியாபாரச் செய்தியை இதில் விளம்பரம்
செய்யுங்கள்

வருஷ சந்தா { உள் நாடு ரூ. **3—0—0**
வெளி நாடு ரூ. **3-13—0** }

தனிப்பிரதி **4** அணா

●

மஹாராஜாவின் பிறந்தநாளை யுத்தேசித்து

## "திருவாங்கூர் இன்பர்மேஷன்" ஆண்டு மலர்

வெளியிடப்பட்டிருக்கிறது

—:o:—

**ஸச்சிவோத்தம ஸர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்
டாக்டர் ஸி. ஆர். ரெட்டி, ஸ்ரீ நிஹால்ஸிங்க்,
டாக்டர் ஜே. எச். கஸின்ஸ்**

முதலியவர்களின் விசேஷக் கட்டுரைகள் அடங்கியது

அழகிய வர்ணப்படங்கள் மிளிர்கின்றன

விலை **8** அணா தான்

●

விலாஸம் :

**இன்பர்மேஷன் டைரெக்டர்,**

திருவாங்கூர், திருவனந்தபுரம்.

ஹிக்கின்போதம்ஸ் ரெயில்வே புத்தக ஸ்டால்களில்
பிரதிகள் கிடைக்கும்

தானே உற்பத்தி செய்து கொண்டது என்றே சொல்லலாம்.

1931-32 வரையில் வருஷா வருஷம் சராசரியில் 10 லக்ஷம் டன் ஜாவா சர்க்கரையை இந்தியா இறக்குமதி செய்து வந்தது. இப்படி இறக்குமதி செய்வதால் வெளிநாட்டு உற்பத்தி ஸ்தாபனங்களுக்கு, வருஷா வருஷம் சராசரியில் சுமார் ரூ 15 கோடி இந்தியச்செல்வம் செல்கிறது. இப்படி ஒவ்வொரு வருஷமும் 15 கோடி ரூபாய் வெளி நாடுகளுக்குச் செல்வதை நிறுத்தி தேசிய உற்பத்தி மிகக் குறுகிய ஐந்து வருஷ காலத்திற்குள் விசேஷ அபிவிருத்தியடைந்தது, இந்திய சர்க்கரைத் தொழிலின் விசேஷ அம்சத்தையே காட்டுகிறது.

* * *

சர்க்கரைத் தொழில் இவ்வளவு அதிசய அபிவிருத்தி அடைந்ததை பெருவாரியான மக்கள் உணரவில்லை. பலர் பல விதமான குறைகளை இத் தொழிலின் பேரில் சுமத்தினர். சர்க்காரும் இதற்கனுகூலமான மனப்பான்மையை யிழந்தவர்களாயிருந்தார்கள். ஒவ்வொரு பைனன்ஸ் மெம்பரும், வெகு குதூஹலத்துடன் சர்க்கரைத் தொழிலின் பேரில் உள்ள வரிச்சுமையை அதிகரித்துக் கொண்டே போனார்கள். ஸர் ஜேம்ஸ் கிரிக் துரைகூட, இந்திய சர்க்கரைத் தொழிலின் அபூர்வ வளர்ச்சியினால் ஜாவா சர்க்கரை இறக்குமதி நின்று விட்டதே என்று தனக்குண்டான அதிருப்தியை வெளிக்காட்டாமலிருக்க முடியவில்லை. ஏனெனில் ஸர் ஜேம்ஸ் இறக்குமதியிலிருந்து வரிகிடைப்பது நின்று விட்டதே, என்ற கவலையையுடையவரே யொழிய, இந்தியப் பொருளாதார சுதந்திரத்தைப் பற்றி சிந்தைப் பட்டவரல்லர்.

இத்தொழில் சம்பந்தப்பட்ட வரையில் மாகாண சர்க்கார்களும், நேச மனப்பான்மையற்றவர்களாக இருந்தார்கள். பிஹார், ஐக்கியமாகாணச் சர்க்கரைகள் தேசிய நன்மைக்கு முறணை மனப்பான்மை எடுத்துக் கொள்ளவில்லை. என்றாலும், கரும்பு பயிரிடுபவர்களுக்கு உயர்ந்த பிரதி பலன் கிடைக்கவேண்டும் என்று பாடு பட்டு வந்தார்கள். இதனால் அவர்கள் சர்க்கரைத் தொழிலில் ஈடுபட்டு வரும், கரும்பு பயிரிடும் விவசாயிகள் சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைக்கார்கள் இவ்விரு பிரிவினர்களுள், கரும்புபயிரிடும் விவசாயிகளிடத்திலே பக்ஷபாதம் காட்டி நடந்து வந்தார்கள்.

சர்க்கரைத் தொழிலின் தற்போதைய நிலைமை திருப்திகரமாகவே இருக்கிறது: இந்தியாவிலும், இந்திய சமஸ்தானங்களிலும் உள்ள ஆலைகள், தங்கள் தங்களால் எவ்வளவு மிகுந்த அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு சர்க்கரை உற்பத்தி செய்தால், இந்தியா சர்க்கரை சப்ளைக்கு வேறொரு தேசத்தை எதிர்பார்க்காமல் இருக்கலாம். இப்படி இந்திய ஆலைகளில் உயர்ந்த அளவுக்கு உற்பத்தி செய்யும் சர்க்கரை சுமார் 14 லக்ஷம் டன்கள் இருக்கலாம் என்று உத்தேசம் கூறலாம். இந்தியாவுக்கு 12 லக்ஷம் டன்கள் இருந்தால் போதும்என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 12 லக்ஷம் டன்களில் பர்மாவுக்கு ஏற்றுமதி செய்வதும் சேர்ந்துதான் இருக்கிறது. எனவே இந்தியா தனக்கு வேண்டிய சர்க்கரையை தானே உற்பத்தி செய்து கொண்டால் போதும். ஜாவா சர்க்கரையுடன் போட்டி போட்டு, இந்தியா சர்க்கரை ஏற்றுமதி நாடாகுமோ, என்று எண்ணுவது, வீண் யோசனைதான். ஜாவாவில் சர்க்கரை உற்பத்திச் செலவு மிகக் குறைந்த நிலையில் இருப்பதேதான் இதற்கு மூலகாரணம்.

எனவே இப்போதுள்ள சர்க்கரைத் தொழிலின் நிலைமையை, நன்கு விசாரணை செய்தறிந்து இத் தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய முறைகளை இந்திய சர்க்கார் கையாள வேண்டுவது அவசியம்.

கா. சி. வேங்கடரமணியின் தொடர்கதை?

# அமுதமும் அழகும்

[பேரன்]

தயிர் கடையும் மத்தோசை கேட்டு உட்சென்று நோக்கினேன்.

தாழியருகிலே நிற்கிறான் என் பிள்ளை; "எப்போது வெண்ணெய் வரும்?" என்று மலர விழித்து நோக்குகிறான்.

நானோ, கடை கயிற்றைப் பற்றி இழுக்கும் தோள முகை கண்ணாற் பருகி இன்புற்றேன்.

அப்பொழுது, என் முன்னே பாற்கடலைக் கடைந்த காட்சி தோற்றிற்று.

தேவர்களும் அசுரர்களும், "எம்மால் இயலாது; நீயே கடைந்தருளி இன்னமுதம் எமக்கு ஈவாய்" என்றார்கள்.

அங்கைச் சங்கும் ஆழியும் அசையவில்லை; மற்றை இருகையால் வாசுகியைப்பற்றி கடைந்த பேரழகை நான் கண்டேன்.

தேவாசுரர்கள் அனைவருமே, "எப்பொழுது எழுமோ இன்னமுதம்?" என்றே நோக்கி இருந்தார்கள்; அங்கு ஒருத்திமட்டும் காதலன் கடல் கடைந்த காட்சி கண்டு இன்புற்றாள். "திருமா மகள் கொல் இவள்?" என்று வியப்புற்றேன்.

# உபோத்காதம்

[ய. மகாலிங்க சாஸ்திரிகள், எம்.ஏ., பி.எல்.]

காலஞ்சென்ற கும்பகோணம் அத்வைத ஸபா பண்டிதர் மஹோபதேசக சாஸ்திரரத்னாகர மஹாமஹோபாத்யாய பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களின் ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள்.

ஆடுதுறைக்கடுத்த மருத்துவக்குடியில் ஐம்பது அறுபது வருஷங்களுக்குமுன் ஸ்வாமி சாஸ்திரிகள் என்ற ஒரு மஹான் வசித்து வந்தார். அவர் ஜ்யோதிர்கணிதத்திலும் தர்மசாஸ்திரத்திலும் தஞ்சை ஜில்லாவில் நிகரற்ற வாசஸ்பதியாய் விளங்கினார். ஸ்மார்த்த தர்மங்களை அநுஷ்டித்துக்கொண்டு வஸிஷ்டரென மதிக்கப் பெற்று அடக்கமும் அவா இன்மையும் உபகார சித்தமும் காருண்யமும் விவேகமும் பொருந்தினவராய் எழ்மையில் தன் வாழ்நாளைக்கழித்து வந்தார். சிவதர்சனமின்றி உணவுண்ணார். அதிதிகளை ஆராதிப்பார். பிரம்மமுகூர்த்தத்தில் எழுந்து தேவீஸ்துதியான மூகபஞ்சசதியை படித்துவிட்டு நித்யவிதிகளை ஆரம்பிப்பார். என்றும் ராமாயண பாராயணத்தையும் சிவபூஜையையும் தவிர்க்கமாட்டார். பக்தி பரவசத்தால் பாராயணம் படனம் முதலியவை செய்யும்போது கண்டம் தடதடக்கக் கண்ணீர் சொரிவார். ஹாஹாகாரம் செய்வார். அவருக்கு அதர்மத்தினின்று தவிர வேறு எதினின்றும் பயம் கிடையாது. ஸத்யவாக்கான அவர் வாக்கில் வந்ததெல்லாம் உண்மையாய் பலிக்கும். அம்மஹானை விரும்பி, "மன்னார்குடி பெரியவாள்" என்று உலகத்தில் இன்னும் ஸ்மரிக்கப்படுபவரும், ஸர்வக்ஞரும், பூலோகபிரும்மா என்று அக்காலத்தவரால் போற்றப்பட்டவருமான பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகள் தன் ஸ்வீகார புத்திரனுக்கு அவருடைய புத்திரியை விவாஹம் செய்துகொண்டு ஸம்பந்தியானார்.

ஒருநாள் ஸ்வாமி சாஸ்திரிகள் பாராயணம் செய்யும்போது ராக ஆலாபனம் செய்தார். அவருடைய தௌஹித்ரன் ஆறு எழு வயதுச் சிறுவன் கவனித்துக்கொண்டிருந்தான். சாஸ்திரிகள் நல்ல கண்டமுடையவரானாலும் வயோதிகரானபடியால் ஆலாபனம் சற்று கோளாராகிவிட்டது. அப்போது தௌஹித்ரன் "தாத்தாவுக்குத் தந்தி அறுந்து போய்விட்டது" என்று ஏளனம் செய்தான். இதைக் கேட்டதும் மாதாமஹரின் ஆனந்தத்திற்கு ஓரளவில்லை. "அடி, பார்த்தாயா இந்தப்பயல் சொன்னதை வாஸ்தவமாய் தந்தி அறுந்துதான் போச்சு. நன்றாய்ச் சொன்னானடி குழந்தை" என்று தன் மனைவியைக் கூப்பிட்டுச் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

மற்றொரு சமயம் இச்சிறுவனுக்கு எண்ணை தேய்த்து முற்றத்தில் நிறுத்தி வைத்துவிட்டு தாய் அவசரக்காரியங்களை கவனித்துக்கொண் டிருந்தாள். சிறுவனுக்குக் கண்கரிக்க ஆரம்பித்ததும் "வெந்நீர் வெந்நீர்" என்று கூவினான். மாதாமஹர் அப்போது வெளியிலிருந்து பிரவேசித்தார். தௌஹித்ரன் கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்பதைப் பார்த்ததும் "ஏண்டா இப்படி நிற்கிறாய்" என்று பரபரப்புடன் கேட்டார். அதற்கு சிறுவன் "கண்ணீர் விட்டுக் கதறினாலும் வெந்நீர் யார் வைக்கிறாள்" என்று பிராஸம்போட்டுப் பாடினான். மாதாமஹர் அகமகிழ்ந்து "அடி பார்த்தாயா இந்தப்பயல் பிராஸம் போட்டதை" என்று சொல்லிக்கொண்டு பரவசமானார். வால்மீகி தான் அறியாமல் "மாநிஷாத ப்ரதிஷ்டாம் த்வம்" என்று ஸரஸ்வதி அவதாரத்தை புவியில் இயற்றியதுபோல் ஸ்வாமி சாஸ்திரிகள் தௌஹித்ரன் இவ்வித ஸமயோசித கவிதைகளால் தான் ஸங்கீத ஸாஹித்யங்களில் இயற்கை சக்தி வாய்ந்தவனாயிருந்ததை வெளிப்படுத்தினான். அக்காலங்களில் படிப்பில் அதிக கவனம் செலுத்தாதது பற்றி அவன்பேரில் புகார் கூறின தாய்க்கு "நீ கவலைப்படாதே பன்னிரண்டு வயதிற்குப் பிறகு எடுத்த புஸ்தகங்களெல்லாம் இவனுக்குக் கண்ணாடிபோல் விளங்

கும். ஆதியில் சனிதிசை, புததிசை வந்த தும் ஸர்வசாஸ்திர பண்டிதனவான்" என்று பிதா தேறுதல் சொன்னர்.

லோகத்தில் சாஸ்திரம் படித்தவர்களுக்கு ஸாஹித்யம் வராது. இரண்டும் வந்தாலும் ஸங்கீதம் காதவழிக்குப் பக்கத்தில் நாடாது. இம் மூன்று விதமாயும் ஸரஸ்வதி விலாஸம் பெருகினாலும் அதிர்ஷ்ட விலாஸம் அங்கு காணப்படாது. தரித்திரம் கூத்தாடும். இவ்வளவும் கூடினும் அனுபவிக்கக் கொடுத்துவைக்காத பேதை யாவான். குலமும், வனப்பும், பூமகள், நாமகள் இவர்களின் அருளும், இனிய குரலும், குளிர்ந்த கானமும், மலர்ந்த மனமும் பொருந்தி ஸுகியாயும் படன பாடன ஸத்கதா ப்ரவசனம் முதலிய பிரவிர்த்திகளை லோகோபகாரமாய் அனுஷ்டித்துக் கொண்டு பிறர் முகம் பாராமல் உன்னத ஜீவனம் நடத்தியவருமான பிரும்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள்தான் மருத்துவக்குடி ஸ்வாமி சாஸ்திரிகளின் தௌஹித்ரர். இவருக்கு ஸங்கீத ஞானம் மாதாமஹரிடமிருந்தும், சாஸ்திர ஞானம் பிதா மஹரிடத்திருந்தும் குலதனமாகக் கிடைத்தது. பிதா ஏராளமான பொருளைத் தேடி வைத்தார். ஸ்வயம் ரஸிக சிகாமணி யாதலால் இவர் ஸுகியாயும் பராபேக்ஷை யில்லாமல் மஹத்துவத்துடனும், சாஸ்திர ஆராய்ச்சி, ஜனரஞ்சனமான பிரவசனங்கள் ஸங்கீதானுபவம் இவைகளில் உத்ஸாகத்தைச் செலுத்தியும், யோகியாயும் போகியாயும் விளங்கினர். இவர் ஜனனகாலமே விசேஷம் பெற்றது. யுவ வருஷம் லோக குருவான பிதாமஹர் பிறந்த வருஷம். "பெரியவாள்" தம் அறுபதாம் ஆண்டில் யக்ஞம் செய்தார்கள். அதே வருஷத்தில் உதித்ததால் புனிதமான யக்ஞஸ்வாமி என்ற பெயர் ஏற்பட்டது. "மாஸானாம் மார்க்கசீர்ஷோஹம்" என்று பகவான் கீதையில் குறிப்பிட்ட மார்கழி மாதம். "பிரசன்னதி" என்று வால்மீகியால் புகழப்பட்ட பரதன் பிறந்த புஷ்ய நக்ஷத்திரம். ஜனனம் போகி பண்டிகை தினம். ஸ்வாமி சாஸ்திரிகள் தௌஹித்ரனின் ஜாதகத்தைக் கணித்துப் பார்த்து "இவனுக்கு ஸஹோதரவர்க்கம் கிஞ்சித்தேனும் கிடையாது" என்றும் "மேன்மையான மஹா பண்டிதனாய் விளங்குவான்" என்றும் சொன்ன வாக்கு நிஜமாயிருந்தது.

சாஸ்திரங்களின் பெருமையை விரிவானலோகம் அறியும் என்றாலும் அவருடைய ஸங்கீதஞானம் சிலருக்கே தெரிந்திருந்தது. ஏனெனில் அவர் தன் யோக்யதையை பறையறிவித்துக் கொள்ளும் சுபாவ மில்லாதவ ரானதாலும், உதர நிமித்தம் பிறர் போக்கை அனுசரித்து திருப்தி செய்து வைத்த அவசியம் இல்லாதவராய் வித்வத் பிரபுவாய் இருந்தமையாலும், தேடிவந்து வினயமாய் வேண்டியவர்களுக்கே தன் ஒளியை அருளினர்.

சாஸ்திரிகள் அவர்கள் நல்ல கேள்வி ஞானி. திருமருகல் நடேசன் முதல் சின்னப் பக்கிரி பர்யந்தம் நாயனக்காரர்களையும், மஹா வைத்தியநாத அய்யர் பட்டணம் ஸுப்ரமணிய அய்யர் முதல் பூச்சி ஸ்ரீனிவாச அய்யங்கார் வரை காயகர்களையும், சரப சாஸ்திரிகள் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் முதல் பல்லடம் சஞ்ஜீவராவ் செம்மங்குடி நாராயணசாமி அய்யர் வரை வாத்யக்காரர்களையும், தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர் முதல் மாங்குடி சிதம்பர பாகவதர் வரை கதகர்களையும் நன்று கேட்டு ஸங்கீத ஸாகரத்தில் ஆழ்ந்து முழுகி எழுந்தவர். இவருக்கு பாலியத்தில் ஸங்கீதத் தோழர் மன்னார்குடி ராமாயணம் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்.

மன்னார்குடியில் "பெரியவாள்" கிருஹத்திற்கு கீழ்புறம் மனையில் ஒரு தாழ்வாரமும் காமிரா உள்ளும் உண்டு. அந்த ஏகாந்தமான இடத்தில் சாஸ்திரபாடம் வாசிக்கும் தருணம்போக மற்ற காலங்களில் ஒரு தம்பூரா த்வனியும் அந்த த்வனியினின்று தனித்து அறியமுடியாத ஒரு இனிமையான இளம் கண்டத்வனியும் கேட்டுக்கொண்டிருக்கும். "பெரியவாளு"க்குத் தன் பௌத்ரனின் ஸங்கீத ஆர்வம் தெரியும். அதைப்பற்றி அவர்கள் ஒன்றும் சொல்வதில்லை.

(தொடரும்)

# பரம்பரை ஆழ்வாரும் பாட்டாழ்வாரும்

[ரா. ஸ்ரீ. தேசிகன் எம். ஏ]

எங்கேயோ இருளுக்கப்பால் சுடர்விட்டெரிகிற உண்மை ஒளியைத்தாகமாய் நாடினவர்கள் அதை ஒரு மூச்சில் அடைந்து விடுகிறதில்லை. அத் திசையை நோக்கிச் சென்றவர்கள் அநேகம் பேர்கள். வழியிலே மாண்டுவிடுகிறார்கள் சிலர்: கண்ட மற்றுஞ் சில பேர்களுக்கு அப் பெருஞ் சோபையினால் கண்கள் கூசி, வார்த்தைகள் தொண்டையில் சிக்கி விடுகின்றன: அதைப் பார்த்து அனுபவித்த யாரோஒருவன் தான்கண்ட அதிசயத்தை உலகத்திற்கு அறிவிக்கிறான். ஆனால் அதன் முழுச்சோதியும் சொல்வலையில் சிக்குகிறதில்லை.

பெரிய இதிகாசங்கள் வருவதற்கு முன் எத்தனை சிறிய இதிகாசங்கள் தோன்றி மறைந்திருக்க வேண்டும். இராமாயணம் மஹாபாரதம் வருவதற்கு முன் எத்தனை சிறிய நூல்கள் மலர்ந்து வாடினவோ? யாருக்குத் தெரியும். உபநிஷத் தத்துவங்களைக் கண்டுபிடித்த மஹரிஷிகளுக்கு முன் எத்தனை ஆத்ம விசாரஞ் செய்த தீரர்கள் கால இருளில் மறைந்து விட்டனரோ?

கோடிக்கணக்கான ஜனங்களில் ஏதோ சில பேர்களுக்குத்தான் கண்கள் திறக்கின்றன. கண்கள் திறந்தாலும் ஒன்றல்லது இரண்டு பேர்கள்தான் ஞான நல்நெறியைப்பற்றி நடக்கிறார்கள். போகிற வழியோ தொலையாத நீள்வழி. முள்ளும் கல்லும் நிரம்பிய பாதை. வழியிலோ துழா இருட்டு சிதறிய எண்ணங்கள் மீதும், உடைந்த லட்சியங்கள் மீதும், அழிந்த ஆசைகள் மீதுதான் அடி வைத்துப் போகவேண்டியிருக்கிறது. யாத்திரிகளுக்கு அறிவுதான் கவசம்; அன்புதான் வெளிச்சம். இவைகளை அணிந்துகொண்டு போகப்போக விரிந்துகொண்டே போகிற நீண்ட பாதையில் தனியாகத்தான் செல்ல வேண்டும்.


ஆழ்வார்களும், நாயன்மார்களும் சிரமப்பட்டுதான் அவ் வழியிலே போயிருக்கிறார்கள். அவருடைய பாடல்கள்தான் அவர்கள்பட்ட சிரமங்களைக் காண்பிக்கிற நற்சாட்சிப் பத்திரங்கள்.

இவர்கள் பிரயத்னம் இழந்த அரசை கைப்பற்றுவதுதான். ஆத்மா அரசு செலுத்திய ராஜ்ஜியம் பஞ்சேந்திரிய அரட்டர்கள் கையில் சிக்கியது. "எப்படிச் சிக்கியது, ஏன் சிக்கியது" என்ற விஷயத்திற்குப் பதில் இதுவரையில் கிடைக்கவில்லை—இனிமேலும் கிடைக்கப்போகிறதில்லை. இவ்விஷயம் இந்திரிய பிராந்தங்களுக்கப்பால் போய்விட்டது: இந்திரிய எல்லைகளை மீறிய விஷயம்.

ஆனால் சிறை வாழ்வுதான் நாம் வாழ்கிறோம்: இதை ஒருவனும் மறுக்க முடியாது. காமமான இராவணன் கையில் சிக்கிய சீதை நாம். ஒவ்வொருவரும், அவள் இட்ட ஓலந்தான் நாமும் இடுகிறோம். அவள் சிறைதான் நம் சிறையும். கண்ணற்ற தீவினில் கூட்டிலே அடைப்பட்ட நாம் அலைக்குமேல் அலையாய் தாவி வருகிற பிறவிக் கடலின்மீது ஏதானும் விடுதலைச்சீட்டு மிதந்து வருகிறதா என்று சிந்தை தேக்கிய முகத்தோடு பார்க்கிறோம். ஒவ்வொரு வாழ்வும் ஒரு பெரும் இதிகாசம்தான். இராமாயணம் அன்றுமட்டும் நடக்கவில்லை. இப்பொழுதும் நடக்கிறது: இனிமேலும் நடக்கும்.

நம்வாழ்வின் இதிகாசத் தனிச்சிறப்பை நினையாது குறுகிய நோக்கத்தில் சிறை வாழ்வை உவக்கின்றோம். இதுமட்டுமா? சிறையில் இருக்கின்றோம் என்ற நினைவு கூட வாராமல் நமக்கு நகரமே சுவர்க்கமாகிவிடுகிறது.

உலகம் ஒரே நரகம் போலக் காணப்படுகிற சந்தர்ப்பங்களுண்டு. அவ்வப்பொழுது இவ் வெடியா வெந்நரகத்திலிருந்து




## இன்ஷ்யூர் செய்து தேச பணத்தைப் பெருக்குங்கள்

ஒரு தேசத்தின் பலத்துக்கு அத்தாட்சி அத்தேசத்திலுள்ள மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளும் சக்தியுடையவர்களாய் இருப்பதுதான்.

இந்த உலகக் கலவர காலத்தில் ஒவ்வொரு இன்ஷ்யூரென்ஸ் பாலிஸி ஹோல்டரும், தான் எவ்வளவு அளவுக்குத் தன்னை வரப்போகும் இக்கட்டுகளிலிருந்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை உணரவேண்டும்.

அப்படி இன்ஷ்யூர் செய்து தன்னைக் காத்துக்கொள்ளாதவர்கள் காலதாமதமின்றி இன்ஷ்யூர் செய்து தேசத்தின் செல்வப் பெருக்கை அதிகரிக்கவேண்டும்.

இன்றே விவரங்களுக்கு எழுதுங்கள் :—

**நேஷனல் இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்**

(தலைமை ஆபீஸ் :—கல்கத்தா) (ஸ்தாபிதம் 1906)

பிராஞ்சு ஆபீஸ்: **நேஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ்**

**362, சைனா பஜார் ரோடு, எஸ்பிளனேட், மதறாஸ்.**

ஸப் ஆபீஸ்கள் : **171, புதுத் தெரு, மதுரை. 5, கெம்பகோடா ரோட், பெங்களூர்.**

விடுதலையில்லையா என்ற கேள்வியை உள்ளங்கேட்கிறது. ஐயா! போதும், போதும் இந்த பிரபஞ்ச யாத்திரை எத்தனை துறைமுகங்களை பார்க்கிறது என்கிறார் ஒருவர்.

நம்மாழ்வாருக்கும் இருட் கணங்களுண்டு. அவர் மனமும் நரகவேதனையையடைந்திருக்கிறது. தன் தொலையாத யாத்திரையைப்பற்றிப் பேசியிருக்கிறார். பிறவியாம் அலைத் தொட்டியில் ஆட்டப்பட்டவர் அவர் என்பது அவர் பாட்டால் நன்கு விளங்கும்.

"மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து அடியை
யடைந்து உள்ளம் தேறி
ஈறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினன்"

மனிதனைப் பிறந்த எவனும் கஷ்டப்பட்டே தீரவேண்டி யிருக்கிறது. நிகரற்ற ஞானத்தால்முத்து ஒரே மூழுக்கில் கிடைத்துவிடுகிறதில்லை: கனவிலே ஒருவன் ஞானியாய்க் கனிந்து விடுகிறதில்லை. இவ்விஷயம் ஆழ்வார் சரித்திரத்திலும் உண்மையே.

நம்மாழ்வார் பாடல்கள் பரம்பரைச் செய்தியை வாதுக்கு இழுக்கின்றன. ஆழ்வாருக்குச் சங்கநூல்களின் பயிற்சி நன்றுயிருக்கிறது. ஒழுங்காய்ப் படித்தவர் என்பதில் சந்தேகமில்லை. வடமொழியிலும் தக்க பாண்டித்தியம் இருந்திருக்கவேண்டும் அகத்துறைதான்ப் பாடல்கள் இவர் கையில் ஈச்வர பரமாகத்திரும்பியிருக்கின்றன. பக்கத்திலுள்ள திருப்பதிகளுக்குப் போயிருக்கிறார் என்பதும் நமக்குக் கிடைக்கிறது. அழகர் கோயிலுக்கு இவர் போயிருக்கிறார். அம்மலை வனப்பில் அவர் உள்ளம் தோய்ந்திருக்கிறது. மலையை தரிசித்துவிட்டுத் திரும்பிப் போகும் பொழுது பாடப்பட்ட பாடல்போலப் படுகிறது கீழ்க்கண்ட பாசுரம்.

"தென்னன் திரு மாலிருஞ் சோலைத் திசை
கூப்பிச் சேர்ந்த யான்
இன்றும் போவேனே கொலோ? என் கொல்
அம்மான் திருவருளே?"

தாம் கஷ்டப்பட்ட நிலையை அநேக இடங்களில் குறித்திருக்கிறார். "ஐம்புலனை வென்ற பாடில்லை உன்னை ஆராதிக்கவில்லை" என்று அழுகிறார்.

"இடகிலேன் ஒன்றட்டகில்லேன் ஐம்புலன்
வெல்ல கில்லேன்
கடவனாகிக் காலந்தோறும் பூப்பறித் தேத்
தகிலேன்"

வழிதிகைத்து அலமர்கின்றேன்" என்று ஓரிடத்தில் ஓலமிடுகிறார். கொடுவினைகள் அவரைத் துன்புறுத்துகின்றன.

"கூவிக் கூவிக் கொடுவினை தூற்றுள் நின்று
பாவியேன் பலகாலம் வழிதிகைத்து அலமர்
கின்றேன்"

பஞ்சேந்திரியங்களின் சேஷ்டைகளை பொறுக்காமல் கூவிக்கொள்ளும் காலம் இன்றும் குறுகாதோ என்று ஏங்குகிறார். இவ் வேதனைக்கு மரணந்தான் பரிஹாரமோ என்று ஊகிக்கும்படி யிருக்கிறது. பின் வரும் பாட்டிலிருந்து

"ஆவி திகைத்து ஐவர் குமைக்கும் சிற்றின்பம்
பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ?
தாவி வையம் கொண்ட தடந்தாமரை கட்கே
கூவிக்கொள்ளும் காலம் இன்னம்
குறுகாதோ?"

ஒருவரை யொருவர் வெட்டி மடிகிற உலகத்தைக் கண்டு இவர் பரிதபிக்கிறார். "ஒருவர் விஷயத்தில் துக்கங்கண்டுஅவன் நண்பர்கள் துக்கிக்கிறார்கள். அதே விஷயத்திலே அவனுடைய விரோதிகள் அவனுக்கு வந்தகேட்டிலே களிக்கிறார்கள், இவையென்ன உலகியற்கை! என்று ஏங்குகிறார் ஆழ்வார்.

"நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்
தேங்க
எண்ணாத்துயர் விளைக்கும் இவை யென்ன
உலகியற்கை"

ஆனால் ஆழ்வார் நீண்ட இருட்திரைக்குப் பின்னால் விரிந்தெழுகிற காலையின் அழியா வனப்புச் சித்திரத்தைப் பார்க்கிறார் என்பதில் சந்தேகமில்லை. அவ் வனப்பை வாரிக்குடித்த அவர் உவகை வெறியில் பாடுகிறார்.

"பொலிக பொலிக பொலிக போயிற்று
வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு
யாதொன்று மில்லை"

# மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு

மாயவரத்திற்கு சமீபமாயுள்ள தருமபுரம் ஆதினம் மடாலயத்தில் ஸ்ரீல ஸ்ரீ தருமபுரம் மகா சன்னிதானத்தின் ஆதரணையின்கீழ் தமிழ் நாட்டில் இதுகாறும் நடைபெறாத ஓர் மகா நாடு சென்ற 28-8-41 முதல் 31-8-41 முடிய நான்கு நாளைக்கு வெகு விமர்சையாக நடந்தேரியது. அம்மகா நாட்டிற்கு சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல் வந்திருந்தார்கள்.

அம்மகா நாட்டில் முக்கியமாக மெய்கண்ட சித்தாந்தத்தைப்பற்றியுள்ள சிவஞ்ஞான போதத்திலுள்ள 12 சூத்திரங்களை பல ஊர்களிலிருந்து பிரபல வித்வான்களைக்கொண்டு தெளிவாக எடுத்துரைத்து ஜனங்களுக்கு மெய்கண்டான் அல்லது அத்வைத சித்தாந்தத்தின் தத்துவத்தைப்பற்றி உபன்னியாசம் நடத்தப் பெற்ற 29-8-41 பழனியிலுள்ள வேதாகம பாடசாலைத் தலைமை ஆசிரியர் காசி வாசி சிவ. ஸ்ரீ ஈசான சிவாசாரியாரவர்கள் மகாநாட்டின் தலைமையின் கீழ் சிவஞ்ஞான போதத்தின் முதல் ஆறு சூத்திரங்களையும் அன்று பலவித்வான்களைக்கொண்டு விவரமாக எடுத்துரைக்கப்பட்டது. ஹிந்துமத எண்டோமெண்ட் போர்டு தலைவர் திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை யவர்களும் அன்று மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தார்கள். ஒவ்வொரு சூத்திரமும் குறிப்பிட்ட பல வித்வான்களால் கட்டுரைகள் ரூபமாகவோ அல்லது உபன்னியாசமாகவோ தெளிவாகச் சொல்லப்பட்டது. 30-8-41வயன்று எண்டோமெண்ட் போர்டு கமிஷனர் ராவ்பகதூர் ஸி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சிவஞ்ஞானபோதத்தின் 7 முதல் 12-ம் சூத்திரம் முடிய முதல் நாள் நடந்ததுபோல் பல வித்வான்களால் உபன்னியாசம் நடந்தது.

நமது ஹிந்து மதத்தின் முதன்மையாயுள்ள அத்வைதசித்தாந்தத்தின் தத்துவங்களை எடுத்துரைத்து ஜனங்களுக்கு அவைகளின் தாத்பரியங்களைத் தெளிவாகச்சொல்லி அவர்களுக்கு விவேகமும், பரலோக சாதகத்திற்குண்டான வழியும் காட்டக் கூடிய இத்தகைய மகாநாட்டைக் கூட்டிப் பல விடங்களிலுள்ள அறிஞர்களை ஒன்று சேரும்படி செய்து அவர்களின் அரியபோதனைகளைப் பல பொது ஜனங்கள் கேட்டு தங்கள் அக்ஞான இருளிலிருந்து வெளிவரச் செய்யும்படி ஏற்படுத்தியுள்ள ஸ்ரீல ஸ்ரீ தருமபுரம் ஆதினகர்த்தர் அவர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம்.

இம்மகா நாடானது ஒவ்வொரு வருஷமும் நடை பெறுமென நம்புகிறோம். முதல் முதலாக ஏற்பட்டுள்ள இம்மகா நாட்டின் விமர்சையானது முக்கியமாய் ஆதினத்தின் ஏகதேச முயற்சியின் பயனே யொழிய வேறொருவருடைய யத்தனமும் இல்லை. இனி கூட்டப்படும் மகாநாடுகளில் பிறரும் உத்சாகத்துடன் கலந்து கொண்டு இன்னும் விமர்சையாகச் செய்ய எத்தனிப்பார்களென்பதில் சந்தேகமில்லை. தற்காலம் தருமபுரத்தின் மடாலயத்துப் பீடத்தை வகித்து வரும் ஆதினகர்த்தர் தாம் வந்தது முதல் சைவ சித்தாந்தத்தைப் பரவச்செய்யப் பலவிதமான முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பது பலரும் அறிந்த விஷயமே. சைவ சித்தாந்தத்தைச் சார்ந்த பல நூல்களைத் தாமே புஸ்தகரூபமாக அச்சிட்டு ஜனங்களுக்கு விலையில்லாமல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பொது ஜனங்கள் இதையுணர்ந்து அப்பெரியார் செய்து வரும் பேருதவியினால் தாங்கள் ஞானத்தை விருத்தி செய்துகொண்டு அக்ஞான இருளைப் போக்கிக்கொள்ள மார்க்கம் தேடுவார்களேயானால் அதுவே அவர்கள் ஆதினகர்த்தாவர்களுக்குச் செய்யும் பிரதியுபகாரமாகும்.

ஜி. பாலசுப்ரமணியம்

# நட்பு

[க. ரா. கிருஷ்ணசாமி அய்யங்கார்]

நான், அவன் என்ற வேறுபாடில்லாமல் இருவரிடத்தே சுபாவமாக ஏற்படும் உணர்ச்சியே நட்பு என்று சொல்லப்படுகிறது. மனிதனோடு மனிதன் ஒருங்கு சேர்ந்து ஜீவிப்பது மானிட சுபாவமானாலும், அன்பில்லாவிட்டால், அத்தகைய வாழ்க்கையால் நலன் ஏதும் இல்லை என்று சொல்லுவது மிகையாகாது. அறிவிற் சிறந்த பெரியாரோடு சிநேகஞ் செய்யும் இயல்புடையவன் தனித்து வசிக்கமாட்டான். ஒருவனைப்பற்றி அநேகர் நன்றாய் அறிந்திருக்கலாம்; ஆனால், அவனுக்கு அவர்கள் அறிமுகமானவர்களேயல்லாமல், நண்பர் எனக் கருதலாகாது.

2. ஒருவன் மற்றொருவனோடு சிநேகஞ் செய்து கொள்ளுவதற்கு அநேக காரணங்கள் இருக்கலாம். அவன் தன் ஊரைச் சேர்ந்தவனாக இருப்பதனாலும், பல சந்தர்ப்பங்களில் அவனைக்கண்டு, அளவளாவி, அவனிடம் நெருங்கிப் பழகுவதனாலும், அவன் தன்னைப்போல, ஒரே மனப்பான்மையுள்ளவனாக இருப்பதனாலும், அவனைத் தனது தோழனாகக் கருதிவர, ஹேது ஏற்படலாம்.

3. நமது தோழனிடம் மிகுந்த, போற்றற்குரிய, அருமையான குணங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ, அக்குணங்கள் எல்லாம் நம்மிடமும் இருத்தலே, நட்பிற்குக் காரணமாகும். தாம், அவர் என்ற வித்தியாசம் இல்லாமல் இருக்கும் உணர்ச்சி நண்பரிடம் இருக்குமேயாகில், அக்குணமுள்ளவரை யாவரும் சிலாகிப்பார்கள். இதனால்தான், வெளி வேஷத்தில், தான் அத்தியந்த சினேகிதன் என்று சொல்லிக்கொள்ளும் மனப்பான்மையுடையவனது நட்பு போற்றத் தக்கதல்ல என்றும், ஹிருதய பூர்வமாக ஏற்படும் தன்மையுள்ள, சிநேகிதனது நட்பே சிறந்தது என்றும் யாவராலும் பெரிதும் மதிக்கப்பட்டு வருகின்றது.

4. நட்பு, இயற்கை நட்பு, செயற்கை நட்பு என இருவகைப்படும். நாம், நம் சகோதரரிடம் அவர்களுக்கும் நமக்குமுள்ள ரத்தக் கலப்பின் பயனாக கொள்ளும் அன்பே, இயற்கை நட்பு என்று சொல்லப்படுகிறது. ஒருவனுக்கு நாம் உபகாரம் செய்தால், அதை மனதில் வைத்துக்கொண்டு, அவன் நமக்குப் பிரதி உபகாரத்தைப் பிரியத்துடன் புரியவும், அதை நினைத்து நாமும் அன்பு பாராட்டவும், இப்படிச் செயற்கையினால், தம்மை அறியாமல் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் அன்பே செயற்கை நட்பாம்.

5. இந்த விஷயத்தை நாலடியாரிலும்,

“கருத்துணர்ந்து கற்றறிந்தோர் கேண்மை எஞ்ஞான்றும்
குருத்திற் கரும்பு தின்றற்றே;--குருத்திற்கு
எதிர்செலத்தின்றன்ன தகைத்தரோ என்றும்
மதுரமிலாளார் தொடர்பு.”

என்று சொல்லப்பட்டுள்ளது. (கெட்ட) தீய நட்பில் உண்டாகும் நன்மை நீண்ட நாள் தங்கியிராது. நாளுக்கு நாள், தேய்பிறைபோல் குறையும்.

நல்ல சிநேகிதத்தால் உண்டாகும் நன்மை,

“ நவிறொறு நூன்யம்போலும் பயிறொறும்
பண்புடையாளர் தொடர்.”

என்றபடி, நாளுக்கு நாள் வளரும். கயவர் நட்பு

“ நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் தொடர்பு.”

இவ்விதம் இருப்பதனால், இணக்கம் அறிந்து இணங்குதல் வேண்டும். ஆகையினால்தான் “ சேரிடம் அறிந்துச் சேர் ” என்று பெரியார் கூறியுள்ளார்.

6. அவரவற்கு, சுபாவமாக ஏற்பட்ட தன்மை, இயற்கை வாசனை என்றும்,

பழக்க வழக்கத்தால் உண்டாகும் குணம், சேர்க்கை வாசனை என்றும் சொல்லப் படும். அவரவருடைய குண தோஷங் களை அவரவருடைய சகவாசத்தால் கண்டு கொள்ள முடியும். ஒருவனை அறிய அவன் நண்பனே உரையாணி.

ஒவ்வொரு வரும் தேடிக்கொள்ளும் நட்பு ஒவ்வொருவரின் இயற்கைக்கு ஏற்ற தாகவே இருக்கும்.

7. ஒருவர், நமது சிநேகிதத்தை நாடிய காலத்து, நாம் ஏதேனும் ஒரு தீச்செய்கை யில் இருப்பதாகப் போக்குக் காட்டுதல் வேண்டும். எதற்காக வென்றால், அவ் விதம் நாம் அக்காரியத்தைச் செய்யத் துணியும்போது, எந்த விதத்திலும், அக் காரியத்திலிருந்து நம்மைத் தவிர்க்க முயற்சி செய்கின்றனரா என்பதை யூக மாய்த் தெரிந்து கொள்ளுவதற்காக நாம் அவரைத் தேர்ந்தெடுத்த பிறகே, அவர் நட்பை நாம் விரும்ப வேண்டும்.

இதனால் அவர் சுயநலம் கருதுபவரா அல்லது நமது சிநேகத்தை நாடுபவரா என்பது சுலபத்தில் தெரியவரும். இதல் லாமலும் "ஆபத்திலே அறியலாம் அரு மைசிநேகிதனை" என்ற மூதுரையின்படி, அவர் நட்பு எவ்வளவு வரையில் இருக் கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுவ தற்கான உபாயங்களை கையாளலாம். ஆப்த நண்பர்கள் கருமம் புரியுங்கால் நட் புரிமையாலே கேளாது நன்மைகளைச் செய்வார்கள்.

8. சிறுவர் நட்பு மிகவும் இன்றியமை யாதது. இளைஞர் இனத்தை இளைஞர் நாடு வது, இயற்கை சிறுவர், ஒன்று சேர்ந்த அந்நட்பின் பயனை, அவர்கள் அடையா திரார். "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட் டில்" என்ற மூதுரையை ஒத்து, "ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா" என்ற பழமொழிப் படியும், பெற்றோர்கள் அவரவர் பிள்ளைகளை, சிறு வயதிலிருந்தே, அவர்கள் நற்பழக்க வழக் கங்களைக் கையாளும்படி, வற்புறுத்திப் போதிக்க வேண்டும்.

9. நண்பரான இருவரில் ஒருவர், உத்தி யோகம், நற்குடிப் பிறப்பு, கல்வி, செல் வம் ஆகிய இவைகளில் செருக்குற்றவரா யிருப்பாராகில், அந்த இரண்டு பேர் களுக்குமுள்ள சிநேகம், தேய்பிறை போல், குன்றும். ஒரு சிலர் தம் காரி யத்தைமுடிவு செய்வதற்கு, விடாமல் முயற்சி செய்து, மற்றவரிடம் சிநேகம் செய்துகொள்ள யத்தனிப்பர். ஒரு சாரார் அழுக்காறு கொண்டும், கோள்சொல்லியும், புறங் கூறியும், இருவர் சிநேகத்திடையே மித்ரபேதம் செய்து, தங்களுக்கு, அவ் விருவர் களால் ஏற்படக்கூடிய உதவிகளை யும் அடைந்து கொள்ளுவார்கள். அவ்வித நெருக்கடியான சமயங்களில் உண்மை யான சிநேகிதர்கள், தங்கள் சிநேகத்திற் குப் பங்கம் வாராமலும், ஒருவருக் கொரு வர் விரோதம் ஏற்படாமலும், தங்கள் சிநேகத்தை பலப்படுத்திக் கொள்ளுவார் கள்.

10. ஒருவன் மற்றவனோடு நண்பனாக இருக்கும் சமயம், அவன் தன்னை யறியா மல், ஒரு குற்றத்தைச் செய்து, பிறகு, தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு, தானும் மற்றவனைப் போல, உண்மை யான சிநேகிதனாக அடைய வேண்டும் என்று விரும்பினானேயாகில், அவ்வித சிநேகமுடைய அவனை, எவ்விதப் பகை வனும், தான் எதிராளி என்பதை மறந்து, அவனுடன் நட்புகொள்ள, மிகுந்த ஆவ லுடன் முன்வருவான் என்பதில் எள் ளளவும் ஐயமில்லை.

11. நாம் யாரிடத்தில் அந்தரங்க விசு வாசத்தோடு இருக்கிறோமோ, அவனே நமக்கு ஏற்ற ஆப்த நண்பன். அருமை யான சிநேகிதன் என்பவன், நான்மேலான "ஸ்திதியில் இருக்கிறேன்" என்ற இறு மாப்பில்லாமல், நம்முடன் கூடி, மிகு ந்த பிரியத்துடன் இருந்து பழகி, நம்மை நல்ல மார்க்கத்தில் நடத்துவான். மனதில் ஒன்றை நினைத்து வெளியில் பாசாங்கு செய்பவரோடு நாம் சிநேகஞ் செய்யக் கூடாது. இம் மாதிரியான இழிகுணத்தை நீக்கி, நமக்கு வீட்டின்பங்களை இப்புவி யிலே கொடுக்கும் உத்தம புருஷனே அரு மை நண்பனாவான்.

12. நட்பின் பிரயோஜனம் ஒற்றுமை யும், பெருந்தன்மையும், நம்பிக்கையுமே

யாம். இரண்டு என்ற பிரிவை உண்டாக்காமல், (ஏற்படுத்தாமல்) நண்பனை கடவுளுக்குச் சமமானவன் என்று நினைக்கச் செய்வதும் இந்த நட்பே யாகும்.

13. நம் வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்களை எடுத்துரைக்க, உற்ற இடம் நம் அருமை நண்பனே. மனிதன் தன் இன்ப துன்பங்கள் என்ற நோயை, ஆப்த சிநேகிதனாகிய ஔஷதத்தின் மூலம் அகற்றலாம். உண்மையான சிநேகிதனிடத்தில் நம் மனஎழுச்சிகளை எடுத்துப் உரைப்பதனால், நமக்கு இரண்டு நன்மைகள் உண்டாகின்றன. ஒன்று நமது கஷ்டங்கள் எல்லாம் நம் மனதை விட்டு நீங்கும். மற்றொன்று, மனது சற்று ஆறுதல் அடைந்து, தற்காலச் சந்துஷ்டியை அடைவதும் உண்டு.

14. நம் மனதில் எழும்பிய நினைவுகள் எல்லாவற்றையும் நம் நண்பனிடம் வெளியிடுவதனால், அவையாவும் ஒழுங்கடைந்து, நிலைத்த தெளிந்த ஞானம் ஏற்படு கின்றது, என்பதில் சிறிதளவும் ஐயமே யில்லை. ஒருவன் வெகுநாள் வரையில் வெளியிடாமல், ஒரு விஷயத்தை ஆராய்ந்தாலும், அவ்வித ஆராய்ச்சியால் யாதொரு பலனும் உண்டாவதில்லை; ஆனால், அவ்விஷயத்தை தன்னுடைய நண்பனிடத்தில் தெரிவித்தால், அது அவனுக்கு வெகுசுலபமாகவும், சீக்கிரமாகவும், உள்ளங்கை நெல்லிக் கனிபோல, விளங்கு கின்றது. இவ்வித நன்மை நல்ல சிநேகத்தால் தான் கிடைக்கின்றது. நாம் நினைத்த ஒரு செய்கை பூர்த்தி யாவதற்கு நம் நண்பனுடன் அச்செய்கையைப் பற்றிக் கலந்து ஆலோசித்தால், அச்செய்கை நன்மையாக வெகு சுலபத்தில் முடிவடைகின்றது. எக்காலத்திலும், எவ்வித இடையூறுகளிலும், தன்னுடனேயே கூட இருந்து, உதவி புரிபவன் நண்பனே தான்.

15. கடைசியாக, நாம் ஆண்டவனின் நட்பை மேன்மேலும் விருத்தி செய்வதற்கு, அவருடைய அடியார்களை மகிழ்வித்து, அவரைத்தம் நண்பராக்கும் முயற்சியிலும், செய்கையிலும், பின்னடையக் கூடாது.


# ஈழகேசரி

இலங்கையின் சிறந்த தமிழ்த்
தேசிய வார வெளியீடு

வருட சந்தா

உள்நாடு: இலங்கை, இந்தியா } ரூபா 5-0-0
வெளிநாடு: பர்மா, மலாயா } ரூபா 7-8-0

இலக்கண - இலக்கிய - அரசியல் - சரித்திர சம்பந்தமான கட்டுரைகளும் சிறந்த ஆராய்ச்சி விஷயங்களும், புத்தக விமர்சனங்களும் இதில் வெளிவருகின்றன

'ஈழகேசரி' நிலையம்,
பெரிய தெரு,
சுன்னாகம் P.O.
இலங்கை.

# குற்றவாளி யார்?

[த. நா. சுப்ரமணியன்]

## 1

அன்றுதான் புது வருடப்பிறப்பு.

ஓர் இருண்ட குகை போன்ற அறையில், ஒரு மூலையில் கிடந்த சாய்வு நாற்காலியில், தொண்டு கிழவன் ஒருவன், தனியே உட்கார்ந்திருந்தான்—இல்லை, இல்லை; அவனருகில் கிடந்த அவைகள்—அவன் தொட்டு உபயோகிக்கும் பட்சத்தில், அவனுடன் உண்மையில் பேசியேயிருக்கும்; மனிதர்களுக்கு அதிலும் சங்கீத ரஸிகர்களுக்கு, ஆப்த சிநேகிதர்களான சங்கீதக் கருவிகள்—அக் கிழவனுக்கு உயிரினும் மேலான வாத்தியக் கருவிகள். அந்தக் குஞ்சலம் கட்டிய புல்லாங்குழல்கள் — அவனெதிரிலுள்ள சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன. அவைகளில் மிகவும் நேர்த்தியானவைகூட சில இருந்தன. அவனருகிலும் ஒரு புல்லாங்குழல் தரையில் கிடந்தது — ஆத்திரத்தால் சற்று முன்புதான் அதை அவன் கீழே எறிந்தான். அவன் ஒரு காலத்தில் ஒரு பெரிய புல்லாங்குழல் வித்வானாகயிருந்தான். ஆனால் காலச் சக்கரத்தின் கோலாகலம்—இளமை வெகு விரைவில் கழிவதும், முதுமை என்றும் நீடித்து நிற்பது போன்றும் தோன்றுவதுபோல், அக் கிழவனும் வயோதிகத்தைத் தன்னுடனேயே நிலைபெறச் செய்து கொண்டான்.

"ஊஹூம், இன்றிரவு என்னால் வாசிக்க முடியாது. என்னுடைய கையில் பலமில்லை; ஒரு நரம்பு கூட இல்லை! வாயால் ஊதவும் முடியாது. நான் ரொம்பவும் தள்ளாதவனாகி விட்டேன்" என்று அவன் தனக்குள்ளேயே முணுமுணுத்தான்.

சிறிது நேரம் கழித்து ஓர் பயங்கரச் சிரிப்பு சிரித்தான்! "தொண்டு கிழம்! நான் கிழவன்—தொண்டு கிழவன். இவ் வாழ்வையே வெறுக்கும் கிழவன். எனக்கு இவ் வாழ்க்கை என்ன நன்மை செய்தது? ஒரு சுடர் விளக்கு, சில வெற்றிச் சுடர்கள் — இவ்வளவுதான். பிறகு அவிந்து, கரிந்து, புகைந்து சாம்பலாய்ப் போய்விட்டது; ஒரே இருட்டு — மை இருட்டு! ஹா; என்ன ஆனந்தம்! அவளை இன்றிரவு நினைக்க என்னைத் தூண்டியது எது? நான் அவளை முற்றிலும் மறந்தேன்—காதல் இன்னது என்பதையும் மறந்தேன். நான் இதுவரையிலும் அம்மாதிரியான காதலை அனுபவித்திருக்கவும் மாட்டேன்—அதைப்போல் இழந்திருக்கவும் மாட்டேன். அவள் என்ன அழகு! அவளுக்கு அவளேதான் நிகர். ஆனால்...... ஆனால் எவ்வளவு பொறாமை-கொடுமையான பொறாமை! அதுவே அவளைக் குலைத்தது. வேண்டும்; அதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்! எங்கள் இருவர் பிரிவுக்கும் காரணம் அவள்தான்—இல்லை, இல்லை நான்தான்! இவ்வளவுக்கும் என்னுடன்-என்னை நேசித்தது போலவே, என் வாத்தியக் கலையையும் அவள் ஏன் நேசிக்கவில்லை? அந்தக் குழல் அவளை ஒன்றும் கோபித்துக் கொள்ளவில்லையே. ஆனால் அவள், நான் அவளை, என்னுடைய அருமைப் புல்லாங்குழலைவிட மட்டமாக நேசிப்பதாக நினைத்தாள். ஆம், அதுவும் வாஸ்தவந்தான்?" என்று நினைத்தான்.

அந்தத் தொண்டு கிழவன் எழுந்தான்; அவனது தளர்ந்த முகம் — ஆச்சரியத்தால் அகல விரிந்தது.

"எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. நான் அவளை அடித்தேன். அவள் மிகுந்த அழகியாயினும் அவளை வெறுத்தேன். என்னுடைய உழைப்பையும், குதூகலத்தையும் கெடுக்க வந்த கோடறிக் காம்பென்றே எண்ணினேன். யாரை? என்னுடைய காதலியை! உண்மையிலேயே என்னுடைய 'காதலி'. என்னுடைய பாபக்கைகளைத் தூக்கி—அவளது பொறு

மைத் தீயால் தூண்டப்பட்டு, அவளை அடித்தேன். அவள் அடி பொறுக்க மாட்டாமல், பின்னால் உருண்டு வெட்டுண்ட மரம்போல் தரையில் சாய்ந்தாள். எனது இளகிய மனம் அக் காட்சியைக் காணச் சகியாது அவளுக்கு உதவி செய்யச் செல்ல, அவள்—என் காதலி, என்னை உதைத்துத் தள்ளினாள்! அப்போது நான் அவளை உற்று நோக்கினேன்—தூர நின்றபடியே. அவள் ஓர் பெண் புலியைப் போன்று உறுமினாள்; சீறினாள். 'எட்டிப்போ, போ. என்னருகில் நில்லாதே. நீ என்னை நேசிக்கவில்லை. ஆனால் நான் எனது அன்பு பூராவும் உன்னிடத்திலேயே செலுத்தி யிருந்தேன். நீ என்னை அலட்சியம் செய்தாய். உனது நெஞ்சை, அந்த உயிரற்ற மூங்கில் துண்டுக்கு அர்ப்பணம் செய்தாய்; உன் மனம் உனது சொந்த நலத்தையும், கலையையும் நாடிற்று. நான் உனக்கு மிகவும் பிடித்தமானதை அழித்தேன்; நீ என்னை அடித்தாய். உன்னுடைய கொடுமைக் கைகளால் எனக்குக் கொடுக்கப்பட்ட அந்தக் குரூர அடிகளை நீ என்றென்றும் மறக்கமாட்டாய் என்பதை நினைக்க நான் சந்தோஷ மடைகிறேன். நீ காதலின் உண்மைத் தத்துவத்தை முழுதும் அறிந்து கொள்ளவில்லையாதலால், உன் வாழ்நாள் முழுவதும் துன்பமடையப் போகிறாய். நான் என்னமோ பைத்தியம் பிடித்தவள் போல் உளறுகிறேன் என்று நீ நினைக்கிறாய். நீ எனக்கு இப்போது பதில் கூறவேண்டாம்; நான் உன்னுடைய பாசமற்ற குரலை வெறுக்கிறேன். நீ இவ்விடம் விட்டகன்று போ. நீ விரும்புவது போலவே பெரிய வித்துவானாகவே யிரு; உன் காதலியாக அந்த மூங்கில் குழலையே வைத்துக் கொள். ஆனால் என்னுடைய வார்த்தைகளைக் குறித்து வைத்துக்கொள். நீ வாசிக்கும் புல்லாங்குழலோசை யெல்லாம் ஒருங்கு கூடி நின்றாலும் என்னுடைய குரலோசையை அமிழ்த்த முடியாது!" என்று கக்கினாள்!

இச் சம்பவம் அவன் மனக் கண்முன், மின்னல்போல் தோன்றி மறைந்தது. தளர்ந்து விழுவது போன்ற அவனது தசையற்ற முகத்தில், முத்துப் போன்ற நீர்த்துளிகள், பல பலவென்று இரு கண்களினின்றும் சொட்டிக் கொண்டிருந்தன.

## 2

"ஹா, நான் எவ்வளவு நன்றாக அவளுடைய பயங்கரக் கூச்சலையும், பார்வையையும் ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறேன். 'நான் அவளை ஒருக்காலும் மறக்கமாட்டேன் என்றும், அவளது கோபக்குரலோசைகளை, எனது புல்லாங்குழலோசைகள் எல்லாம் ஒருங்குகூடி எதிர்த்து நின்றாலும் அசைக்கமுடியாது' என்றும் அவள் அன்று கூறியது முற்றிலும் உண்மை, உண்மை! அந்தக் குழலோசைகள், என் காதுகளுக்கு அழுகுரல்களாகவே தோன்றுகின்றன. ஆனால் இவைகள் எல்லாம் முன்பு நிகழ்ந்தவை; இப்போது ஒருவரும் கவலை கொள்ளவில்லை. நான் மட்டும் கவலைப்படுகிறேன்!" என்று அவன் மனதினுள்ளே முணுமுணுத்தான். கீழேகிடந்த அந்தப் புல்லாங்குழலைக் குனிந்து மெதுவாகக் கையில் எடுத்தான்.

"வெகு ஆண்டுகளாக என்னுடன் பழகிய எனது அருமை நண்பா, இப்போதாவது என்மீது அன்புகூர்ந்து என்னுடன் பேசு. நீ கூட என்னைக் கைவிட்டு விட்டாய் என்று நான் நினைக்காதிருக்குமாறு என்னைச் செய். என்னுடைய கிழக்கைகள்—உன்னை எடுத்து ஒலிக்கக் கூட முடியாமல், அவ்வளவு வலிகுன்றிப் போயிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். அதற்காக, நண்பா, நீ என்னைக் கைவிட்டு விடாதே" என்று அதை நோக்கியவாறு கூறினான்.

தனது பழங் காதலை—அவளிடத்துக் கொண்ட உண்மைக் காதலை, குழலோசை மூலம் வெளிப்படுத்த காதல் வெறிகொண்டான் அக்கிழவன். ஆனால் அவனது பாபக் கைகள்—வலிமையற்ற கைகள் தனது கடமையைச் செய்ய மறுத்தன; புல்லாங்குழலைத் தாங்கவும் சக்தியற்றுத் துவண்டு கீழே சாய்ந்தன.

அவன் தனது இழந்த காதலைப்பற்றியும், வலிமையைப்பற்றியும், முதுமைக்

காலத்தில் ஏற்படும் அசக்தியைப் பற்றியும் நினைத்து அழுதுகொண்டேயிருக்கும் போது, அவனது அறைக்கதவுகள் 'படார்' என்று திறக்கப்பட்டன.

## 3

வீட்டு வேலைக்காரி, "தங்களை யாரோ ஒரு அம்மா தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று கூறினாள்.

கிழவர்—ஆம் கிழவர், ஆச்சரியத்தால் தலைகால் புரியாமல், "என்னைத் தேடிக் கொண்டா? ஒரு அம்மாவா? யாரது என் மேல், இந்தப்பாபி மேல், அவ்வளவு கவலை கொண்டு என் வீட்டைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறது! உள்ளே வரச்சொல்", என்று கூறினார்.

"நான்தான்", என்ற மெல்லிய குரலில் ஒரு மாது—தொண்டு கிழவி, உள்ளே வந்தாள்.

அவள் அப்போதுகூட நிமிர்ந்து, உயரமாய் இருந்தாலும், அவளது முகத்திலுள்ள தசைச் சுருக்கங்களும், செங்கருத்த தலைமயிர்களிடையேயிருந்து வெளியே எட்டிப்பார்க்கும் நரைமயிர்களும், அவளது வயோதிக ரகசியத்தை வெளிப்படுத்தின. அவளது வெளுத்த முகத்தின்மீது, அளவுகடந்த தொல்லையை அனுபவித்த அறிகுறிகள் மங்கலாக எழுதப்பட்டிருந்தன. அவளது தோற்றம், அந்த வயோதிக காலத்திலும், ஓர் கம்பீரத்துடனே தான் இருந்தது.

"நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லையா? நான் இம்மாதிரியான நிலைமையை எதிர்பார்க்கவில்லையே! தாங்கள் ஏன் என்னுடன் பேசமாட்டேன் என்கிறீர்கள்? என்மீதுள்ள கோபம் இன்னும் தணியவில்லையா; தாங்கள் என்னை மறந்துவிட்டீர்களா, ரமணு?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டே, ஜானகி ரமணனைத் தழுவிக்கொண்டாள்.

அக்கிழவர், அவளை உற்று நோக்கியவாறே எழுந்து நின்றார்; உடனே பளிச்சென்று அவருக்கு உண்மை வெளிப்பட்டது. ஆம்; அவள் தனது பழைய காதலி—ஜானகிதான்! என்ன வேகம்! என்ன விறுவறுப்பு! மற்றொருபக்கம் வெறுப்பு!

"நான் உனது குரலை அறிந்து கொண்டேன்; ஆனால் அது முன்பு உபயோகித்ததைவிட மெலிந்தும், இனிமையாகவும் இருக்கிறது. நீ ஏன் இங்கே வந்தாய்? உன்னை நான் இழந்து தவித்தது போதாதா? உன் மனம் திருப்தி யடைந்திருக்கும் என நினைக்கிறேன். எனது கடைசி சில மணிகளையும் இருளடையும் படிச்செய்ய மறுபடியும் நீ வந்து விட்டாயா என்ன? இது கொடுமை-கொடுமை! நீ போ, போ, இவ்விடம் விட்டுப்போ", என்று கோபத்வனியில் கூறிக்கொண்டே, மயக்கமுற்று சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். மறுபடியும், மெதுவாக, "இருந்தாலும் எனது கிழமனம் உன்னைக்காண சந்தோஷ மடைகிறது. உன்னுடைய வதனம், ஜானகி, மாறியிருக்கிறது. என்னைப்போல முதுமையை யடைந்துவிட்டாலும், நீ இன்னமும் திடமாய் இருக்கிறாய். காலம், என்னைவிட உன்னிடம் கருணைகாட்டி யிருக்கிறது!" என்று கூறினார்.

அவள் ரமணனெதிரில் முழந்தாளிட்டு, அவரது உலர்ந்த, பசையற்றகைகளை முத்தமிட்டாள்.

"நான் தங்களது வாழ்க்கையை இன்பமயமாக்க வந்தேனேயன்றி, தாங்கள் நினைப்பதுபோல், தங்களுக்குத் துன்பம் உண்டாக்க வரவில்லை. நான் இத்தனை நாட்களும், என்னைப்போன்ற பல சீர்திருத்த வாதிகளுடன், வெகு தொலைவிலிருந்த ஒரு நகரத்தில், தொண்டுசெய்து வந்தேன். ஆனால் நான் தங்களை நினைக்கும்போதெல்லாம், நான் செய்ய நினைக்கும் நற்காரியங்கள் என்னைக் கண்டு எள்ளி நகையாடுவதை என் மனக் கண்களால் கண்டேன். எனது அருமை ரமணு, சிலாது மனம்விட்டுக்கொடுக்காது; மறக்கவும் மறக்காது. நான் தங்களை காதலித்தேன்; தாங்கள் என்னை அலட்சியம் செய்தீர்கள். என்னுடைய காதல் - ஓர் அற்புதமாயினும் தன்னலம் கூடிய ஒன்றாயிருந்தது. அது தன்னைத்தான் கவ

னித்துக் கொண்டதே தவிர, அதன் பலனையடைய எண்ணங் கொள்ளவில்லை. அப் பழைய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து வெகு நாட்களாகிவிட்டன. நாமும் கிழவர்களாகிவிட்டோம். நமது காதற் பேச்சுகளைக் கேட்டு இளமை நகைக்கும். இது இப்படியிருக்க, நாங்கள் அந்த நகரத்தில் இருக்கும்பொழுது, எனது அருமை பெற்றோர்கள் அவ்விடமே யிறந்துபோக நான் பல புதிய சினேகங்களிலேயும், உத்சாகங்களிலேயும் மூழ்கிக்கிடந்தேன். கடைசியாக எனக்குச் சுயவுணர்ச்சி ஏற்பட்டபோது, தங்களை நாடி குற்றம் என் மேல்தான் என்று ஒப்புக்கொள்ள என் மனம் தூண்டிற்று. ஆகவே நான் இப்போது இவ்விடம் வந்தேன். இப்போது என்னைத் தாங்கள், தங்கள் வாழ்நாளைப் பாழாக்க வந்தவள் என்று நினைக்கிறீர்களா? பதில் சொல்லுங்கள், ஒரே ஒரு வார்த்தை" என்று மள, மளவென கேட்டுக்கொண்டிருந்தாள்.


ரமணன் தனது தலையை அவளது தோளின்மேல் சாய்த்துக்கொண்டார்.

" நான் கிழவன். உன்னோடு விளையாட சமயம் இது அல்ல. எனது உண்மையன்பு, உன்னை இவ்விடம் இழுத்து வந்தது. ஜானகி! நான் சாகுந்தருவாயில் இருக்கிறேன். பல மாதங்களாக வியாதிப்பட்டிருந்த எனக்கு இன்றைய நிகழ்ச்சி இன்பமளிக்கிறது. இவ்வின்பத்தை இப்போது என்னால் சகிக்க முடியவில்லை. ஆனால், ஜானகி, குற்றமெல்லாம் என்னுடையதுதான்.

நான் உன்னை நேசித்தேன்; ஆனால் என்னுடைய பெருமையும், வாத்தியமும் உன்னைவிட எனக்கு அருமையாயிருந்தன. காதலும், சங்கீதமும் ஒன்று; அவை ஒவ்வொன்றும் தங்களுக்குள்ளேயே இன்பத்தையும், அபிவிருத்தியையும் பரிமாறிக் கொண்டே யிருக்கின்றன என்பதை நான் இப்போதுதான் தெரிந்துக்கொண்டேன். நான் தற்போது ஓர் பெரிய வேதாந்தியாகிவிட்டேன் என்று நினைக்கிறேன். ஜானகி, என்னை மன்னித்துவிடு. எனது குற்றத்தை மறந்துவிடு. நாமிருவரும் வெகுநேரம் சேர்ந்திருக்கமாட்டோம்", என்று கூறினார் ரமணன், மெல்லிய குரலில்.

ஜானகி, அவரை முத்தமிட்டுத் தழுவிக்கொண்டாள். அக் கிழவரது கைகள் ஏதோ ஒன்றை நாடித் தரையைத் துழாவின. சாகுந்தறுவாயிலாவது அவரது ஆசையைப் பூர்த்திசெய்ய அருகிலிருந்த - அவரது கலைத் தெய்வத்தை - புல்லாங்குழலை எடுத்து அவள் அருகில் வைத்தாள் ஜானகி. ரமணன் அதை நோக்கிப் புன்சிரிப்புச் சிரித்தார். அவர் மனம் சாந்தி அடைந்தது. அவளது மார்பின்மேல் தனது தளர்ந்த தலையைச் சாய்த்தார்.

அவர்மேல் அவரது கிழக்காதலி சாய்ந்து, விம்மி, விம்மி அழுதுகிடக்க, தனது கலைச்சின்னம் அருகில் சப்தமின்றித் தூங்க, சாகுந்தருவாயில் யாவரும் ஒருங்குகூடி யிருக்க, ரமணனது ஆத்மா இம் மண்ணுலகுவிட்டு விண்ணுலகு அடைந்தது!



# புலி வேட்டை

[ஸி. ஸத்யவதி]

விகாராபாத் என்னும் ஊருக்கு மூன்று மைலில், சிறிய கிராமமான, கொத்தகடாவில் நாங்கள் 'கேம்பு' போட்டுக்கொண்டிருந்தோம். இவ்வூரைச் சுற்றிலும் நைஜாம் சர்க்காருடைய ஷிகார் காடு இருந்தது. இதில் பலவித காட்டு மிருகங்கள் இருப்பதாகக் கேள்வி.

இவ்விடத்திலிருந்து மூன்று, நான்கு மைல்களுக் கப்பால் ரோடுக்கு இருபுறத்திலும் மலையும், அடர்ந்த காடு மிருக்கின்றன. சமீபத்திலிருக்கும் இவ்வழகிய தோற்றத்தையும், மிருகங்களையும் காண ஆவல்கொண்ட நாங்கள், அவ்விடம் செல்வதென்று தீர்மானித்தோம். ஆனால் அங்கிருக்கும் மிருகங்களைச் சுடக் கூடாதாம். குண்டு ஓசை கேட்டால், போலீஸ் புலி வாயில் அகப்பட வேண்டியதென்று சட்டமாம்.

காட்டை நோக்கி இராத்திரி எட்டு மணிக்கு, பொங்கல் பௌர்ணமி மறுதினம், எங்கள் மோட்டாரில் புறப்பட்டோம்.

என் கணவர் பார்ட்டிக்குத் தலைவர். இவர் காலேஜிலிருந்த நாளில் யு. டி. ஸி. யில் பயிற்சி பெற்று, ஷூடிங் போட்டியில் அசங்காத "டார்ஜெட்டை" ஐந்து நிமிஷ நேரம் குறி பார்த்துச் சுட்டு 'டார்ச் லைட்' பிரைஸ் வாங்கிய தீராதி தீரன்! இதற்கும், இப் புலி வேட்டைக்கும் நடுவில்கூட அவர் 401 குண்டுகளை, புறா, குருவி, காக்கை முதலிய பக்ஷி வர்க்கத்தின்மீது லாபத்தை எதிர்பார்க்காமலே பிரயோகித்தது முண்டு.

மற்றொருவன், ட்ரைவர். இவன் கர்நாடக பட்டாளத்திலிருந்து யுத்த களத்தில் போர் புரிந்த நாயக்க வம்சத்தில் ஜனித்த சூராதி சூரன். எங்கள் கேம்பு சிப்பந்தியைச் சேர்ந்த மற்றொருவன் பயமென்றால் கருப்பா, சிகப்பா என்னும் கேள்வியைக் கேட்கும் மைசூர் புலி. இதைத் தவிர இப்பார்ட்டியில் என் பிள்ளையான எழு வயது சிறுவனும் சேர்ந்துகொண்டான். இவன் கம்பீர தோரணையில் இம் மூவரையும் மூன்று குணத்தாலே எதிர்ப்பவன் தானொருவனே என்ற வாச்சாலிக்ய தைர்யசீலன். இதில் நான் ஒருத்திதான் பெண். நான் வெகு தைர்யசாலி என்ற பாவத்தில் புறப்பட்டவள்.

தீராதி தீரன் கையில் "விஞ்செஸ்டர்" ரைபில்; மற்ற இருவரிடமும் இரண்டு டார்ச் லைட்டுகள்; பையனிடத்தில் சிறிய "பில்ஹூக்". என்னிடம் ஒன்றுமே இல்லை.

கேம்பிலிருந்து புறப்பட்டு, காட்டிற்குள் காரைச்செலுத்தினோம். சிறிது தூரம் சென்றதும், அதற்கப்பால் நல்ல பாதை யில்லாததால், அங்கேயே காரை நிறுத்திவிட்டு நாங்கள் ஐவரும் காட்டிற்குள் நடந்து சென்றோம்.

தனக்கு பயமில்லையென்பதைக்காட்டிக் கொள்ள சிறுவன் பில் ஹூக்கை முன் நோக்கியவாறு பிடித்துக்கொண்டு முதலில் நடந்தான். அவனைத்தொடர்ந்து நாங்கள் மெதுவாகச் சென்றோம். மறைந்து கொண்டிருந்தால் புலி வரலாமென்று நினைத்து ஓர் புதரின் கீழே உட்கார்ந்து கொண்டு அம்மிருகத்தை எதிர்பார்த்தோம். தீரசாலி பேசுங்குரல் கேட்டால் மிருகங்கள் வராதென்று எச்சரித்திருந்தபடியால் வாயை மூடிக்கொண்டு அமர்ந்திருந்தோம். சில சமயத்தில். தைர்யசாலி பயத்தை எதிர்த்துப் பேசத்தொடங்கினான். சூரசாலி டார்ச்சைப்போட்டு, புதரில், புலி, கிலி இருக்கிறதாவென்று அடிக்கடி சோதித்துக்கொண்டிருந்தான். சிறுவனும் தீரசாலியும் ஆயுதங்களை சித்தமாக வைத்திருந்தார்கள்.

சுட எண்ணமே கிடையாது. சுட்டால் போலீஸ் புலி நம்மீது பாயக்காத்திருக்கிறதே. எங்கள்மேல் புலியோ கரடியோ பாயவந்தால், அல்லது அபாயந்தோன்

றினலொழிய குண்டை உபயோகப்படுத்த எண்ணமில்லை.

அந்தப்புதரிலிருக்கும் வரையில் காட்டி லிருக்கும் இயற்கையான சப்தம் தவிர மற்றெவ்விதமான மிருகசப்தங்களும்கேட் கவில்லை. அதற்காக நாங்கள் இன்னும் சிறிது தூரம் சென்றால் ஏதாகிலும் பார்க் காலாமென்ற யோசனையில் அவ்விட மிருந்து புறப்பட்டோம். எங்கள் செருப்பு ஓசை தவிர வேருவிதசத்தடி கிடையாது. முன்னை விட அடர்ந்த புதரை நாங்கள் அடைந்தோம். சில நிமிஷங்கள்கழித்து சிறுத்தை உருமும் சப்தமும், இன்னும் சில காட்டு ஜந்துக்களின் ஓசைகளும் கேட்டன.

இந்த சப்தங்களைக் கேட்ட பயத் தாலோ, அல்லது இதைக் கண்ணால் காண விரும்பியதாலோ, தெரியாது, தீராதிதீரன் ரைபலுடன் அவ்விடமிருந்தே திரும்பி விட்டான். பிறகு எங்களிடம் மோடாரிலே இன்னும் கொஞ்சதூரம் செல்லலாமென்று கூறி, வந்தவழியே திரும்பி, ஓர் மைலுக் கப்பால் நாங்கள் நிறுத்திய மோடாரை அடைந்தோம். எனக்கு மாத்திரம் உள்ளூர பயம்தான். நான் ஜபித்த கிருஷ்ண நாமத்துக்கு எண்ணிக்கையே கிடையாது. பாவம்! பகவான் அந்த நிசி ராத்திரி வேளையில் தன்னையும் எங்கே வேட்டை மோகத்தில் அமர்த்தி விடுகிறார் களோ என்ற பயத்தாலும், தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு குளிரில் வர மனமிரா தவராய் காஷ்மீர் சால்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு என் க்ருஷ்ண நாமம் ஒவ்வொன்றுக்கும், குறட்டை விட்டு தூங்கியிருக்கவேண்டும்.

மோட்டாரை அடைந்ததும் எங்களைத் திடுக்கிடச் செய்த விஷயத்தைக் கண்டு பிடித்தோம். மோட்டாரில் ஓர் பையில் வழிக்காக, சில தின்பண்டங்களும், பழங் களும், ஓர் ஸோபு, டவல் ஒன்று, ஷிகார் கத்தி, ரைபல் குண்டுகள், மற்றும் சில உபயோகமற்ற சாமான்கள் வைத்திருந் ததைக் காணவில்லை. ஆள் பேரில் சந் தேகம்விழ எங்கள் எதிரில் ஆளோ, அல்லது வண்டியோ செல்லவில்லை.

சூராதி சூரனும், தைரியசாலியும், இரண்டு டார்ச்சுகளுடன் கீழே பாதங் களைக் கவனித்தார்கள்போ லிருக்கிறது. அவைகள் புதிதாகவும் கார் பக்கத்தி லிருந்து தோன்றியதாகவும் இருந்ததால் அதைப் பிடித்துக்கொண்டு ஓர் மேட்டுக் குச் சென்றார்கள். அங்கே அச்சின்னங்கள் அவர்களை நாலாபக்கமும் திண்டாட வைத்து ஏமாற்றிவிட்டது.

தீராதி தீரன் மற்றொரு பக்கம் ரைப லுடன் நகர்ந்துவிட்டார். காரில் நானும் பையனும்தா னிருந்தோம். பையனோ "எல்லோருமே சென்றுவிட்டார்களே" இப்பொழுது நம்மை, புலி கிலி பாயவந் தால் என்ன செய்வதென்ற திகில் நாலா பக்கமும் பார்த்துக்கொண் டிருந்தான். நானோ கிருஷ்ண நாமமே கதியென்று அலறிக்கொண்டிருந்தேன்.

இப்படி யிருக்கையில் ஒரு பக்கத்தி லிருந்து சிறிய வெளிச்சம் தென்பட்டது. அதைக் கவனித்த நான் "இதுதானே புலி. ராத்ரி வேளையில் புலியின் கண் நெருப்புமாதிரி யிருக்கு மென்பார்களே, ஆனால் ஓர் கண்தானே தெரிகிறதென" நடுக்கத்துடன் பார்க்கலானேன். பையன் கத்தியை வெளிச்சம் வரும் திக்கை நோக்கிப் பிடித்தான். வெளிச்சமோ, ஓர் பக்கம் ஊர்ந்துகொண்டு வந்தது. இதற் குள் மறைந்திருந்த சந்திரனும், அவனு டன் வாயுபகவானும் காக்ஷி அளித்தனர். காற்றினாலும், வெளிச்சத்திலிருந்து வரும் புகையினாலும் வெளிச்சம் சிகரெட்டென் றும், ஊர்ந்துவருவது தீராதிதீரனும் ரைபல் பூஷணருமான, ஸ்ரீமான் என் கணவரென்று தெரிந்தது. நான் பயந் தெளிந்து ஓர் பெருமூச் செறிந்தேன்.

மேட்டுமேல் சென்ற இரண்டு பேரும் அவ்விடம் ஒன்றும் புலன் அறிய முடியா மல், சென்ற திக்கின் வழியே திரும்பி ரஸ்தாவில் பாத வேட்டைக்கு ஆரம்பித் தார்கள்.

இப்படி இவர்கள் அல்லாடிக் கொண் டிருக்கையில் நாங்கள் வந்த பக்கத்தி லிருந்து இரண்டு காலி வண்டிகள் வந் தன. தைர்யசாலி யானவர் அவர்களிடம்

போய், பையைப்பற்றிச் சொல்லிவைத்தால் இன்று இல்லா விட்டாலும் நாளைய தினமாவது அகப்படலாம் என்ற உத்தேசத்துடன் "எம்ப்பா ஏதாவது பையைப் பார்த்தாயா?" என்ருர். அவர்கள் " பையா அது உங்களுடையது தானு?" என்று தங்கள் ஆட்டுக் கம்பளியில் சுற்றி வைத்திருந்த ஓர் பையை எடுத்துக் கொடுத்தார்கள். ஆனல் அதில் ரைபல் குண்டுகளையும், உபயோகமற்ற சாமான்களையும் தவிர, மற்றதெல்லாம் ஷிகார் கத்தி உள்படக் காணவில்லை. அவர்களை மிரட்டி, உருட்டி வண்டிகளையும் சோதித்தோம் ஆனல் இந்த வஸ்துக்கள் அவர்களிடம் காணவில்லை. இந்த பை எப்படிக் கிடைத்ததென்று மிரட்டியதற்கு, வழியில் விழுந்திருந்ததாகவும், அது பார்ப்பதற்கு போலீஸ்பை மாதிரி இருந்ததால் எடுத்து வைத்ததாகவும் கூறினர்கள். வழியில் யாராவது, மனிதர்களோ, அல்லது வண்டியோ தென்பட்டதா வென்று கேட்டதற்கு ஆள்யாரும் தென்பட வில்லை யென்றும், இரண்டு வண்டிகள் மாத்திரம் சமீபத்தில் பார்த்ததாகவும் பதிலளித்தார்கள்.

பிறகு, இதைப்பற்றி அவர்களை மறுதினம் விசாரிக்கலா மென்று, அவர்களுடைய ஊர்பேர் முதலியவைகளை எழுதிக்கொண்டு, வண்டி வேட்டைக்காக அவ்விட மிருந்து புறப்பட்டோம். நானும் பையனும் வழியில் 'கேம்ப்' இறங்கி விட்டோம். மற்ற மூன்று தைர்யசிகாமணிகளும் வண்டிகளை அறிய விகாரா பாதைக்கும் சென்று அதன் ஜாடையே தெரியாமல், திரும்பி விட்டார்கள்.

புலிவேட்டையா யிருந்தால் என்ன? அல்லது வண்டி வேட்டையா யிருந்தால் என்ன? ஏதோ ஓர் வேட்டை யாடினேம் என்பதில் ஓர் மனச் சாந்தி ஏற்பட்டது. அபசகுன கேள்வி, பலனைக் கொடுக்காமல் வீணுகுமா?

மான் கொம்பால் பிடிப்போட்டு, பித்தளையால் பூண்போட்டு, மடிக்கும் மலயாளத்து கத்தி உங்கள் யாருக்காவது அகப்பட்டால் எங்களிடம் தயவுசெய்து சேர்த்து விடுங்கள்.


இன்ஷ்யூர் செய்யுங்கள்!

# ஜூபிடர் ஜெனரல்

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

கீழ்க்கண்ட இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களை கவனிக்கும்:

ஆயுள், மோட்டார், நெருப்பு, பஸ், டாக்ஸி, கப்பல், தொழிலாளர் நஷ்டஈடு, சமுத்திரம், ரெயில்வே, தபால்

**பிரபல இந்திய இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**

வாக்களிக்கப்பட்ட மூலதனம்:

**ஒன்றரைக்கோடி ரூபாய்**

எங்கும் ஏஜண்டுகள் தேவை

பிராஞ்சு ஆபீஸ்:

**99, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.**

பிராஞ்சு மானேஜர்: N. வெங்கடராம அய்யர்.

# ஆராதனை

[ஆ. வே. ஜேயராமன்]

தெருக்கோடியில் "ராதாகிருஷ்ணனை பஜித்திரு மனமே, ராவும் பகலுமாக" என்ற பாகவத கீதம் ரீங்காரம் செய்ய ஆரம்பித்த உடனே, ஒவ்வொரு வீட்டு வாசலிலும், டம்ளரில் அரிசியை வைத்துக்கொண்டு, குழந்தைகளும் ஸ்திரீகளும் பாகவதர் தரிசனத்துக்குக் காத்துக்கொண்டிருப்பார்கள். அவர் வந்தவுடன், அவ்வீட்டு ஸ்திரீ அவருடைய சொம்பில் அரிசியைப் போட்டுவிட்டு, மூன்றுதரம் பிரதக்ஷிணம் வந்து நமஸ்கரிப்பாள். பாகவதர் "வந்தே பத்மகராம் ப்ரஸன்னவதனாம், ஸௌபாக்கியதாம் பாக்கியதாம்," என்று பாடிக்கொண்டே ஆசீர்வதித்துவிட்டு அடுத்த வீட்டு வாசலுக்குச் செல்வார். குழந்தைகள் வந்து அரிசி போட்டால், அவர்களுடைய முகவாய்க்கட்டைகளை அன்புடன் கிள்ளி பரவசமடைந்தவராய், "வந்தாளே மஹாலக்ஷ்மி, சந்தேஹமில்லே வந்தே" என்று அக்குழந்தைகளுடன் இவரும் குதித்துப் பாடுவார். இவ்விதமாக ஆடிப் பாடிக்கொண்டு வீட்டுக்குச் செல்வதற்குள் மணி பத்தாகிவிடும்.

பரம்பரை பரம்பரையாக உஞ்ஜவிருத்தி செய்து ஜீவிக்கும் குடும்பத்தில் பிறந்தவர் சேஷ பாகவதர். அவருடைய முன்னோர்கள் பிதிரார்ஜித சொத்தாக விட்டுப்போனது ஓர் தாமிரச்சொம்புதான். அவர் தகப்பனார், தான் சம்பாதித்த சொத்தாக விட்டுப்போனது ஓர் பொத்தல் காசிப் பட்டுதான். அவர் மனைவி அவருடன் சேர்ந்து வாழ்க்கை நடத்தியதன் ஞாபகார்த்தமாக விட்டுப்போனது ஓர் பெண் குழந்தைதான்.

கல்யாணிக்கு பன்னிரண்டு வயதிருக்கும். வயதில் சிறியவளாக இருந்தாலும், காரியத்திலும், அப்பாவுக்கு சிச்சுருஷை செய்வதிலும் பெரிய ஸ்திரீயைப் போலத்தான். பாகவதர் வெளியே நாய் போல அலைந்துவிட்டுக் களைத்து வீட்டில் நுழைந்ததும் கல்யாணியைக் கண்டால் அவருடைய சிரமமெல்லாம் சிட்டாய்ப்பறந்துவிடும். "அப்பாடா" என்று அவளுடைய நிழலில் சிரமபரிகாரம் செய்துகொள்ள உட்கார்ந்து விடுவார்.

அப்பாவைப் பார்த்ததும் கல்யாணி, தயாராக வைத்திருந்த தண்ணீரால் அவருடைய பாதத்தை அலம்பி, அந்தத்தண்ணீரைத் தலையில் தெளித்துக் கொண்டு பாதங்களைக் கண்ணில் ஒத்திக்கொள்வாள். பட்டையும், அரிசி நிறைந்த சொம்பையும் எடுத்துக்கொண்டு போய் உள்ளே வைத்து விட்டு, ஓர் ஈய அடுக்கில் தாக சாந்திக்கு நீர்மோர் கொண்டு கொடுத்த பிறகுதான் அவர்பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பிப்பாள்.

சிறிது களைதீர்ந்ததும், பாகவதர் எழுந்து ஸ்நானம் பண்ணி மடியுடன் பூஜைக்கு உட்கார்ந்தால், பூஜை முடிய இரண்டு மணி சாவகாசம் பிடிக்கும். அதன் பிறகு பகவானுக்கு ஆராதனை நடக்கும். அது ஆனதும் வெளியே யாராவது அதிதிகள் வந்திருக்கிறார்களா என்று பார்த்து விட்டு உண்ணச் செல்வார்.

அன்றன்று உஞ்ஜ விருத்தியில் கிடைக்கும் அரசி அன்றன்றே செலவழிந்துவிடும். அரிசி அதிகமாகக் கிடைத்தால். மீத்து வைப்பது அவருடைய வழக்கமல்ல; குறைந்தாலும் அதற்காகச் சிரமப்படுவதும் கிடையாது. கல்யாணி மட்டும் சில சமயம் "அப்பா, ஒரு நாள் தேக அசௌக்கியம் எற்பட்டு வெளியே செல்ல முடியாமல் போனால், அன்று பட்டினி போட வேண்டியதாக இருக்குமே. ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்தால், அப்பொழுது அது உபயோகப்படாதா?" என்று கேட்பாள். அவரோ ஒரு வசீகரப் புன்சிரிப்புடன், "அம்மா கல்யாணி, அப்பொழுது கிருஷ்ணன் நம்மைக் காப்பாற்றுவார். பக்தர்களைப் பட்டினி போட மாட்டான் பரந்தாமன்,"

என்று கூறி அவளுடைய மயிரை அன்புடன் கோதித் தள்ளிவிடுவார். கல்யாணிக்கு பாகவதர் கூறுவதில் சிறிதும் நம்பிக்கை கிடையாது. அவள் குழந்தை தானே. உலகில் நிச்சயமாகச் செய்ய முடியும் என்பதைத்தான் அவளால் கற்பனை செய்ய முடியும். அதல்லாமல் யாரும் நினைக்க வொண்ணாத காரியம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்ய அவளுக்கு சிரம சாத்தியமாக இருந்தது.

ஒரு புரட்டாசி சனிக்கிழமை. அன்று பாகவதர் வெகு சீக்கிரமாக எழுந்து, காவேரியில் ஸ்நானம் பண்ணிவிட்டு, மடி உடுத்தி, ஜால்ரா சொம்பு சகிதமாக உஞ்ஜவிருத்திக்குக் கிளம்பிவிட்டார். கல்யாணி அவரை மூன்று தரம் பிரதக்ஷிணம் வந்து நமஸ்கரித்தாள். அவர் மனப்பூர்வமாக அவளை ஆசீர்வதித்தார். அன்று சீக்கிரமே பகவானுக்கு ஆராதனை நடத்த வேண்டுமென்பது அவருடைய அவா.

அவர் எண்ணியபடியே எட்டு மணிக்குள் சொம்பு நிறைந்து விட்டது. எங்கும் தங்காமல் நேராக வீட்டை நோக்கி நடந்தார். அவர் வீட்டுக்கு எதிரே ஒரு கும்பல் "கோவிந்தா, கோவிந்தா, வடக்கு மலையானுக்கு ஒரு கோவிந்தம் போடடா, கோவிந்தா, கோவிந்தா." என்று கோவிந்தத்தை அழைத்துக் கொண்டிருந்தது.

இந்த சப்தத்தைக் கேட்டு கல்யாணி கதவைத் திறந்துகொண்டு வெளிவந்தாள். நாமஞ்சாத்தியிருந்த தரித்திர நாராயணர்களைக்கண்டதும் அவளுக்கு பச்சாத்தாபம் உண்டாயிற்று. அவர்களைப்பார்த்து "அப்பா, நாங்களும் உங்களைப்போல பிச்சையெடுத்து சாப்பிடுகிறவர்கள். அன்றன்றிக்கு கிடைப்பது அன்றன்று செலவாகிவிடுகிறது. உங்களுக்கு ஒரு பிடி போடுவதற்குக்கூட அரிசி இல்லையே" என்று தழதழத்த குரலில் கூறினாள். இந்த சமாதானத்தைக் கேட்டவர்களும், கேட்காதவர்களும் ஒரே கோவிந்த சப்தம் போட்டுக்கொண்டு அடுத்த வீட்டுக்கு நகர்ந்து விட்டனர்.

கல்யாணியின் சமாதானத்தையும், தரித்திர நாராயணர்களின் கூக்குரல்களையும்



கேட்ட பாகவதர் கண்களில் கண்ணீர் குப்பென்று கிளம்பி நின்றது. வீட்டு வாசலில் நின்றுகொண்டு கல்யாணி அவருடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள். வீட்டுப்படி ஏறியவர் அப்படியே நின்று "அம்மா கல்யாணி, அவர்களைப் போகச் சொல்லிவிட்டாயே. சிறிது நேரம் இருக்கச் சொல்லக் கூடாதா?" என்று கூறி முடிக்குமுன் "கோவிந்தா, கோவிந்தா" என்று கூவிக்கொண்டு ஐந்தாறு சிறுவர்கள் சொம்புகளைத் தூக்கிக்கொண்டு வந்தனர். அச்சிறுவர்களைக் கண்டதும் பாகவதருக்கு ஆனந்தம் பொங்கியது. தன் சொம்பிலிருந்த அரிசியை பிடிப்பிடியாக எடுத்துப் போட்டார். அச்சிறுவர்கள் வந்தவழியே மற்றொரு கும்பல் கோவிந்த நாம பஜனையுடன் பிரசன்னமாயிற்று. கை இடுவதை மனம்கூட அறியக் கூடாது என்று நீதிநூல்கள் கூறுகின்றன. அதேபோல பாகவதரும் தன் மனதைப் பரந்தாமன் திருவடிகளில் ஊன்றிக்கொண்டே, அரிசியைப் பிடிப்பிடியாக அள்ளிப்போட்டார்.

இதைக்கண்ட கல்யாணி திகைத்துவிட்டாள். சொம்பில் அரிசி குறையக் குறைய அவள் மனம் திக் திக்கென்று அடித்துக்கொண்டிருந்தது. சொம்பில் ஒரு பிடி அரிசிதான் பாக்கி. அதையும் அள்ளக் கை சென்றுவிட்டது. "அப்பா! அப்பா!" என்று கூவினாள் கல்யாணி. "அவசரப்படாதே அம்மா, இதைப்போட்டு விட்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டே மிகுதியிருந்த ஒருபிடி அரிசியையும் கடைசி 'கோவிந்தா'வுக்குப் போட்டார்.

"சொம்பு காலி!"

கல்யாணிக்கு ஒன்றும் தோன்றவில்லை. நாக்கு குழறிற்று, குபீலென்று உடம்பு பூராவும் வியர்த்து விட்டது. "அப்பா, கிருஷ்ணனுக்கு ஆராதனை!" என்றாள் கண்ணும் கண்ணீருமாய் கல்யாணி.

"ஆராதனை! அம்மா கல்யாணி நேற்று வரை கிருஷ்ணன் நம் அன்னத்தை உண்ணவில்லை. நாம்தான் உண்டோம். ஆனால் இன்றோ சாக்ஷாத் கிருஷ்ணன்தான் உண்டான். அவன் உண்ண உண்ண நான் எடுத்து எடுத்துக் கொடுத்தேன்," என்று கூறி ஆநந்த மிகுதியினால் அசைவற்று உட்கார்ந்துவிட்டார்.

"கோவிந்தா! கோவிந்தா!"

பிரமித்து பரமானந்தத்தில் மூழ்கியிருந்த பக்தர் திடுக்கிட்டார். தன் எதிரே ஒரு தள்ளாக்கிழவன், தகர டப்பாவை வைத்துக்கொண்டு பிச்சையை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்பதைக் கண்டதும், அவருடைய கை, தானாகவே சொம்புக்குள் சென்றது. ஆனால் ஒருமணி கூட அதில் இல்லை. அவர் மனம் சுழன்றது, கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சொம்பை எடுத்தார், "அப்பா, என்னிடம் இதுதான் இருக்கிறது, எடுத்துக்கொள்" என்று கூறிக்கொண்டே அதை அவனிடம் கொடுத்தார்.

"அப்பா! அப்பா! நாளைக்கு உஞ்ஜவிருத்திக்கு" என்று அலறினாள் கல்யாணி.

"அடி பைத்தியமே, பரந்தாமன் கொடுப்பான்" என்று கூறிக்கொண்டே பக்தி பரவசராய்க் கூத்தாடினார்.

மாதர் வியக்கின்றனர் —
ஆடவர் மதிக்கின்றனர்

கேஸ்ரின்
கேசத்திற்கு வளர்ச்சியை தரும்.
விக்டோரியா டிப்போ, மைலாப்பூர், சென்னை

# வெல்வது யார்? மனிதனா, பூச்சியா?

[ர. சந்திரசூடன் பி. எஸ்ஸி]

சில தினங்களுக்கு முன் ஒரு செய்தித் துணுக்கு பத்திரிகைகளுக்கு அனுப்பும் பொழுது என் கண்ணில் பட்டு என்கவனத்தை இழுத்தது. (Locust)லோகஸ்ட் என்ற பாலைவன வெட்டுக்கிளிச் சேனை யொன்று பறந்து சென்றுகொண்டிருக்கையில்ஜோதிபுரம் (Jodhpur) என்னுமிடத்தருகில் ஒரு ரயில்வண்டித் தொடரையே மேலே செல்லவிடாமல் தடுத்த தாம். நம்ப முடியவில்லையா? ஆனால் முற்றிலும் உண்மை. இந்தச் செய்தியைக் கண்டதும் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் பிரசித்தி பெற்ற அமெரிக்க சாஸ்திர நிபுணர் ஹோவர்டு (O Howard) விடுத்த பின் வரும் எச்சரிக்கை நினைவிற்கு வந்தது: "மக்களே நாளை, நாளை, என்று அருகில் நெருங்கி வந்துகொண்டிருக்கும் அபாயத்தை உதாசீனம் செய்தீராயின், பின்னொருநாள் அந்த அபாயம் உங்களை நாற்புறமும் சூழ்ந்து உங்களை மிஞ்சிவிடும். அது நம்மை நெருங்கி முட்டுமுன் நாம் விழித்து எழுந்து அதை வெல்ல முயற்சித்தல் அவசியம். இப்பொழுதே முன்னேற்பாடுகள் செய்துகொள்ளாவிடில் நம் எதிரிகள் நம்மைப் பூண்டோடு அழித்து விடக் கூடும்," என்று அரை கூவினர். "யார் இந்த எதிரி இவ்வளவு நாம் பயப்படுவதற்கு? நாஜீ ஜெர்மானியரா? அவர்களுக்கு கூடத்தான் இவ்வளவு நடுங்க வேண்டுமா ?" என்ற கேள்வி பிறக்கலாம்.

இந்த எதிரி மனிதவர்க்கத்தையே சேர்ந்த தல்லவாதலால்தான் அதனால் உண்டாகும் அபாயம் இன்னும் அதிகம். எதிர்பார்க்குமிடத்திலிருந்து ஆபத்து வந்தால் நாம் முன்னெச்சரிக்கையாக இருந்து ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாம். இதுவோ நாம் எதிர்பார்க்காத ஓர் எதிரி—பூச்சிகள்.

மனிதவர்க்கம் இவ்வுலகின்கண் ஏறக்குறைய நாலு லக்ஷ வருஷங்களாக இருந்து வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதுவே உங்களைத் திகைக்கச் செய்கிறதோ? பூச்சி ஜாதிகளோ சுமார் 50 லக்ஷ வருஷங்களாக வாழ்ந்து வருவதாக ஒரு புள்ளியில் சொல்லப்படுகிறது. மனிதர் இங்கு உற்பத்தியாவதற்கு அனேக லக்ஷ வருடங்களுக்குமுன் மீன் ஜாதிகளும், பின்னர் ஊர்வனவும், பின் தத்தித்தத்தி நடப்பனவுமான பிராணிகளும் தோன்றின. இதன்பிறகு பூச்சி வர்க்கமும், அவற்றைத் தொடர்ந்து யானை, பசு, மான், ஆடு, குரங்கு, போன்ற மிருகங்களும் உண்டாயின. இவைகளுக்குப் பின்னர் தான் சிருஷ்டி ஏணியில் நாம் இருக்கும் படிக்கட்டு.

மனிதன் சிருஷ்டி வர்க்கத்தில் தான் தான் மேம்பட்டவனென்றும், பகுத்தறிவுள்ள பிராணி யென்றும், உலக சகல ஜீவராசிகளையும் ஆண்டு வருவதற்கே தன்னைச் சிருஷ்டிகர்த்தா படைத்திருப்பதாகவும் மதியீனமாக எண்ணி வாழ்கிறான். இதுவரை சென்ற உலக சரித்திரத்தை ஆராய்ச்சி செய்துப் பார்த்தால் ஒவ்வொரு யுகத்தில் ஒவ்வொரு மிருகக் கூட்டமும் இம்மாதிரியே தன்னையே சிறந்ததாகக் கருதிவந்திருக்கிறது. பின் வேரிருந்த இடமும் தெரியாமல் அழிந்துமிருக்கிறது. மனிதனும் அதே மாயையில்தான் மிதந்து வருவதாகத் தெரிகிறது. ஏனென்றால், மனிதவர்க்கத்திற்குப் பூச்சி ஜாதியால் நாளை வரும் கேடு உணர்ந்தால் இந்த விசாரமற்ற மூடமனப்பான்மை இராது.

இவ்வுலகில் தற்பொழுது வசித்துவரும் பூச்சி ஜாதிகள் மனித வர்க்கத்தை யெல்லாம்விட மொத்த எடையில் பன்மடங்கு அதிகமாக மேம்பட்டிருக்கின்றன. பூச்சி கடுகத்தனைதானே நாம் காலால் நசுக்குவதும் கொல்வதும் தினம் எத்தனையோ என்று எண்ணியிருப்பது மதியீனமே.

சிலகாலம் முன் ஒரு பிரபல ஜீவராசி ஆராய்ச்சியாளர் ஒரு குந்துமணி எடையுள்ள ஒரு பூச்சியை அதே எடையுள்ள மற்றொரு பூச்சியுடன் ஒரு தனியிடத்தில் வசிக்க ஏற்பாடு செய்து அவைகளின் வம்ச அபிவிருத்தியைக் காலக்கிரமத்தில் கவனித்து வந்தார். வெகு சீக்கிரத்தில் அவை யிரண்டிற்கும் பல நூறு சிசுக்களும், அந்த சிசுக்களுக்குக் குஞ்சுகளும், அம்மாதிரியே அக்குஞ்சுகளுக்கு நீண்ட பெரிய வம்சங்களும் ஏற்பட்டன. பின்னர் இந்த ஒரு தாயின் வழியாகவந்த இக் கூட்டத்தை அவர் நிறுத்துப் பார்த்ததில் மலைப்பாக இருந்தது. இந்தக் கணக்கைப் பயன்படுத்தி அன்று தேதிக்கு உலகிலுள்ள பூச்சி வகுப்புக்களின் மொத்த எடையைக் கணக்கிட்டு எண்பது கோடி டன்கள் என்றார்.

இந்த மொத்த எடையை மனித வர்க்கத்தின் மொத்த நிறையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமா? சராசரி ஒரு மனிதன் 150 பவுண்டுகள் நிறுக்கிறான். உலகில் மொத்தம் இருப்பது 1200 கோடி மக்கள். இதனால் மொத்த எடை கிட்டத்தட்ட 15 கோடி டன்கள். இந்த 15 கோடி மனிதக் கூட்டம் 80 கோடி டன் பூச்சி வர்க்கத்துடன் எதிர்த்து சண்டையிட்டு வாழ்வதென்றால் எவ்வளவு சிரமசாத்தியமான காரியம்!


போதாக்குறைக்கு மனிதரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. பிறப்புவிகிதம் (Birth - rate) மேனாட்டு நாகரீகம் என்ற கொடு நோயால் மெலிந்து உருக்குலைந்து வருகிறது. இன்னும் மமதையாலும், புத்தியீனத்தாலும், பேராசையினாலும் தேசத்திற்குத் தேசம் சண்டையிட்டு லக்ஷக்கணக்கில் மக்கள் அழிகின்றனர். பூச்சிராசியின் உற்பத்தி விகிதமோ வரவர அதிகரித்து வருகிறது. வீட்டு ஈ ஒன்று சில மாதங்களில் 72 கோடி ஈக்களை உற்பத்தி செய்கிறது! மனிதன் இதனுடன் போட்டி போடக் கனவிலும் இயலுமா? இப்படியே மனிதர்களின் எண்ணிக்கை குறைந்து போகவும், பூச்சிகளின் எண்ணிக்கை மேன்மேலும் செழித்தோங்கியும் சென்று கொண்டிருந்தால் சீக்கிரமே ஒரு காலம் வரும்—நம் எதிரிகளான பூச்சி உலகம் மனித உலகத்தின் மீது கொண்டதற் பொழுதைய ஆதிக்கம் பல மடங்கு அதிகமாகப் பெருக.

இப்பொழுதே பூச்சிகளுடன் சதா சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். பல போர்களில் தோல்வியுறுகிறோம். உதாரணமாக கறையான், பாச்சை, சீலப்பேன், மோட்டுப்பூச்சி, கட்டெறும்பு, கொசு முதலியன நமக்கு உபத்திரவம் கொடுத்து வருகின்றன. இவைகளுடன் சண்டை செய்ய முடியாது எவ்வளவோ நாம் தியாகம் செய்கிறோம். இவ்வுலகப் பரப்பில் பல இடங்களில் மனிதன் இவைகளின் உபத்திரவத்தால் குடியேறி வாசம் செய்ய முடிவதில்லை. நாம் அவைகளை யழிக்கச் செய்யும் தந்திரங்களையும், குயுக்திகளையும் எப்படியோ மீறி அவை ஜீவித்து வருகின்றன. கறையான், பாச்சை என்பன லக்ஷக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள துணி மணிகளையும், மற்றப் பொருள்களையும்நொடியில் அழிக்கின்றன. மூட்டைப்பூச்சி, சீலைப்பேன், கொசு, முதலியன நமக்குப் பெரிய வியாதிகளை ஊட்டி ஏராளமாகச் சிகிச்சையில் பொருள் செலவு செய்வதற்கு காரணமாகின்றன. இன்னும் பாலைவன வெட்டுக்கிளி என்ற பூச்சியின் அட்டகாசம் சொல்லத்திறமன்று. இவை முக்கியமாக நம் நாட்டில் சிந்து, பஞ்சாப், ராஜபுதனம் பலுசிஸ்தான் என்ற மாகாணங்களிலும் பாரசீகம், அரேபியா, ஈகிப்து போன்ற மேற்கேயுள்ள நாடுகளிலும், சைனாவில் சிலபாகங்களிலும் உலாவிவருகின்றன. பிரளயகாலத்துப் புயல் போல் கருத்துப் பறந்து வரும் கூட்டமாக நூறு அல்லது ஆயிரத்திலல்ல கோடி, நூறு கோடி, ஆயிரங்கோடி என்ற கணக்கில் தான் பறந்து வருவது. தூரத்தில் கருத்த மேகங்கள் திரண்டு பூமியை மூழ்குமாறு மழை பெய்ய வருவது போலிருக்கும். நல்ல பசும் பயிர்கள், பிஞ்சும் காயும் கனியுமுள்ள மரங்களடர்ந்த சோலைகளைக் கண்டதும் அக்கூட்டம் மேகமண்டலத்தை விட்டு இறங்

டெலிகிராம்ஸ்: "ஆர்யோபிளான்ட்ஸ்" டெலிபோன்: (கல்கத்தா) 1048. (2 லைன்கள்)

# பெங்கால் ஷேர் டீலர்ஸ் ஸிண்டிகேட் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:—3 & 4, ஹேர் தெரு, கல்கத்தா.



சௌரங்கி ஸ்கொயரில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் எங்கள் சொந்த கட்டிடங்கள். ஷை கட்டிடத்தின் அஸ்திவாரக்கல்லை 1941௵ ஜனவரி௴ 31உ யன்று ஆச்சார்யா ஸர் பி. ஸி. ராய் அவர்கள் நாட்டினர்.

கிளை ஸ்தாபனங்கள்:
லாகூர், ஜம்ஷெட்பூர், பெனரீஸ், பகல்பூர், பாட்னு, கோமில்லா, கர்ஸியாங், திப்ருகார் & மதறஸ்.

அதிகாரம் பெற்ற மூலதனம்
ரூ. 25 லக்ஷம்

சேகரித்த மூலதனம்
ரூ. 8,90,000

வசூலிக்கப்பெற்ற மூலதனம்
ரூ. 2,95,000

கம்பெனி வேலை செய்யத் தொடங்கிய முதல் வருஷத்திலேயே 10% வீதம் டிவிடண்ட் (வருமானவரி இன்றி) வழங்கப்பெற்றது. 1941௵ செப்டம்பர்௴ முடிய இரண்டாவது வருஷத்தின் முற்பாதிக்கு ஓர் இடைக்கால டிவிடண்ட் வழங்க உத்தேசித்திருக்கிறது.

பிக்ஸட் டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்கு 5% வட்டி வீதம் நாங்கள் பெற்றுக் கொள்ளுகிறோம்.

**நாங்கள் எல்லாவிதமான பங்கு விற்பனைகளிலும், கவர்ன்மெண்ட் ஸெக்யூரிட்டிகளிலும் லேவாதேவி செய்கிறோம்.**

எங்கள் "மாதாந்திர ஷேர் மார்க்கெட் ரிப்போர்ட்"டுக்கு எழுதவும். வருஷ சந்தா ரூ. 3. மாதிரி பிரதிக்கு எழுதுங்கள்.

**இந்த ஸிண்டிகேட்டின் பாக்கி ஷேர்களை விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.**

எங்கள் சென்னை கிளை ஆபீஸ் ஆகஸ்ட் 1உ முதல், மாஜி ரயில்வே ரேட்ஸ் அட்வைஸரி கமிட்டி ஸுப்பிரண்டண்ட்டாயிருந்த ராவ் சாஹேப் நடேச அய்யர் அவர்களின் நிர்வாகத்தின் கீழ் 12, தம்பு செட்டித் தெருவில் நடத்தப்படுகிறது.

கிப் பூமியில் அமையும். நெற் பயிரோ கோதுமை விளைச்சலோ, அல்லது மற்ற எந்த விளைவானாலும் ஒரு நொடியில் அழித்து நிர்மூலமாக்கி விடும். பல ஆயிரக் கணக்கான சதுரமைல் விஸ்தீரணமுள்ள பயிரெல்லாம் சில நாட்களில் இருந்த இடம் தெரியாது மறையும். இந்த வெட்டுக்கிளி (Locust) யை எப்படி ஒழிப்பது, எப்படி பழ, தானிய விளைவைப்பாது காப்பது என்பது ஒரு பிரம்மாண்டமான பிரச்னை.

நம்மைவிட பல விதங்களில் பலமும், கூட்டவலிமையும் கொண்ட இவ்விதப் பூச்சிகளின் தொல்லையை நம் புத்தி கூர்மையாலும், சாதுர்யத்தாலும் வென்று அழித்து விடலாம் என்று நாம் நினைத்திருந்தால் அது பகற்கனவு என்பதில் ஐயமில்லை. ஏனெனில் பூச்சி ஜாதிகளுக்கு தற்காப்புக்காக பலவித நுட்பமான ஆயுதங்கள் உடம்பில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. பாதுகாப்பின் பொருட்டு நம் கை, கால், முதலிய அவயவங்களுக்கு ஒவ்வொரு காரியம் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பூச்சிகளுக்கோ ஒவ்வொரு அவயவத்திலும் எல்லா வித பாதுகாப்பு உறுப்புகளும் அமைக்கப் பெற்றிருக்கின்றன. நரம்பு ஸ்தானங்கள் (Nerve centres) உடம்பில் அவைகளுக்கு எங்கு பார்த்தாலும் இருப்பதனால், அது மூளை வாசஸ்தலம் அங்கங்கே பல இடங்களில் இருப்பதற்குச் சமானமாகும். நாம் மூக்கால் மட்டும் சுவாசிக்கிறோம். அவை தேக முழுவதாலும் சுவாசித்து வருகின்றன. சதை வலிவோ அவைகளுக்கு (Muscle strength) நம்முடையதைவிடப் பன்மடங்கு. நமக்கு அந்த சதை வலிவு ஏற்பட்டிருந்தால் வெகு எளிதாக 600 அடி தரையிலிருந்து எழும்பிக் குதிக்கலாம். மேலும் அவை சிறிய பிராணிகளாதலால் லக்ஷ்யம் வைத்துக் கொல்வது மிகவும் சிரமம். அவைகளின் தேக உரமோ அசாத்தியம். மனிதர்களுக்கும் அந்த அளவு உடம்பு உரம் இருந்தால் உலகில் டாக்டர்களுக்கு தேவையே இராது. நோய், நொடியிராது. ஒவ்வொரு மனிதனும் பலயானை பலம் கொண்டவனாயிருப்பான். அவைகள் சுரு சுருப்புக்குப் பெயர் போனவை. இன்னும் அவைகளின் தந்திரமோ சொல்லச் சாத்தியமன்று. அவை தன் இருப்பிடத்தை மறைத்து மாறுவேடம் கொள்வதில் மிகத்திறமை வாய்ந்தவை என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். தத்துக்கிளி புல் தரையில் வசிப்பதால் பச்சை நிறமும், வெட்டுக்கிளி முதிர்ந்த பயிரில் இருப்பதால் அதன் பழுப்பு நிறம் கொண்டும், சீலைப்பேன் மயிரின் கருத்த நிறமும், கரப்பான் பூச்சி இருட்டிடங்களில் இருப்பதால் கருத்த செம்பு நிறம் கொண்டதாகவும் இருக்கிறதால் அவைகளைச் சுலபத்தில் கண்டு கொள்ள முடிவதில்லை.

இச் சிறு பூச்சி ஜாதிகளினால் மனித வர்க்கத்திற்கு இவ்வளவு அபாயமா என்று இப்பொழுது வியப்பும் பயமும் ஏற்படுகிறதல்லவா? ஆனால் இப்பொழுதே முதல் தீவிர முயற்சி செய்தால் இவைகளினின்று நம்மை விடுவித்துக் கொள்ள இயலும் என்று எண்ணுவதற்கு நியாயமிருக்கிறது.

இப்பூச்சி வர்க்கம் மேற்கூறியவாறு கணக்கிலகப்படாமல் வெகு சீக்கிரத்திலே பெருகி வந்தாலும், அழிவும் சீக்கிரத்திலேயே கிடைத்துவிடுகிறது. பல ஆயிரங் கோடிக் கணக்கில் மண்டிக் கிடக்கும் இவைகளுக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. இதனால் பிறந்து சீக்கிரமாகவே அவற்றில் பல இறந்துவிடுகின்றன. இவை முட்டைகள் இடுவதும் ஆயிரக் கணக்கில் திரள் திரளாக இடுவதால் அவை குஞ்சு பொரிக்குமுன் நம்மால் அழிக்க சாத்தியமாகும். அவை உற்பத்திக்கும், வம்ச விருத்திக்கும் சாதனமான குப்பை, அழுக்கு நிறைந்த இடங்களைச் சுத்தம் செய்தும், இவைகள் முட்டையிடுவதற்கு ஏற்பட்ட இடங்களைப் பாதுகாத்துப் பூச்சிகள் குஞ்சுகளாயிருக்கும்பொழுதே அவைகளை அடக்கவும் முயலுதல் வேண்டும். இத்தனை முயற்சிகள் எடுத்தும் அவைகளை நம்மால் அடக்கிக் கவலையற்று வாழ முடியுமா என்பது மூளையைக் கலக்கும் பிரச்னை என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

# விஞ்ஞானமும் இயற்கையின் ஒழுங்கும்

[டி. பி. நவநீதகிருஷ்ணன், எம். ஏ]

பண்டைக் காலத்து மக்கள் இயற்கையில் ஒழுகலாறு உண்டு என்ற எண்ணமேயில்லாதிருந்தனர். இயற்கை நிகழ்ச்சிகள் பல்வேறு வகையான தெய்வங்களின் ஆணைப்படி நேரிடுகின்றன என அவர் எண்ணினர். ஒரு தேவனது சினத்தின் சின்னமே இடிமுழக்கம் என்று நம்பினர். மற்றொரு தேவதையின் அருளால் நிலம் பெருவாரியான விளைவைத் தரும் என்று கூறினர். இன்னும் இவ்வாறே பலவகையானவற்றில் பல தேவரும் தேவதைகளும் உள்ளன என அக்காலத்தினர் முழுதும் கருதியிருந்தனர்.

பின்னர், சிறிது சிறுதாக இயற்கையின் ஒழுங்கு முறையை மக்கள் உணரலாயினர். எகிப்து (Egypt) நாட்டுக் குருக்கள் நீல (Nile) நதியில் வெள்ளம் ஏற்படுவதற்குமுன், ஒரு குறித்த நக்ஷத்திரம் வானில் தவருது தோன்றி வருவதைக் கண்டனர். எனவே அவ்விண்மீனின் தோற்றத்தை அறிகுறியாய்க் கொண்டு, வெள்ளம் ஏற்படும் காலத்தை முன்னரே அறிவிக்கலாயினர். இதனுல், பொது மக்கள் அவரைப் பேரறிஞரெனவும் தெய்விக சக்தி வாய்ந்தவரெனவும் போற்றி வந்தனர். அவர்கள் அரசரிடமும் செல்வாக்கு பெற்று அதிகாரம் செலுத்தி வந்தனர். நாளடைவில், பலவகையான உலோகங்களும், கனியியல் பொருள்களும் தொழில் விற்பன்னரால் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு பலதிற பயனுறு கருவிகளைச் செய்யவும் அவர்கள் கற்றனர். இவ்வாறு கைத்தொழிற் சிறப்பால் பெற்ற அறிவை, பின்னர், விஞ்ஞானிகள் வரையறுத்து ஒழுங்குபடுத்தினர். இயற்கைப் பொருள்களை, இனத்தை (Species)ப் பற்றியும், மரபை (Family)ப் பற்றயும், வரிசைக் கிரமத்தை (Order)ப் பற்றியும் நின்ற வகையீடு செய்தனர்.

இவ்வகையீடு பொதுப்பட மூன்று இராஜ்யங்களின் பாற்பட்டதாய்க் கருதப்பட்டது. அவையாவன: 'பிராணி இராஜ்யம்,' 'பயிர் இராஜ்யம்,' 'தாது இராஜ்யம்' என்பனவாம். மக்கள் பிராணி இராஜ்யத்தில் உச்சநிலை யடைந்தவரெனவும், தண்டுடையன (Vertebrates) அவருக்கடுத்த படியானவை யெனவும் கூறப்பட்டது. புழுக்களும் அவை போன்றமையும் மிக அடிப்படையான நிலைமைக்கு தள்ளப்பட்டன.

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில், இவ்வுலகம் ஒரு பெரும் இயந்திரம் போன்றது என மக்கள் கருதினர். அவ்வியந்திரத்தை, கடவுள் என்ற முதலாளி மக்களின் தேவைக்கெனவே உண்டாக்கினுர் என்ற எண்ணம் எங்கும் பரவி யிருந்தது. மற்றுஞ் சிலர், இயற்கையின் விதிகளே உலகத்தை யாளும் நியதிகளும் சட்டங்களும் என்று பறைசாற்றினர். எல்லோரும், இவ்வுலக நிகழ்ச்சிகள் யாவும் ஒழுங்குடனும் நேர்த்தியுடனும் நடைபெறுகின்றன என்பதைப்பற்றி ஐயமில்லை யென்று திண்ணமாயிருந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இக்கருத்து மேலும் மேலும் வளர்ச்சி யுற்றது. எல்லாப் பொருள்களும் தொண்ணூறு இயைபியலான (Chomical) அடிப்பொருள்களினின்றே (Elements) பிறந்தவை யென்ற கொள்கை நிலைநாட்டப்பட்டது. இனங்கள் உள்ளது சிறத்தலால் மாறிக்கொண்டுள்ளன என்ற டார்வினின் (Darwin) பரிணமக் கொள்கை (Theory of Evolution)யும் இவற்றுடன் ஒருவாறு இணைக்கப்பட்டது.

முற்கூறிய வகையின் திட்டமானதும் ஒரு தலையானதுமான விஞ்ஞானம் இன்னும் பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. ஆயினும், அது பழங்கதையேயாம். கியூரி அம்மையாரும் (Madame Curie)



5

ருதர் போர்ட் பெரியாரும் (Lord Rutherford) அணுக்கள் (Atoms) உண்மையில் அடிப்படையானவை யன்று என்று நிலை நாட்டினர். அவரது வியக்கத் தகுந்த ஆராய்ச்சித் திறனால் அணுக்களைப் பிளந்தனர். அவை முறிவதால் ஒரு வகையான அணு மற்றொன்றாய் மாறுவதைக் காட்டினர். சிலவகையான அணுக்கள் நீண்ட காலத்திலும் மாறுதல் அதிகமில்லாதிருத்தலால், அவை நிலையான தன்மையினவாய்க் காணப்படுகின்றன என எடுத்துரைத்தனர். மேலும் இவ்வாறான அணுக்களே பெரும்பாலானவை யாதலின், அணுக்கள் நிலையானவை என்று கொள்வதற் கிடமுண்டு எனக் கூறினர். எனவே, அக்கொள்கை முற்றிலும் உண்மையா யில்லாவிடினும் நடை முதலில் கொள்ளலாம் என்று உரைத்தனர். இவ்விரு பெரும் விஞ்ஞானிகளின் சிந்தனையின் ஆற்றலும் செய்திறனும் ஒருங்கே சேர்ந்த செயற்கரிய ஆராய்ச்சிகளால், உண்மையில் பருப் பொருள்களுக்கும், இயக்கத் தோற்றங்களுக்கும் அடிப்படையான வேற்றுமை யில்லை யென்று தெளிவாயிற்று. பருப் பொருளும் ஆற்றலும் ஒன்று மற்றொன்றாய் மாறக் கூடியவையே என்று அறிகிறோம். இக் கொள்கையே இற்றைய பூத-இயைபு விஞ்ஞானிகளின் அடிப்படையான கொள்கையாம். இதனால் எவ்வணுவும் எக்கணத்தில் எந்நிலைமையிலிருக்கும் என்று ஒரு தலையுடன் கூறவொண்ணாது. விஞ்ஞானி அணுவை ஆராயும்போது, அதனால் அவ்வணுவின் தன்மை மாறுகின்றது. எனவே, எவ்வகையினும் பாதிக்கப்படாத தனி அணுவின் தன்மையைப்பற்றி யாதும் அறிய இயலாது. இவ்வாறு தனிப்பட்ட அணுவின் பண்பைப் பற்றித் திண்ணமாய் அறிய இயலாவிடினும், கோடானுகோடி அணுக்களாலாய பொருள்களின் இயல்பை சராசரி (Average) புள்ளிக் கணக்கு (Statics) முறைகளால் அறியலாகும் என விஞ்ஞானிகள் காட்டியுள்ளனர். இவ் விஞ்ஞானியக் கருத்தைத் தனி மனிதன்-மக்களாலான சமூகம் என்பவற்றின் பண்புகளைக் கருதற்கும் பயன்படுத்தலாம். சமூக வளர்ச்சிக்கும் மக்கள் வாழ்க்கைக்குமிடையுள்ள பிணைப்பை இவ் விஞ்ஞான வழியே ஆராயலாம். அதாவது, தனி மக்களின் தன்மைகளைப் பற்றி நில்லாது, சமூக வாழ்க்கையானது சில பொது விதிகளுக்கியைந்தே யுள்ளது. அவ்விதிகளைக்கண்டு அவற்றின் துணைகொண்டு சமூகவியல் ஆராய்ச்சி செய்யலாம். அவ்வாராய்ச்சியில் ஆழ்ந்து செல்வோமாயின், தற்காலத்து சமூக இன்னல்கள் யாவும், தற்போதைய சமூகப் பொருளியல் முறையால் ஏற்பட்டவையே என அறிகிறோம். மேலும், அப்பொருளியல் முறை உள்ளனவும் அவ்வின்னல்களும் இருந்தே தீரும் எனத் தெளிவாகின்றது. அதாவது, இப்பொழுது தாண்டவமாடும், வேலையில்லாத் திண்டாட்டம்—பெரும்பான்மையான மக்களின் பசிப்பிணி—பெரும் போர்கள்—எனும் கொடிய பேய்கள், இப்பொழுதுள்ள சமூக அமைப்பை மாற்றாமல், விரட்டி யடிக்க இயலாது எனக் காண்கிறோம். சமூக அமைப்பு மாற்றப்படவேண்டும் என்பதே விஞ்ஞானீய உண்மையாம்.

அணுக்களைப்பற்றியும் மக்களைப்பற்றியும் விஞ்ஞான வழியே ஆராய்வதால் கிடைத்த அறிவைப்பற்றி மேலே கூறினோம். இனி, நக்ஷத்திரங்களைப்பற்றி விஞ்ஞானம் யாது கண்டுள்ளது என்பதைப்பற்றி உரைக்கலாம். நக்ஷத்திரம் ஒவ்வொன்றும் நம் சூரியனைப்போல் பன்மடங்கு பெரிதானதென்றும், ஒவ்வொன்றும் ஒரு மண்டலத்துட னுள்ளது என்றும் அறிகிறோம். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான ஒழுங்கு உண்டு. சூரிய மண்டலத்திலுள்ள நமது உலகில் தோன்றிய ஒழுங்கு, காலக்கிரத்தில் உயிர் தோன்றுவதற்கும் பரிணப்பதற்கும் ஏதுவானப்படி அமைந்தது. உயிர் வாழ்தற்கு இடந்தராத இயற்கை ஒழுங்குமற்ற மண்டலங்களில் நிலவுகின்றது. எனவே இயற்கை ஒழுங்கு என்பது பல திறமானது என அறிகிறோம். ஒழுங்கின் விளைவாய் மக்கள் தோன்றினரேயன்றி, மக்கள் வாழவேண்டுமென இயற்கை ஒழுங்கை யேற்படுத்தவில்லை. இதுவே

REGD. No. 1506

அசோகா

MILD SCENTED

ASOKA

ரிஜிஸ்டர். நெ. 1506

# அசோகா சுகந்த பாக்குத்தூள்

தயாரிப்பவர் :—

## M. K. கிருஷ்ண செட்டி

கோயமுத்தூர்

---

மதராஸ் விற்பனையாளர் :—

## V. கனகய்ய செட்டி & Co.,

நைனியப்ப நாயகன் தெரு, பார்க் டவுன்

மதராஸ்.

வான நூல் விஞ்ஞான முன்னேற்றத்தால் நாம் அறியும் உண்மை.

உயிர் நூல் விஞ்ஞான முன்னேற்றத்தால் நிலைநாட்டப்பட்ட முடிவுகளைப்பற்றி இனி கூறலாம். உயிரினங்கள் இன்னும் உச்ச நிலையை யடையவில்லை. பரிணமம் இறுதியின்றி இடையறுது நிகழ்ந்து கொண்டேயுள்ளது. உள்ளவை சிறந்தவினாலேயே மேலும் மேலும் உயர்ந்த இனங்கள் தோன்றுகின்றன. பரம்பரையினின்று சற்றேனும் வழுவாது வழித்தோன்றல்கள் இருக்குமாயின், பரிணம முன்னேற்றம் சாத்தியமாகாது. அவ்வாறே புதிதுபுதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட இயற்கையின் விதிகளின் துணைகொண்டு மாற்றப்பட்ட மக்கள் வாழ்க்கை சிறப்புற வேண்டுமாயின், சமூக அமைப்பும் காலத்திற்கேற்றவாறு பரிணமிக்க வேண்டும் என்பதே உயிர்நூலின் அடிப்படையான தத்துவம்.

விஞ்ஞானிகளின் அறிவாற்றலாலும், ஆராய்ச்சித் திறனும் கற்பனுசக்தியாலும் சலியாத உழைப்பினுலும் நிலைநாட்டப்பட்டுள்ளன. இவ்வாறிருப்பினும், சிலர், 'இயற்கை வாழ்க்கையே சிறந்தது' எனக் கூறுகின்றனர். இயற்கை வாழ்க்கையென அவர் குறிப்பிடல் இக் காலத்து விஞ்ஞானம் விரவாத பண்டைக்கால வாழ்க்கையேயாம். இக்கால விஞ்ஞான வளர்ச்சியின் விளைவியல்களால் மக்கள் துயர் அதிகரித்துள்ளதேயன்றி, வாழ்க்கை எவ்வகையிலும் சிறக்கவில்லை என்பதே அவர்கள் எடுத்துரைக்கும் முடிவாம். இதனைப்பற்றி ஆராய்வோம். பண்டைக்காலங்களிலும் மக்கள் போரின்றி வாழவில்லை. பஞ்சமும் பிணியும் உலகெங்கும் பரவியேயிருந்தது. நெருப்பும் உடையுமே முதன்முதலாய்க் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞானச் சாதனங்களாம். இவற்றினுதவியாலேயே மக்கள் வாழ்க்கை மேன்மையுறத் தொடங்கியது. பிற்காலங்களிலேற்பட்ட விரைவான விஞ்ஞான முனனேற்றத்திற் கேற்றதான சமூக அமைப்பு ஏற்படாததே, விஞ்ஞானம் அழிக்கும் துறைகளில் செல்லுதற்குக் காரணமாயுள்ளது. இயற்கை வாழ்க்கையிலும் பல உயிரினங்கள் பசியாலும் பிணியாலும், ஒன்று மற்றொன்றைக் கொல்வதாலும், இறக்கின்றன. கனடா (Canada) நாட்டில் பதினோராண்டிற் கொருமுறைத் தோன்றும் நோய்வாய்ப்பட்டு, முயலினங்கள் வேரோடழிகின்றன. அம் முயல்களை யுண்டு வாழ்ந்த நரிகளும் பசியால் பீடிக்கப்பட்டு இறக்கின்றன. இயற்கையில் பிராணிகள் ஒன்றுபட்டு வாழும் இயல்பினவையன்று. அநாகரிக மக்களின் சராசரி ஆயுட்காலம், நாகரிக மக்களின் சராசரி ஆயுட்காலத்தைவிட குறைவாகவே யுள்ளது. விஞ்ஞானம் இயற்கையை ஆராய்வதினுல்தான் ஏற்பட்டது. இயற்கையில் ஆக்கும் சக்திகளும் அழிக்கும் சக்திகளும் உள. இயற்கை விதிகளை யறிவதால் இவை யிரண்டினையும் பற்றி அறியலாம். விஞ்ஞானம் இரண்டையும்பற்றிய தத்துவங்களை வெளியாக்குகின்றன. அவற்றில் நலந்தருபவற்றை பயனுக்கிக் கொள்ளலே அறிஞரின் அறிகுறியாம். பரிணமமே இயற்கைக் கியைந்ததாம். ஆதலின் பண்டைக்காலத்து அநாகரிக வாழ்க்கைக்கு மீளல் எவ்வகையிலும் இயற்கையுட னியைந்ததன்று; இயன்றதும் அன்று.

இயற்கையென்பது தற்செயலான நிகழ்ச்சிகளும் உயிரினங்களின் தேவைகளால் ஏற்படும் வினைகளும் கலந்த தொன்றேயாம். எனவே, தற்காலத்து இன்னல்கள் யாவும் இவ்விரண்டினிடையுள்ள கலவி இசைவுடன் இல்லாததால் எழுந்தவையேயன்றி, காருகப்படாத இயற்கை முறையினின்று மக்கள் வழுவியதால் ஏற்பட்டவையன்று. இயற்கையின் விதியொன்றை பலவகையான அனுபவங்களின் விளைவாய்க் கண்டுபிடித்தபின் அதைத் தம் நலத்தைப் பெருக்குமாறு பயன்படுத்தும் இயல்பினையுடையவர், மக்கள். தீங்கு விளைவதற்குக் காரணமான இயற்கை விதியைக் கண்டுபிடித்த ஒருவன் மேலும் தீங்கை விளைவிக்கும் வழியில் அவ் விதியைப் பயன்படுத்த ஒருப்படான்; அத் தீங்கை யகற்றும் முறைக்கு அடிப்

படையாயுள்ள இயற்கை விதியைக் கண்டு பிடிக்கும் முயற்சியிலேயே முனைவான். ஓர் எடுத்துக்காட்டுக் கூறலாம். பித்தவாதக் காய்ச்சல் (Typhoid) அசுத்த நீரினின்று விளையும் கிருமிகளால் ஏற்படுவது என்ற இயற்கை விதி கண்டுபிடிக்கப்படுகின்றது. இம் முறையை அறிவதால் அக் கிருமிகளை மேலும் பெருக்கி, அந் நோயைப் பரவச் செய்யும் நோக்கத்தை எவ் விஞ்ஞானியும் கொண்டவனன்று. அக் கிருமிகளை அழித்து நீரைத் தூய்மையாக்கும் முறைக்கு அடிப்படையாயுள்ள நலந்தரும் இயற்கை விதியைக் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சி செய்யவே விஞ்ஞானி முற்படுகின்றான். ஆதலின் தீமை பயக்கும் இயற்கை விதிகளுக்கு இடந்தராதிருக்கும்—அதாவது, அவற்றின் தீய விளைவுகளைத் தடுக்கும் முறைகளைக் கண்டுபிடிக்கும்-வழியிலேயே மக்கள் முன்னேறுகின்றனர். இயற்கை முறைகள் பலவீனுக்கும் வழியாயுள்ளன. அவற்றை நாம் பின்பற்றுவதால் இன்பம் பெறோம். இக்காலத்து விஞ்ஞான முறைகளால் ஏற்படும் தீமைகள், அவற்றை நல்வழியே பயன்படுத்தும் முறைகளுக்கு அடிப்படையான இயற்கை சமூக விதிகளையும் உடன் கையாளாமையே காரணமாம். இப்பொழுது பெரும்பாலான நாடுகளில் நிலவிவரும் சமூக அமைப்பையும் பொருளாதார முறையும் கொண்டால், விஞ்ஞானப் பெருக்க விளைவுகளால், பணப் பஞ்சமும், பொது மக்கள் துயரம், பெரும் போர்களும் ஏற்படுதல் திண்ணம் என்று விஞ்ஞான (அல்லது இயற்கை) விதி வழியே ஐயமின்றிக் கூறலாம். இக் கொடிய நிலையைத் தவிர்க்கும் வழி, விஞ்ஞானப் பெருக்கத்தைத் தடைப்படுத்துவதன்று. இயற்கை வழியே பெற்ற பொருளாக்கத்தை மக்கள் எல்லோரும் அடையும்படி செய்யும் வகையில் சமூக அமைப்பை மாற்றுவதே தக்க வழியாம். எனவே, தற்செயலானத் தாறுமாறான வழியால் ஏற்பட்ட இன்னல்களை, மேலானதும் ஒழுங்கானதும், அறிவின் பாற்பட்டதும், அறத்தை அடிப்படையாய்க் கொண்டதுமான நெறியே செல்வதால், நீக்கலாம். அறிவால் பெற்ற பொருள்களை தங்நலமே கருதும் சிலர் தமதாக்கிக் கொள்கின்றனர். அதனால் பலர்க்கும் துயர் அதிகரிக்கின்றது; துயரைப் போக்க அப் பொருள்களைப் பலரும் பெறும்படி செய்யவேண்டும். அப்பொருள்களை அழிப்பதும், அவை ஆக்கப்படுவதாகத் தடுப்பதும் அறிவின்மையே. எனவே, இக்காலத்து நாகரிக வாழ்க்கையை இன்புறும் முறையில் அமைக்கலாம். பண்டைக் காலத்து அநாகரிக வாழ்கைக்கு மீள்வதால், இன்பமென்றும் அடையோம். காலாந்திரத்தில், பலரின் விடாமுயற்சியின் விளைவாய்ப் பெற்ற அறிவுத்திரனைத் திரணமாய் எண்ணி உதைத்துத் தள்ளலாகாது. அக் கருவூலத்திலுள்ள விலைமதிப்பற்ற பொருள்களை ஒழுங்குபடுத்தி, மக்கள் எல்லோரும் சமநிகராய் இன்புற்று வாழுமாறு செய்தலே நல்லோர் கடன். அறிஞர் யாவரும் அத்துறையில் தொண்டாற்ற வேண்டும். இங்ஙனம் அறிவின் பாற்பட்டு, அழுக்காற்றையும் வெகுளியையும் அகற்றி, யாவரும் ஒன்றுபட்டு ஒத்துழைக்கும் காலத்து, இவ்வுலகில், விண்ணுலகை நினைத்தே இன்புறும் காலம் மறையும். இன்பத்திற்கு வேற்றுலகு செல்லவேண்டாம், நம் மண்ணுலகே போதும் என வாழலாம்.

# ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்

## சுதேச மன்னர்களின் சூத்திரதாரி

[வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.]

சுமார் பதினன்கு வருஷங்கட்கு முன் சென்னை ராஜதானிக் கலாசாலையின் மாணவ சங்கங்கள் ஒன்றின் சார்பில் ஸம்ஸ்கிருதபாஷையில் காளிதாஸனுடைய சாகுந்தலம் என்னும் நாடகம் நடிக்கப்பட்டது. அன்று உள்ளூர் பிரமுகர் ஒருவர் அக்கிராசனம் வகிப்பதாக ஏற்பாடாயிருந்தது. நாடகம் முடிய சிறிதுநேரமிருக்கையில் அச் சங்கத்தின் தலைவரின் வேண்டுகோளின்பேரில் அப் பிரமுகர் மேடையின் மேலேறி நடிகர்களைப்பற்றிச் சில ஆசிமொழிகள் கூற முன் வந்தார். "நான் இன்று இந் நாடகத்தைப் பார்க்கையில் பல வருஷங்கட்கு முன் நான் இக் கலாசாலையில் மாணவனுகவிருக்கையில் இதே மேடையில் இதே நாடகத்தில் நானும் தோன்றி நடித்தது என் நினைவுக்கு வந்தது," என்று சொல்லி ஆரம்பித்தார். கூட்டத்தில் ஓர் குறும்பன் (மாணவர் கூட்டங்களில் இத்தகையோர் கட்குக் கேட்கவேண்டுமா!) "நீர் அப்பொழுது என்ன வேஷம் பூண்டீர்கள்?" என்றான். எதிர்பாராத அக் கேள்விக்கு சடக்கென்று அவர், நான் ஓர் இளநங்கையாய்த் தோன்றவில்லை யென்று மட்டும் சொன்னலே என்னை இக்கேள்வி கேட்டவர் திருப்தியடைவாரென்று நம்புகிறேன்" என்று சமத்காரமாக விடையளித்தார். சபையோர் எல்லோரும் கொல்லென்று நகைத்தனர். குறும்புக் கேள்விக்கேற்ற குறும்பு விடையையளிக்கப் போதுமான சமயோசித புத்தி அவருக்குண்டென்று அன்று அவர் இச் சம்பவத்தின் மூலம் காட்டிவிட்டார்.

அப் பிரமுகர்தான் ஸர். ஸி. பி. ராமசுவாமி அய்யரென்பவர். அப்பொழுது அவர் சென்னை அரசாங்கத்தின் சட்ட இலாகா மெம்பராக விருந்தார். இது ஓர் மந்திரி பதவியே. இரட்டை யாட்சியின் கீழ் இருந்தபடியால் அதற்கு 'மெம்பர்' என்ற பெயர் வாய்ந்திருந்தது. வேண்டாத கேள்விகளைக்கேட்டுத் திணரவைக்க விரும்புவோர்களைச் சரியான விடைகளைக் கொடுத்து மடக்கும் சமயோசித புத்தி இவரிடம் அபாரமாய் இருந்தது.

இவர் சென்னையில் சட்ட இலாகாவை நிர்வகித்த இச் சமயத்தில்தான் இந்த சாமார்த்தியம் இவருக்கு அதிகமாய் பயன்பட்டது. அப்பொழுது மாகாணச் சட்ட சபையில் இவருக்கு எதிரிகளாக அமைந்து இவரைக் கேள்விகள் மூலம் தாக்கியவர்கள் காங்கிரஸ் மகா சபையின் சார்பாக ஸ்ரீமான் எஸ் சத்தியமூர்த்தி அவர்களும் "ஜஸ்டிஸ்" கக்ஷியின் பக்கத்தில் ஸ்ரீமான் (அப்பொழுது 'ஸர்' பட்டம் இல்லை.) ஆற்காடு ராமசுவாமி முதலியார் என்பவரும், இவர்கள் இருவரும் சாமான்ய எதிரிகளல்ல. இவர்கள் கொடுத்த சவால்கட்குத் தக்க, ஆணித்தரமான பதில்களையளிக்க ஸர்க்கார் தலைப்பில் இவர் மிகவும் பயன்பட்டார் எனவே, "உங்கள் வாழ்க்கையில் எந்தப் பகுதியை நீர் விரும்பிக் கொண்டாடுகிறீர்கள்" என்று பின்பு ஒருவர் இவரைக் கேட்டபொழுது இவர், "நான் சென்னையில் சட்ட மெம்பராக விருந்த காலத்தைதான்" என்றுசொன்னதில் ஒருவித ஆச்சரியமுமில்லை. எதிரிகள் கைதேர்ந்தவராயிருந்தபடியால் இவருடைய நிர்வாகத் திறமையும் பதின்மடங்கு சோபிக்கின்றது.

இவருடைய முழுப்பெயர் சேத்துப்பட்டு பட்டாபிராம அய்யர் ராமசுவாமி அய்யர் என்பது. சேத்துப்பட்டு இவர் ஊர். வட ஆற்காடு ஜில்லாவிலுள்ளது. பட்டாபிராம அய்யர் என்பது இவருடைய தந்தையாரின் பெயர். இவர்கள் ஸ்மார்த்தபிராமண மரபில் வடமர் என்னும் பிரிவைச்சேர்ந்தவர்கள். உயர்ந்த வம்சம்: பரம்பரையாக சொத்துள்ளவர்

கள். எனவே ராமசுவாமி அய்யர் செல்வத்திற் பிறந்து செல்வத்தில்வளர்ந்தவர்.

இவர் பிறந்தது 1879-ம் ஹு நவம்பர் மீ 11-ந்தேதி—. இவர் 'வெஸ்லியன் ஹைஸ்கூல்' என்னும் பள்ளிக்கூடத்தில் தன் ஆரம்பப்படிப்பை முடித்துக் கொண்டபின் தன்னுடைய உயர்தரப் படிப்பைச் சென்னை ராஜதானிக்கலாசாலையில் நடத்திக்கொண்டார். பின்பு சட்டப் பரிக்ஷைக்குப்படித்து தன்னுடைய தந்தையாரின் தொழிலாகிய வக்கீல் தொழிலையே கைக்கொண்டார்.

இவருடைய தந்தையார் சென்னையில் உயர் நீதி மன்றத்தில் வக்கீலாக யிருந்துக் கடைசியில் சென்னை நகர நீதி மன்றத்தில் ஓர் நீதிபதியாயிருந்தார். ராமசுவாமி அய்யருக்கு வாழ்க்கைத் துணைவியாயமைந்த சீதம்மாள் என்பவரும் ஓர் பிரபல வக்கீல் குடும்பத்தைச் சேர்ந்தவரே. அந்தம்மாளுடைய பாட்டனார் தான் சென்னையில் முதல் இந்திய நீதிபதியாயிருந்த களம்பூர் வீரவல்லி ரங்காநாத சாஸ்திரியாரவர்கள். இத்தகைய தொடர்பை யடைந்திருந்த இவர் தானும் வக்கீல் தொழிலையே கைக்கொண்டதும் சற்று இயற்கையானதே.

வாயை விற்று வயிறுவளர்த்தலாகிய இத்தொழில் சிறிது மனேதைரியம் உள்ளவர்களே கையாளக்கூடியது. ஏனெனில் இத்தொழில் எடுத்தவுடன் வருவாய் கிட்டிவிடாது. பலவருஷங்கள் போதுமான வரும்படியின்றி சிரமப்படத்யாராயிருக்கவேண்டும். அபாரமான சக்தி வாய்ந்திருந்தவர்களா யிருந்தால்தான் சீக்கிரத்தில் நல்ல வரும்படி கிடைக்கும். மாதச்சம்பளம் பெறுவோரின் கவலையற்ற வாழ்வு இவர்கட்கில்லை. இத்தகைய நிர்பந்தங்களடங்கிய தொழிலில் புகுந்த இவருக்கு முதல் வருஷம் முழுவதிலும் கிடைத்தது ரூ. 208-தானும். அதாவது மாதம் ஒன்றுக்கு சராசரி ரூ. 18-கூட இல்லை. ஆனல் தொழிலாரம்பித்த நான்காம் வருஷம் ரூ. 25,000 (மாதம் ரூ. 2,000-க்குமேல்) சம்பாதித்தாராம்! இதுவே இவருடைய அபார சக்திக்குத் தகுந்த அறிகுறி.

இவர் நீதிமன்றத்தில் பேசுவது பார்ப்பதற்கோர் ரம்மியமான காக்ஷியாயிருக்குமாம். நாடகமேடை மீதேறிய ஒரு நடிகன் நடிப்பது போலிருக்குமென்று அதைக் கண்ணுற்றவர்கள் சொல்லுகின்றனர். இவருடைய அழகியமேனி, சற்றுப்பிதுங்கிய ஆனல் கம்பீரமுள்ள விழிகள், நீண்ட முகம், எழில் வாய்ந்தபார்வை, அமைப்பில் சற்று உயர்ந்த, தூய்மையான வெண்ணிறத்தை யுடைய தலைப்பாகை, இவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து இவருடைய நீதிவாதத்திற்கு ஒரு தனிச் சோபையை யளிக்கும். அப்பொழுது நீதிபதிகளிடம் இவர் நடந்து கொள்ளும் முறையும் இதற்கேற்பவே யிருக்கும். வெகு மரியாதையுள்ளதான நன்னடத்தை இடையில் ஏதாவது ஒரு தடங்கல் நேர்ந்தால் அப்பொழுது இவர் காட்டும் சீலம் இந்நடத்தைக்கு ஓர் உச்ச நிலையாய் விளங்கும். இதற்கு உதாரணமாய் அடியிற் கண்ட நிகழ்ச்சியைக் கூறலாம்:—இவர் ஓர் "கேஸை" வாதித்துக் கொண்டிருக்கையில் இவருடைய சிப்பந்திகளில் ஒருவன் ஏதாவது கடிதத்தை இவரிடம் கொண்டு வந்து நீட்டுவான். உடனே இவர் நீதிபதியை நோக்கி "சற்று மன்னிக்க வேண்டும்" என்று வினயத்துடன் கூறி விடை பெற்றுக் கொண்டுப் பின்னரே அக்கடிதத்தைப் பார்ப்பார். அதைப் படித்து விட்டு அதைக் கொணர்ந்தவனிடம் தக்க உத்திரவு அளித்து விட்டு பின்பு தன் வாதத்தைத் தொடங்குவார். இவ்வளவும் ஒரு நொடியில் செய்து முடிக்கப் படுவது அங்குள்ளோரை வியக்கச் செய்யும்.

எதிர் கக்ஷி வக்கீலிடம் இவர் நடந்து கொள்ளுவது இவ்வண்ணமே தானும். இவர் பேசுகையில் அவர் இடைமறித்து ஏதாவது சொல்ல வெழுந்தால் உடனே இவர் தன்னுடைய ஆஸனத்தில் அமர்ந்து விடுவார். எதிர் கக்ஷிக்காரருக்கு ஒருவித இடையூறு மிருக்கக் கூடா தென்பது இவர் எண்ணம்.

இவரை ஓர் சகல கலாவல்லவர் என்று சொல்லலாம். சர்க்கார்தரப்பில் பெரும் பதவிகளை வகிக்கையில் பற்பல விஷயங்

களில் இவர் தன் நோக்கத்தைச் செலுத்த நேர்ந்திருக்கிறது. அவைகள் ஒவ்வொன்றையும் சளைக்காமல் நிர்வகிப்பார்.

இவர் வெகு தாராளமான மனமுடையவர். இவர் வக்கீல் தொழிலை நடத்துகையில் இவரிடம் உதவி வக்கீல்களாக இருந்தவர்களுக்குத் தன் வருவாயில் பெரும் பகுதியைக் கொடுப்பார். இவர் வீட்டிலும் இதே தரும சிந்தை. அங்கு சதா எளிய பிள்ளைகள் வாரச் சாப்பாடு சாப்பிடும் வண்ணமாகவே யிருக்கும். இம்மாதிரி இவர் தர்மத்தில் படித்தவர்கள் பின்னர் ஐ. ஸி. எஸ். பதவியிலும் வந்ததுண்டு.

சென்னை உயர் நீதி மன்றத்தில் 'ஒரிஜனல்' என்று சொல்லப்படும் பகுதியில் அவர் தொழில் ஆரம்பித்த சிறிது காலத்திற்கெல்லாம் ஓர் பிரபல நியாயவாதியாகி விட்டார். 1910-முதல் சென்னை நியாய ஸ்தலத்தில் நடந்த முக்கிய 'கேஸ்'களில் இவர் கலந்து கொள்ளாதது ஒன்றுமில்லையென்று சொல்லப்படுகிறது.

அரசியல் துறையில் இவர் முன்னுக்கு வந்ததற்கும் இவருடைய வக்கீல் தொழில் ஓரளவு பயன் பட்டிருக்கிறதென்றே சொல்ல வேண்டும். ஓர் முக்கியமான 'கேஸில்' இவர் டாக்டர் அனிபெஸண்டு அம்மையாரை எதிர்த்துவெற்றி பெற்றார். நாளடைவில் அவ்வம்மையாருடன் அரசியல் வாதத்தில் ஒத்துழைக்கவாரம்பித்தார். ஹோம ரூல் என்றழைக்கப் பட்ட இயக்கத்தில் ஈடு பட்டதால் தனக்கு நேரிட்டிருந்த பாதுகாப்பிலிருந்து இவ்வம்மையார் விடுவிக்கப்பட்டவுடன், அவரைச்சென்னையில் இவர் ஓர் வெள்ளிக் குடத்துடன் வரவேற்றது எல்லோரும் அறிந்தவிஷயம்.

இவர் நிர்வகித்த பொறுப்புள்ள பதவிகட்கு ஓர் எல்லையிடுவது அசாத்தியம். அவைகளை அடுக்கிக்கொண்டு போனாலே நீண்டபேர்ஜாபிதா வாகிவிடும். 1911-ல் சென்னை சட்டசபையில் அங்கத்தினர் பதவி; 1911-முதல் 1919-வரையில் சென்னை பச்சையப்பன் கலாசாலையின் டிரஸ்ட் போர்டில் நிர்வாக அங்கத்தினர் பதவி, 1919-ல் சென்னை சட்டசபையின் அங்கத்தினராகச் சென்னை சர்வகலா சாலையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டது; 1920-ல் மீண்டும் பொதுத் தேர்தலின் மூலம் சென்னை சட்டசபை 'மெம்பரா'தல்; 1920-ல் சென்னையின் தலைமை நியாயவாதி ('அட்வகேட் ஜெனரல்') ஆதல்; 1923 லிருந்து 1928 வரையில் சென்னைசர்க்காரின் சட்ட'மெம்பர்' பதவி; (அதாவது இரட்டையாட்சியின் கீழ் ஒதுக்கிய இலாகா ஒன்றின் 'மந்திரி') இந்தியசர்க்காரில் 1937-ல் சட்ட'மெம்பரா'தல்; 1932-ல் அதேசர்க்காரில் மீண்டும் ஓர் மந்திரி பதவி பெறல்—இம்முறை வர்த்தக இலாகாவின் 'மெம்பர்'—இம்மாதிரி இன்னும் ஜாப்தாவை வளர்த்திக் கொண்டே போகலாம்.

இத்துடன் இவர் பல கமிட்டிகளிலும் கூட்டங்களிலும் அங்கத்தினராக நியமிக்கப்பட்டு உழைத்திருக்கிறார். அவைகளுள் முக்கியமானதாக 1931-ல் இவர் சீமைக்கு வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றதைக் குறிப்பிடலாம். மைசூர் (1928-ல்), டெல்லி (1932-ல்), கல்கத்தா (1932-ல்), இக்கலாசாலைகளால் வேண்டப்பட்டு அவைகளின் சார்பில் பிரசங்கங்கள் நிகழ்த்தியிருக்கிறார்.

இந்திய சமஸ்தானங்களை யாண்டுவரும் சுதேச மன்னர்களிடம் இவருக்கு அபரிமிதமான செல்வாக்கு உண்டு. ஒரு சமயம் அவர்கள் இவர் சொன்னபடி ஆடினார்களென்றுகூட சொல்லப்பட்டது. சமஸ்தானாதிபதிகளின் தொடர்பு இவருக்கு முதன் முதலாக 1928-ல் ஏற்பட்டது. அவ் வருஷத்தில் இவர் கொச்சி சமஸ்தானத்தின் சார்பாக 'பட்லர்கமிட்டி' யின் முன் தோன்றினார். அதன் பின்பு இந்திய சமஷ்டிக்காக பல சமஸ்தானாதிபதிகளின் பிரதிநிதியென்னும் ஹோதாவில் வெகுவாக உழைத்திருக்கிறார். காச்மீர சமஸ்தானத்தின் தற்போதைய அரசியல் திட்டம் இவர் வகுத்ததே. திருவாங்கூர் சமஸ்தானத்தில் முதன் முதலில் சட்ட சம்பந்தமான விஷயங்களில் ஆலோசனையளிப்பவராக அமர்ந்து பின் 1936 முதல் அங்கு திவானாக விளங்கி வருகிறார். ஆலயப் பிரவேசத்தை யனுமதிக்கும் ஓர்

பிரகடனத்தை அங்கு வெளிப்படுத்திய தற்குக் காரணபூதரா யிருந்ததற்காக அம் மன்னரால் இவருக்கு 1936-ல் "சச்சி வோத்தமர்" என்னும் பட்டம் அளிக்கப் பட்டது.

இந்திய சர்க்காரே இவருக்கு 'ஸர்' முதலிய பட்டங்களை வழங்கியிருக்கின்ற னர். சென்னையில் இவர் சட்ட மெம்பர் பதவியிலிருந்ததன் ஓர் நிரந்தரப் பயனை நாம் இவர் முயற்சியின்பேரில் நிர்மாணிக் கப்பட்டிருக்கும் "மேட்டூர் அணை" "பைகாரா. மின்சார உற்பத்திசாலை" இவைபோன்ற மாகாண மக்களுக்குப் பெரிதும் உபயோகமளித்துவரும் சாத னங்களில் கண்டு மகிழ்கிறோம்.

இவருக்குப் பொழுதுபோக்கு சம்ஸ் கிருதம், பிரெஞ்சு, இவ்விரு மொழிகளி லுள்ள இலக்கியங்களை ஆராய்ந்து மகிழ் தலும், 'டென்னிஸ்' பந்து விளையாடுவ திலும், குதிரை சவாரி செய்தலுமாம். தேகப் பயிற்சிக்காக நடப்பதிலும் இவ ருக்கு வெகு பிரியம்.

மேற்கூறிய பதவிகளை இவர் ஒப்புக் கொண்டிருத்தலைப் பார்த்து இவர் அரசி யல் துறையில் மிதவாதியாய்க் கூடவில் லாத ஓர் பிற்போக்கான பேர்வழியோ என்று ஐயமுறுவோர்கட்குக் கடைசியாக ஒன்று சொல்லலாம். இவர் தீவிர அர சியல் வாதத்திலும் கலந்துகொண்டிருக் கிறார். பெஸன்டம்மையாரின் "ஹோம் ரூல்" இயக்கத்திலுள்ள இவருடைய சம்பந்தம் ஏற்கனவேயே குறிக்கப்பட் டது. அதைத் தவிர இவர் காங்கிரஸ் கக்ஷியிலும் ஓர் அங்கத்தினராக விருந்த காலமுமுண்டு. ஏன், 1917-18-அக்கக்ஷி யின் அகில இந்திய காரியதரிசியாய்க்கூட இவர் இருந்திருக்கிறார்!


## முன்னேற்றத்தில் முன்னணி!

பிணை
பாதுகாப்பு
துரிதமான பட்டுவாடா
முழு திருப்தி
ஆகியவைகளுக்கு

உங்கள் ஆயுளையும் மோட்டாரையும் வான்கார்டில் இன்ஷ்யூர் செய்யுங்கள்!

**தி வான்கார்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி**
**லிமிடெட்**
மவுண்ட் ரோட், சென்னை

போன்: 8558 தந்திவிலாசம்:— "வான்கார்ட்."




# புதுமாதிரியான ஆயுதம்

[பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்]

முன்னொரு காலத்தில் வைத்தியன் ஒருவன் இருந்தான். அவன் நோயாளிகளை நன்றாகக் கவனித்து, அவர்களோடு சிரித்துப் பிரியமாகப் பேசி, அவர்களை அன்பாக நடத்தி வைத்தியம் செய்து வந்தான். ஒரு நாள் அவன் காலை முதல் சாயங்காலம் வரையிலும் வைத்தியம் பார்த்துப் பார்த்து உடலும் மனமும் அலுத்துப் போயிருந்தான். அன்று, சற்றே பொழுதுபோக்காக, இராத்திரி நாடகம் பார்க்கப்போனான். முன்னாலேபோய், நல்ல இடமாகப் பார்த்து உட்கார்ந்துகொண்டான். நாடகம் நல்ல நாடகமாக இருந்தது. நடிப்பவர்களும் நன்றாக நடித்தார்கள். அதனால் அவன் கவனம் முழுவதும் நாடகத்தில் சென்றிருந்தது.

நாடகம் தொடங்கிக் கொஞ்ச நேரம் கழித்து நாடகம் பார்ப்பதற்காகப் பட்டாளத்துக்காரன் ஒருவனும் அவன் சிநேகிதனுமாக வந்தார்கள். உடம்பிலே ஜரிகைச் சட்டை, தலையிலே ஜரிகைத் தொப்பி, பக்கத்திலே பட்டாக்கத்தி, காலிலே கிறுக்கு ஜோடு. மீசையை ஜோராக முறுக்கிவிட்டுக்கொண்டு உள்ளே வந்து, ஒய்யாரமாக நாலுபக்கமும் பார்த்தார்கள்.

அப்பாவிபோல் வைத்தியர் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து 'ஏய்! எழுந்திரு! இடம் விடு' என்று அதிகாரம் பண்ணினான், பட்டாளத்துக்காரன். நாடகத்தைக் கவனித்துக்கொண்டிருந்த வைத்தியன் காதில் இது படவே இல்லை. அவன் நாடகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பட்டாளக்காரன் மறுபடியும் கோபமாக 'ஓய்! உன்னைத்தானே! எழுந்திரு இடம் விடு' என்று வைத்தியர் உட்கார்ந்திருந்த நாற்காலியைத் தட்டினான். கவனம் கலைந்த வைத்தியன் பட்டாளக்காரனையும், அவனுடைய வேஷத்தையும், அதிகார முறுக்கையும் ஏற இறங்க ஒரு தரம் பார்த்துவிட்டுப் புன்சிரிப்புடன் நாடகத்தை மறுபடியும் பார்க்கத் தொடங்கிவிட்டான்.

இதற்குள் வேறு சிலர் வந்து பட்டாளக்காரனுக்கு நல்ல இடத்தைக் காட்டவே அவனும் அவன் சினேகிதனுமாக அங்கேபோய் உட்கார்ந்துகொண்டார்கள். நாடகம் நடந்தது.

அந்தக் காலம் சண்டை அதிகமாக உள்ள காலம். எதற்கு எடுத்தாலும் சண்டைதான். சீட்டு ஆடினுல் சண்டை. சீட்டு ஆடாவிட்டால் சண்டை. 'என்னை விழித்துப் பார்த்தாய்' என்று சண்டை. 'என்னை அலக்ஷியம் பண்ணினுய்' என்று சண்டை. சண்டை என்ருல் வெறும் வாய்ச்சண்டை இல்லை. வெட்டுப்பழி குத்துப்பழிதான். கத்தியையோ, துப்பாக்கியையோ வைத்துக்கொண்டு சண்டைபோடுவார்கள். அடிக்கடி பலத்த காயம் ஏற்படும். சிற்சில வேளைகளில் ஆட்கள் செத்துப் போவதும் உண்டு. சண்டைக்குப் பின்வாங்கினுல் அது கேவலமாக நினைக்கப்பட்டது.

பட்டாளத்துக்காரனுக்கு வேறு இடம் அகப்பட்டாலும் அவனுடைய கோபம் தணியவில்லை. ஆகையால், அவன் வைத்தியனுக்கு ஒரு சீட்டுக்கொடுத்து அனுப்பினுன். 'நாளைக் காலமே அருணேதய வேளையில் கோவிலுக்குப் பின்புறமுள்ள மைதானத்தில் நம் இருவருக்கும் சண்டை நடக்கும்' என்று அதிலே கண்டிருந்தது.

மறுநாள் காலமே அருணேதய வேளையில் வைத்தியன் கோவில் மைதானத்துக்குப் போனுன். அங்கே பட்டாளத்துக்காரனும் அவனுடைய சிநேகிதனும் காத்துக்கொண்டிருந்தார்கள்.

வைத்தியனைக் கண்ட பட்டாளத்துக்காரன் 'சரி, நீ வந்தாய் விட்டது. கத்தியால் சண்டை போடுகிருயா? இதோ ஒரே அளவுள்ள கத்திகளாக இரண்டு பட்டாக் கத்திகள் கொண்டுவந்திருக்கிறேன். எது வேண்டுமோ அதை நீ எடுத்துக்கொள். நான் இன்னென்றை வைத்துக்கொள்ளுகிறேன்' என்ருன்.

வைத்தியன் வேண்டாம் என்பதுபோல் தலையை அசைத்தான்.

'ஓகோ! உனக்குத் துப்பாக்கியால்தான் சண்டை போடவேண்டுமென்ற எண்ணமா? சரி, சரி. அதற்கும் தயார். இதோ இரண்டு துப்பாக்கிகள்—' என்று தொடங்கினுன்.

வைத்தியன் மறுபடியும் தலையசைக்கவே அவன் சற்றே தயங்கினுன். அப்பொழுது வைத்தியன் 'நீ பட்டாளத்துக்காரன். சூரன். ஆகையினுல் முறைதப்பிச் சண்டைசெய்ய மாட்டாய், அல்லவா?' என்ருன்.

'ஆம், ஆம்' என்று சந்தோஷமாகத் தலை அசைத்தான் பட்டாளத்துக்காரன்.

'குழந்தைகளோடும், பெண்களோடும், கிழவர்களோடும் சண்டைசெய்ய மாட்டாய் அல்லவா?'

'மாட்டேன்'

'உனக்குச் சரியான உன் அந்தஸ்துக்கும் பலத்துக்கும் சரியான ஜதையோடு தானே சண்டைபோடுவாய்?'

'அதற்கென்ன சந்தேகம்?'

'எனக்குப் பட்டாக்கத்தி பழக்கமில்லை. துப்பாக்கியும் பழக்கமில்லை. உனக்கு இரண்டிலும் நல்ல பழக்கம். அதனுல் இவற்றை வைத்துக்கொண்டு சண்

டைபோட்டால் நிச்சயமாக பழக்கமுள்ள உனக்குத்தான் ஜயம் கிடைக்கும். அதனால் இது முறையில்லை. இரு, இரு, அவசரப்படாதே, நான் பயந்து ஓடிப்போகவில்லை.'

'பின்னே?'

'நாம் போடுகிற சண்டையில் நாம் இருவரும் சமமான நிலைமையில் இருந்துகொண்டு சண்டை போடவேண்டும். உயிரைப்பற்றி அக்கரை இல்லை. அதற்கு ஒரு வழி சொல்லுகிறேன். கேள்'

'என்ன?'

'இதோ இந்த டப்பியில் ஒன்று போல் செய்யப்பட்ட இரண்டு மாத்திரைகள் இருக்கின்றன. ஒரு மாத்திரை ஒன்றும் செய்யாது. இன்னொரு மாத்திரை கொடிய விஷம். வாயில்போட்ட மறு நிமிஷம் மரணம் நிச்சயம். எது விஷம்? எது நல்லது? என்று எனக்குக்கூடத் தெரியாது. நாம் இதில் ஆளுக்கு ஒன்றாகச் சாப்பிடுவோம். இதிலே உனக்கும் எனக்கும் வித்தியாசம் இல்லை. எதை வேண்டுமானாலும் நீ எடுத்துக்கொள். சாப்பிடு. இன்னொன்றை நான் தடைசொல்லாமல் விழுங்குகிறேன்' என்று நீட்டினான்.

பட்டாளத்துக்காரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. 'நல்ல யோசனை, நல்ல யோசனை. நீயும் சரி; நானும் சரி, துப்பாக்கி குறி தப்பினாலும் தப்பும். மருந்து தப்பாது. புதுமாதிரியான ஆயுதம்! பேஷ்! பேஷ்! ஒருவர் சாவது நிச்சயம். பலே! பலே!' என்று விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, 'ஆனால் சண்டை எதற்காக? எனக்கும் தான் நல்ல இடம் அகப்பட்டதே. போனது போகட்டும் சண்டை வேண்டாம். சாகவும் வேண்டாம். நீ என்ன சொல்லுகிறாய்?'

வைத்தியனும் சிரித்தான். எல்லாரும் சமாதானமாகச் சந்தோஷமாக வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

[ஆங்கிலக் கதையைத் தழுவி எழுதியது]

---

நோட்டீஸ்

மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

ரஜமன்னார் நாயுடு—வாதி

சக்கிரபாணி நாயுடு வகையறா—பிரதிவாதிகள்

இதில்

ஷை சக்கிரபாணி நாயுடு குமாரர் துரைராஜகிருஷ்ண நாயுடு 4.
ரமாமிருதய்யங்கார் குமாரர் ரஜகோபாலய்யங்கார் 7.
} பிரதிவாதிகள்

ஷை வாதி தெரிவித்துக் கொள்ளுகிறதாவது.

வாதியாக வியாஜ்ஜியம் செய்து அதில் ஷை 4, 7 பிரதிவாதிகளுக்கு சம்மன் சர்வாகாததால் ஒட்டி சர்வுசெய்ய மனுக்குடுத்து உத்திரவாகி 24-10-41ல் ஈரங்கி போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை இருந்தால் அன்று ஷை கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம் என்ற விபரம் அறியவும்.

மன்னார்குடி, 4-10-41 } ப. ரமச்சந்திர தீக்ஷிதர், வாதி அட்வகேட்.

ராயல் டாக்கீஸாரின்

# சாவித்திரி

ஷாந்தா ஆப்தே, M. S. சுப்புலக்ஷ்மி,
Y. V. ராவ், V. A. செல்லப்பா, K. சாரங்கபாணி,
T. S. துரைராஜ், சாரதாம்பாள், கிருஷ்ணவேணி
முதலியோர் நடித்தது

## சென்னை பிரபாத் டாக்கீஸில் 17-10-41 முதல் ஆரம்பம்

●

**7-வது வாரம் 16—10—41 முதல்**

சிந்தாமணி டாக்கீஸ் — மதுரை
வெல்லிங்டன் டாக்கீஸ் — திருச்சி
எடிசன் தியேட்டர் — கோயம்புத்தூர்

**6-வது வாரம் 18—10—41 முதல்**

வள்ளாளர் டாக்கீஸ் — மாயவரம்

**17—10—41 முதல் ஆரம்பம்**

ராதா பிக்சர் பாலேஸ் — கள்ளிக்கோட்டை

**19—10—41 முதல் ஆரம்பம்**

டைமண்ட் சினிமா — கும்பகோணம்
டவர் டாக்கீஸ் — தஞ்சாவூர்
ராஜா டாக்கீஸ் — திருவாரூர்
சம்பகா டாக்கீஸ் — மன்னார்குடி
கிருஷ்ணா டாக்கீஸ் — காரைக்குடி
ராயல் டாக்கீஸ் — திருநெல்வேலி
ராஜா டாக்கீஸ் — ராஜாபாளையம்

**25—10—41** முதல் சேலம் ராமலிங்கேஸ்வரா டாக்கீஸில் ஆரம்பம்

●

டைரெக்ஷன் : **Y. V. ராவ்**

ஸ்டுடியோ : **நியூ தியேட்டர்ஸ்**

ஒலிப்பதிவு : **அத்துல் சட்டர்ஜி**

பாடல்கள் : **பாபநாசம் சிவன்**

ஒளிப்பதிவு : **யூஸப் மூல்ஜி**

ஷாந்தா ஆப்தே, M. S. S. பாட்டுக்களை H. M. V. ரிகார்டுகளில் கேளுங்கள்.

# உதிர்ந்த மணிகள்

## அழிவுக்குக் காரணம்

[நாகப்பட்டினத்தில் ஸ்ரீ காஞ்சீ காம கோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள். உபன்னியாசத்தின் சாராம்சம்:]

நாம் ஜன்மா எடுத்ததற்கான நோக்கம் இன்னதென்பதை அறிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி நம்முடைய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். நம்முடைய சித்தத்திலிருக்கும் மலங்களை யெல்லாம் அலசவேண்டியதே ஒவ்வொவருடைய முக்கியமான கடமையர்கும். பாப மூட்டையை கட்டுவதற்கும் கட்டியிருக்கும் மூட்டைகளை அலசுவதற்கும் பொருத்தமான ஜன்மா இதுவே. மற்ற ஜன்மாக்களில் சேர்க்கப்பட்டு சித்தத்திலுள்ள மலங்களைப் போக்கி அதை ஈச்வரனுடைய வாசத்திற்கு யோக்கியமாகச் செய்யவேண்டும்.

நமதுகர சரணத்யவயங்களினல் செய்யும்படியான ஒவ்வொரு காரியத்தையும் ஈச்வரனுக்கு அர்ப்பணம்செய்யவேண்டும். அதாவது எந்தக் காரியத்தைச் செய்தாலும் இது நமது சித்தத்திலுள்ள மலங்களைப் போக்கி ஈச்வரனுடைய வாசத்திற்கு நமது ஹிருதயத்தைப் பொருத்தமாகச் செய்யுமாவென்று கவனிக்கவேண்டும். அப்படி கவனிக்க ஆரம்பித்தால் பாபமான காரியங்களைச் செய்வதற்கே அவகாசம் ஏற்படாது. நம்முடைய மனதை அடிக்கடி பரீக்ஷித்துக்கொண்டே யிருக்கவேண்டும். காம குரோத லோபமோஹாதி குணங்களை உத்பாதனம் செய்யக் கூடிய சந்தர்ப்பங்களில் மனதானது எப்படியிருக்கிறது, சாந்தியை அடைகிறதாவென்பதை கவனிக்கவேண்டும். இவ்விதம் சித்த சுத்தியை உண்டுபண்ணி ஈச்வரனுடைய வாசத்திற்கு ஹிருதயத்தை யோக்யமாக செய்வதற்கு பிரயத்தனப்படும் எந்த மதமும் நமக்கு ஸம்மதமே. இதையே தான் திரும்பத் திரும்ப நான் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். இதைத்தான் ஆத்மார்த்தமாக நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

* * *

நம்முடைய சமூகம் இவ்வளவு தாழ்ந்த நிலைக்கு வந்திருப்பதற்கு முக்ய காரணம் ஆங்கிலப் படிப்பே. அந்தப் படிப்பினல் சமூகத்திற்குப் பிரயோசனமில்லையென்று தெரிவதால் இனியாகிலும் அதில் மோஹத்தை யடையாமலிருந்தால் நலம். சொத்தையெல்லாம் விற்று அந்த படிப்பை படித்துவிட்டு நம்மை ஒன்றுக்கும் பிரயோசனமில்லாமல் செய்துகொண்டிருக்கிறோம். ஆங்கிலப் படிப்பை அப்யசித்து விட்டு பணம் சம்பாதிக்க ரங்கூன் முதலிய இடங்களுக்குப் போகவேண்டியிருக்கிறது. நமக்கு அவச்யமாகயிருக்கும் குடும்ப தர்மங்களுக்கு வேண்டிய தோடு திருப்தியடைந்து ஸ்வதர்மங்களைக் காப்பாற்றினல் மிகவும் நன்றாக யிருக்கும். பறையர்களையும் அவர்களுக்கு ஏதோ நன்மை செய்வதாகச் சொல்லி அவர்கள் பயிரிட்டு ஜீவனம் செய்து வருவதைக் கலைத்து அவர்களுக்கும் இந்த உபயோகமற்ற படிப்பில் ஊக்கத்தை உண்டுபண்ணி வருவதால் அவர்களும் கூடிய சீக்கிரத்தில் திண்டாட்டத்தை அடையவேண்டி வரும்.

* * *

பிறகு ஸ்வாமிகளவர்கள் ஸ்திரீகளை உத்தேசித்து சில வார்த்தைகள் சொன்னர்கள். வயிற்றுப்பிழைப்பை உத்தேசித்து புருஷர்கள் ஆங்கிலப் படிப்பில் ஈடுபட்டு திண்டாடுவது போதாதென்று, ஸ்திரீகளும் அந்தப் படிப்பில் பட்டங்கள் பெறுவதற்கு ஆசைப்படுவது மிகவும் வருந்தத்தக்கதென்றும், அவர்கள் இவ்விதம் விபரீதப் படிப்பில் ஈடுபடுவதால் குடும்ப தர்மங்கள் சீர்குலைந்து போவதாகவும் குடும்பதர்மங்களுக்கும் பக்தி மார்க்கத்திற்கு முறித்தான படிப்பில் ஈடுபடுவதே முக்கியமான நோக்கமாக யிருக்க வேண்டுமென்றும் குடும்பங்களில் தர்மரக்ஷணம்

ஸ்திரீகள் கையில்தான் இருப்பதாகவும் ஸ்திரீகள் ஆங்கிலப் படிப்பில் தேர்ச்சி யடைந்து அதற்கு சரியான புருஷர்கள் கிடைக்காமல் திண்டாட்டம் ஏற்படுவதாக வும் ஸ்திரீகளும் அதர்மமான வழிகளில் போக ஆரம்பித்துவிட்டால் தர்மத்திற்குப் பிறகு கதியே இல்லாமல் போய்விடுமென் றும் குடும்பத்தில் அனுவச்யமான செலவு கள் செய்யாமல் குடும்பத்தை கிரமமாக நடத்த வேண்டுமென்றும் காப்பியை பானம் செய்வதாலும் உயர்ந்த வஸ்திரங் களில் ஆசைமிகுதியினாலும் குடும்பத்தில் ஏராளமான பணம் செலவாகி வருகிற தென்றும் அவைகளை யெல்லாம் தள்ளி குடும்பம் தர்மமாகவும் செழிப்பாகவும் இருக்கும்படி செய்ய ஒவ்வொருவரும் முயலவேண்டும் என்றும் சொன்னார்கள்.

## மேல் நாட்டு நாகரீகம்

மேல்நாட்டு நாகரீகம் எதை நல்லது என்று கூறுகிறதோ அதைத்தான் இந்தி யன் எடுத்துக்கொள்கிறான். சீதை பொன் மானுக்கு ஆசைப்பட்டதுபோல இந்தி யன்மேல் நாட்டு நாகரீக அழகுக்கு ஆசைப் படுகிறான். "ஆ! முகம் எவ்வளவு அழ காயும், பொலிவுடனும் இருக்கிறது!" "பொன்மான் இறந்தாலும் பரவாயில்லை, அது எனக்குக்கிடைக்கவேண்டும்" என்று அம் மாயப் பொன்மான்மீது சீதை தன் இருதயத்தைப் பறிகொடுத்ததுபோல மேல்நாட்டு நாகரீகத்தின் மாய அழகுக்கு இந்தியன் தன் அழகைப் பறிகொடுத்து விட்டான். அதை இறந்துவிட்டதாகவே கருதி, அடைவதற்கு பிரயத்னப்பட்டா லும், நாம் அடையப்போவது ஓர் பெரிய ராட்சஸப் பிணந்தான். இன்று இந்திய சமூகத்தின் திங்கு, நம் நாட்டு படித்த ஞானிகள் இந் நாகரீகத்தைப்பற்றிக் கேட்கவொட்டாதபடி இருக்கிறது. மேல் நாட்டு நாகரீகத்தின்மேல் அபிமானமட்டும் வைத்துக்கொண்டு, அந் நாகரீகத்தின் அடிப்படையான தத்துவத்தை சீர் தூக்க முடியாது.. இந்திய சமூகத்தின் சீர் கேட்டை நிவர்த்திசெய்ய ஏதாவதொன்று செய்ய வேண்டும்.

—மஸ்தி வேங்கடேச அய்யங்கார்.

## நோட்டீஸ்

### மன்னார்குடி டி. மு. கோர்ட்டு

1940ஞ S. C. No. 63

கந்தஸாமிப் பத்தர்—வாதி, மனுதாரர்

1. நூர்தீன் சாயபு-(died after 2nd E.P.)
—Defendant

2. ஆஷாபீவியம்மாள் 1. } deceased
3. ஜெயினுபீவியம்மாள் 2. } defend-
4. மைனர் வஹாப் 3. } ants &
5. மைனர் கதிசாபீவி 4. } Respondants.

2 to 5 பிரதிவாதிகள்

ஷை நம்பரில் மைனர் 4, 5 பிரதிவாதி களுக்கு மன்னார்குடி 3-ம் தெருவிலிருக்கும் வக்கீல் Sri B. S. ராமச்சந்திர அய்யர் அவர் கள், M.A., B.L., Court Guardian.

இதனால் தெரிவிப்பது என்னவென்றால்:- ஷை நெம்பரில் இறந்துபோன பிரதி வாதி நூர்தீன் சாயபுவுக்கு றெஸ்பாண் டெண்டுகளை வார்சுகளாகவும் முறையே 2 முதல் 5 பிரதிவாதிகளாகவும் ஒத்துக் கொள்ளவேணுமாயும், டிக்கிரியை நிறை வேற்ற வேணுமாயும், வாதி மனுதாரரால் மனுக்கள் கொடுக்கப்பட்டு 3-ம் பிரதிவா திக்கு 4 தடவைகளில் நோட்டீசுகள் போயும் சர்வு செய்து கொள்ளாமல் தலை மறைவாயிருந்து வருவதால் ஷை 3-ம் பிரதிவாதிக்கு பிறப்பிக்கும் நோட்டீசுகளை substituted service செய்ய மனுக் கொடுத்து substituted service செய்ய ஆர்டராகி 25-10-41ல் ஈரங்கி போடப்பட் டிருக்கிற விபரம் இதின்மூலம் அறிவித் திருக்கிறேன்.

**V. K. Rajagopala Iyengar,**
Pleader for Plaintiff.

மன்னார்குடி,
7-10-41

# புத்தக விமர்சனம்

**டால்ஸ்டாய் சிறு கதைகள்:** [முதற் புத்தகம்; இரண்டாம் புத்தகம்; ஒவ்வொன்று விலை ரூ. 1. மொழிபெயர்ப்பாசிரியர்கள்: கு. ப. ராஜகோபாலன், ரா. விசுவநாதன்; சக்தி பிரசுராலயம், மதராஸ்.] லியோ டால்ஸ்டாய் ஓர் ரஷ்ய தேசத்து மஹான். சமூகத்தொண்டுக்காகவும் தேச சேவைக்காகவுமே, தன்னை பகவான் சிருஷ்டித்திருக்கிறார் என்று எண்ணி சிறிதும் சுயநலப் பற்றற்று பாடுபட்டு வந்த உலக புனித புருஷர்களுள் இவர் ஒருவர். இவர் இயற்றிய நூல்களில் ஒன்றாவது மானிட வாழ்க்கையைத் தூய்மைப் படுத்தும் தன்மையையுடைய, நற்போதனையையுடையதாக இல்லாமல் இராது. மனிதர்களுடைய துர்புத்திகளை நீக்கி, அவர்களுக்கு நல்வழி புகட்டும், இவருடைய நூல்கள் உலகத்தில் சிறந்ததென்று கருதப்பட்டுவரும் இலக்கியங்களின் பத்தியில் இடம் பெற்றிருப்பது இவருடைய அரிய இலக்கியத்திறனையே காட்டுகிறது. இவ்வளவு உயர்ந்த சரக்கை தமிழ் மக்களுக்குக் கொடுக்கப் பாடுபட்ட சக்தி பிரசுராலயத்தாருக்கு, தமிழ் மக்கள் மிக்க கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கூறுவது மிகையாகாது. மொழிபெயர்ப்பு அழகாக இருக்கிறது. மூலத்தின் சுவை குன்றாது மொழி பெயர்த்திருப்பது பாராட்டத் தக்கது.

**Slave of Ideas and other plays**
[By A. S. Panchapikesa Ayyar, M.A. I. C. S.; C. Cumaraswami Naidu & Sons, 27, Chinnathambi Street, Madras. Rs. 1-8-0.]

நமது சமூகத்தில் வலுத்து நிற்கும் சிலக் கட்டுத் திட்டங்களைப் பற்றியும், அவற்றால் சமூகத்துக்குண்டாகும் கெடுதிகளைப்பற்றியும், அவற்றைத் தகர்த்தெறிய, இந்த நாளில் தோன்றிக்கொண்டிருக்கும் புதிய புதிய தத்துவங்களைப் பற்றியும் வெகு தெளிவாக உயர்ந்த கற்பனா சக்தியுடன், ஆசிரியர் நான்கு நாடகங்கள் எழுதி இருக்கிறார். நாடகங்கள் ஒவ்வொன்றும் ரஸமானவைகள். "படித்துப் பாருங்கள்" என்று சிபார்சு செய்யத் தகுந்த மதிப்புடைய புத்தகம் இது.

**இந்தியனது மேனாட்டு அனுபவம்:** [ஆசிரியர் ஏ. எஸ். பஞ்சாபி கேச அய்யர், ஐ. ஸி. எஸ். மொழி பெயர்ப்புப் பதிப்பு ஜி. வி. கே. ஸ்வாமி அண்டு கோ. கும்பகோணம் விலை ரூ 4.] நமது நாட்டில் பிரயாண நூல்கள் உற்பத்தி வெகு குறைவு என்பதை எடுத்துக் கூறவேண்டியதில்லை. இதற்கு முதற் காரணம் நம்மிடத்தில் வெளி நாடுகளுக்குப் பிரயாணம் செய்ய வேண்டும், அங்கிருக்கும் அதிசயங்களைக் கண்டு ஆனந்திக்கவேண்டும் என்கிற அவா வெகு சிலருக்கே தோன்றுகிறது. அப்படியும் வெளி நாடுகளில் பிரயாணம் செய்துவிட்டு வந்தவர்களில் கொஞ்சம் பேர்களே தான் தங்கள் அனுபவத்தை உள்ளது உள்ளபடி புத்தகம் மூலமாக எழுதி பொது மக்களுக்குத் தெரிவிக்கிறார்கள். இங்நிலையில் "நான் என் அனுபவத்தை இந்த புத்தகத்தில் உங்களுக்கு எளிதில் விளங்கும்படி குறித்திருக்கிறேன்" என்று ஸ்ரீ. ஏ. எஸ். பி. ஐயர் கூறுகிறார். இப்புத்தகத்தில் எவ்வளவு அரிய விஷயங்கள் இருக்கின்றன என்பதை இங்கு விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொருவரும் படிக்கத் தகுந்த புத்தகம் என்று சொன்னால் மட்டும் போதும்.